

RAHMATH RAJAKUMARAN

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ


1, இஸ்லாம் ஓர் ஈர்க்கும் மார்க்கம்

2, அவன் அருளாளன் நல்ல அன்பாளன்

நினைவுக் களஞ்சியம் நூலில் எனது கட்டுரை

(Book page no 323)

ஹகாஇகுஸ் ஸஃபா (பரமார்த்த தெளிவு)



பரமார்த்தத் தெளிவு என்ற இந்த புத்தகத்தை எனக்கு நண்பர் வைத்தியர் மாலிக் **Vaitiyar Malick** அவர்கள் அனுப்பி வைத்து இதற்கு கருத்துரை எழுதி தரச் சொன்னார்கள்.

புத்தக வடிவில் மிகச் சிறிய புத்தகமாக இருந்தாலும் இதனுள் புதைந்திருக்கும் ஆன்மீக சிந்தனைகளும் அதன் போதனைகளும் மிகப் பெரிய பிரளயத்தை என்னுள் ஏற்படுத்திவிட்டது. ஆமாம் அணு கூட கண்ணுக்குத் தெரியாத மிகச் சிறியது. ஆனால் அதனுள் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் சக்தி கணக்கிட முடியாது. இந்த புத்தகமும் அணுவைக் காட்டிலும் அளப்பரிய ஞானப் பொக்கிஷமாக திகழ்கிறது.

மற்ற புத்தகங்கள் மாதிரி இதனைப் படித்து கருத்துரை கூறுவதில் மிகப்பெரிய சிரமம் உள்ளது என்பதை இதன் ஒவ்வொரு பக்கங்களும் எனக்கு உணர்த்திக் கொண்டே இருந்தது.

எனவே இதை முழுமையாக படிப்பதற்கு காலம் எடுத்துக் கொண்டு ஒவ்வொரு விஷயத்தையும் உள்வாங்கி உள்வாங்கி படித்தேன் அவ்வாறு நான் படிக்கும்போது ஏற்கனவே நான் படித்து தெரிதிருந்த வஹ்தததுல் வுஜூதின் விளக்கம் இன்னுமொரு அகமியப் பார்வையை என்னுள் தந்தது.

இந்த புத்தகத்தில் நான் படித்த விஷயங்களை நான் ஏற்கனவே தெரிந்து வைத்திருந்த வஹ்தததுல் உஜூதுடன் தொடர்புபடுத்தி என் கருத்துரையை எழுதியுள்ளேன்.

அவ்வலுத்தீனி மஃரிபதுல்லாஹ் - இஸ்லாத்தில் முதல் கடமை இறைவனை அறிவதே எனவும் தன்னை அறிந்தவன் தன் தலைவனை (இறைவனை) அறிந்தவன் ஆவான் என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இவ்வுலகில் தோன்றிய மனிதனின் அமானிதக் கடமையான இறைவனை அறியும் மெய்ஞ்ஞானத்தை மக்களுக்கு தெளிவு படுத்தினார்கள்.

எந்ததொரு உண்மையையும் அதை பரிபூரணமாக அறிந்தவர்களே அதனை மற்றவர்களுக்கு போதிக்க முடியும் என்பதே உண்மை

அல்லாஹ்வையறியும் தூய மெய்ஞ்ஞானமான இறைஞானத்தை ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தொடர்ந்து எந்த ஒரு மாற்றமும் இல்லாமல் இவ்வுலக மக்களுக்கு எத்தி வைப்பவர்கள் இறைநேசர்களான வலிமார்களும் குத்புமார்களுமே ஆவார்கள். அவர்களால் மட்டுமே இது சாத்தியமாகும்

இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தங்களுடைய இஹ்யா உலூமுத்தீனில் 'ஆகிறா'ஆகிய மறுமையின் இல்மு (அறிவு)களுடைய பாடத்தில் முந்திய பங்காகிறது. 'முகாஷபா'லின் (ஞான வெளிப்பாட்டின்) இல்மாக (அறிவாக) இருக்கும் என்று எழுதியிருக்கிறார்கள். மேலும் எந்த மனிதனுக்கு இந்த இல்மில் (அறிவில்) நின்றும் நஸீபு (பாக்கியம்) என்னும் விதி ஏற்படவில்லையோ அத்தகையோன் மீது ஸூவுல் காத்திமா என்னும் கேடான முடிவு உண்டாதலைப் பற்றி நான் அஞ்சுகிறேன்."

(விளக்கம்: ஞான அறிவைப் பெற்றுக் கொள்ளும் பாக்கியம் எவருக்கு ஏற்படவில்லையோ அவரின் முடிவு கேடானதாகவிருக்கும்)

பூஅலி சீனாவின் போதனை அளிக்கும் ஒரு செய்தி :

பூஅலி சீனா(ரஹ்) உலகில் சிறந்த வைத்திய மேதை; தத்துவ சாஸ்திரத்தில் பெரிய நிபுணர் மார்க்கக் கலைகளிலும் தேர்ச்சியுடையவர்.

ஆனால், அவர் ஆத்ம ஞான அனுஷ்டானத்தின் பக்கம் கவனந்திருப்பவில்லை. அவருடைய மரணத் தருவாயில் அவர் நண்பர்களில் சிலர் அவரிடம் நற்போதனை புரியுமாறு வேண்டினர்.

பூஅலி சீனா அழுத வண்ணமாக, "நண்பர்களே, என் நெஞ்சிலிருந்த கலைகள் அத்தனையும் இத்தருணம் ஒன்றுமில்லாமல் வெளியேறிவிட்டன. இவ்வண்ணம் சம்பவிக்குமென முன்னமேயே அறிந்திருப்பேனேயாகில் அக்கலைகளை யான் (வீணில்) கற்றிருக்கமாட்டேன்.

"மன் அரப" (தன்னை அறிதல்) என்னும் ஆத்ம ஞானம் எனக்கில்லை. ஆகையால் பூஅலி பேதையாகச் செல்கிறான்" என்று கூறி வருந்தினார்.

இதனால் வெளிக் கல்விகளான கலைகளை எவ்வளவுதான் கடல் போன்று கற்றாலும் ஆத்ம ஞான மென்னும் கிந்தீல் தீபத்தை ஒஸீலாவாகிய ஒரு காமில் ஆன காரண குருவைக் கொண்டு தெரிந்து, அனுஷ்டித்து வராதவர்களெல்லாம் மேற்சொன்ன படி முடிவு காலத்தில் அல்லாஹ்வின் ஜமாலியத்தான மணிவிளக்கைக் கண்டுகொள்ளாத நிர்ப்பாக்கியஸ்தர்களாய் கைசேதமடைந்து அழிய நேரிடும். இது மறுக்க முடியாத உண்மை.

இதைப்பற்றி பெருமக்களாகிய மகான்களெல்லாம் தங்களுடைய ஞான நிலைக் கண்ணாடிகளில் எவ்வளவோ மேற்கோளாக வழிகாட்டிக் கொண்டு போகிறார்கள்.

செய்குல் அக்பர் முஹிய்யுத்தீன் இப்னு அரபி (ரலி) அவர்கள்:

"மனிதனோவன்றி உலகமோ ஹக்குடைய இல்மு என்னும் அறிவில் நின்றும் தோன்றி அனுபவங்களையும் பெற்றதும் தத்தம் "ஐன்" ஆகிய சுயம் அல்லது அகமியத்தின்பால் மீண்டு விடுகின்றது.

அதாவது ஒரே உள்ளமை பொருள் தனது அறிவிலே கணக்கற்ற வகையில் “கஸ்ரத்" என்னும் பலவற்றை பிரதிபலிக்கச் செய்த போதிலும் அந்த அறிவு தான் தானாகவே இருக்கின்றது.

தோன்றுதலடைந்த இத்தாதி வஸ்துக்கள் அனுபவங்கள் பெற்றுக் கொண்டவுடன் தங்கள் அகமியத்தின்பால் மீண்டு விடுகின்ற தன்மையிலிருக்கும் எல்லாம் அவனையாம் (ஹமவோஸ்த்)

இமாம் பக்ருதீன் ராஜி (ரஹ்) அவர்களுக்கு ஹஜரத் இப்னு அரபி (ரஹ்) யின் நிரூபம்:

ஹஜரத் ஷைகு முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் "தப்ஸீரே கபிரி எழுதிய ஹஜரத் இமாம் பக்ரூத்தீன் ராஜி (ரஹ்) அவர்களுக்கு நிரூபம் ஒன்று எழுதி அனுப்பினார்கள்.

அதில் இமாம் அவர்களின் வெளிரங்கமான கல்வித் திறமையை ஆமோதித்துவிட்டு அவர்களுக்குச் சில உபதேச மொழிகளை அருளியுள்ளார்கள்.

அது வருமாறு:

"என் அன்புள்ள சகோதரரே, யாதாமொரு ஞானிகள் நாயகத்தின் சபையில் கலந்திருந்து ஷரீஅத்தின் உட்கருத்தை விளங்கிக் கொள்வீர்களாகில் அது உங்களை விரைவிலேயே "ஷுஹதே ஹக்" என்ற இறைவன் தரிசனையை அடையும் பதவி வரையில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும். அந்தத் தரிசனையைக் கொண்டு உங்களுக்கு ஆண்டவன் புறமாக அகமிய ஞானக்கல்வி அருளப்படும்.

அறிவின் துணையால் அடையப்பெறும் கல்விக்கும், இந்த அகமிய மெஞ்ஞானச் சுடருக்கும் எவ்விதச் சம்பந்தமும் கிடையாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஏனெனில், ஆராய்ச்சி என்பது அறிவின் மாயா விநோதங்களின் மறுபெயர்தான். இதற்கும், மெய்ஞ்ஞான உண்மைக் கல்விக்கும் எவ்விதத் தொடர்புமில்லை.

பூரண அகமியத்தை அருளக் கூடிய, மரணத்துக்குப்பின் உங்களோடு இருக்கக் கூடிய ஞானஜோதியை நீங்கள் அடையப்பெறுவது அத்தியாவசியமாகும். ஞான ஜோதியானது அல்லாஹுத் தஆலாவின் புறத்தால் காட்சியாகவும். கொடையாகவும் அருளப்படும் கல்வி என்பதை உணர்வீர்களாக!

இத்தகைய உயர்கல்வியைத் தவிர்த்துள்ள சகல கல்விகளும், அவற்றின் பலாபலன்களும் மனிதனின் இவ்வுலக வாழ்க்கை சம்பந்தப்பட்டவரை மட்டுமே பயன்படுவனவாய் இருக்கின்றன. மரணத்துக்குப்பின் அவற்றால் எந்தப் பயனும் விளையாது. இதனால் அழிந்து போகக்கூடிய இவ்வுலகத்தை விட்டுக் கடந்தேகிய பின்னரே, தங்கள் உள்ளமையுடன் தொடர்ந்து வரக்கூடிய மெஞ்ஞான ஜோதியைப் பெறுவதற்கு முயற்சிப்பதே அறிவாவிகளின் கடமையாகும்.

அவ்விதக் கல்விகள் இரண்டே இருக்கின்றன. ஒன்று. "மஃரிபத்தே இலாஹி" அல்லாஹுத்தஆலாவை அறிதல் என்னும் மெய்ஞ்ஞானம். மற்றொன்று, மறுமையின் கல்வி (ஆத்மீக உலகத்தின் தெளிவு). ஆகையால், இவ்வுலக வாழ்க்கையில் இவ்விரண்டே கல்விகளைத் திட்டமாய்த் தெளிந்தறிவதில் கருத்துக் காட்டவேண்டியது உங்கள்மீது கடமையாகும். இதைக் கொண்டு மறுமையில் உங்களுக்குப் பயன் கிடைக்கும்.

இம்மை சம்பந்தப்பட்ட மற்றக் கல்விகளில் வாழ்க்கைக்கு முக்கியமாக அவசியமான (தேவையுள்ள) அளவு மட்டும் சன்மார்க்க வழியில் உதவியளிக்கத் தக்க அளவுக்கு மட்டும்கூடக் கற்றால் போதும்.

மேலே குறிப்பிட்ட இரண்டு விதக் கல்விகளையும் பெறுவதற்கு, தனித்திருத்தல் -"நன்னடத்தையில் அப்பியாசம் செய்தல்" - "அகமியக் காட்சி பெறுதல்" "ஆண்டவன் பேரில் மோகம் மேலிட்டு, அவன் பக்கம் அகமியத்தில் இழுக்கப்பட்டு, தெய்வ குணங்களின் பேரில் நிலைத்திருக்கச் செய்யும் வல்லபம்" ஆகிய அம்சங்களும் அவசிய மாகும்.

"என் அன்பரே. ஷரீஅத்தின் உட் கருத்தையும், ரகசியத்தையும் விளங்கிக் கொள்ளாமல் வெறும் வெளிப்படையான பதவுரைப் பூஜை செய்யவர்களும், வாய்விவாதம், பொறாமை, புறம்பேசுதல், இவைகளையே தங்கள் நடப்பாகக் கொண்டிருப்பவர்களும், ஞான நாதர்களை ஏசிப்பேசுவதில் பெருமையடித்துக் கொண்டிருப்பவர்களும், உண்மை யதார்த்தத்தை அறியாமல் அதை நிகாகரிப்பவர்களும் என்னுடைய வார்த்தைகளைக் கேட்டு விளக்கமுற மாட்டார்கள்.

அன்பரே, ஞான நாதர்களாகிய கண்ணிய மிக்க மகான்களை நிராகரிக்காமல் இருப்பது உங்கள் கடமையாகும். இவர்கள் திருகுர்ஆனையும், உண்மையான ஹதீதுகளையும், வெளிப்படையான கட்டளைகளை விட்டும் மாற்றி விவரிப்பதாக ஒருபோதும் எண்ணவேண்டாம்! ஏனெனில், ஷரீஅத்தின் வெளிப் பொருளை மாற்றுவது "குப்ராய்" (நிராகரிப்பதாய்) இருக்கும்.

படித்தரங்கள் :-

படிகள் நிலைகள் உதாரணங்கள்

முதலாம் படி ... அஹதிய்யத்து .... கடல்

இரண்டாம் படி ... வஹ்தத்து.... கடல் அலை

மூன்றாம் படி ... வாஹிதிய்யத்து. நீர் ... நீர்க்குமிழ்

1.அஹதிய்யத்தின் பயான் (உதாரணம்: கடல்)

நீ நாடுவாயாகில் ஞானச் சுடர் உனக்குக் கிட்டும். முன் கூறிய மூன்று மர்த்தபாக்களும் ஹக்குடைய மர்த்தபாக்களால் இருக்கும் என்று உணர்ந்துகொள்!

குறிப்பும்.பேரும், பிரிவும் அற்ற, ஆராய்ச்சியைக்கொண்டு அறியப்படாத. 'நீ என்றும் 'அவன்' என்றும் "அஹக்" என்றும், "சமத்" என்றும் சொல்லொணாத, அது இன்னதுதான் என்று அறிந்து கொள்ள முடியாத. தான் தானாகிய அமதில்யத் தென்னும் சூஸ்திரமாய் இருக்கும். தாத்து தன்னை மறந்த நிலையாய் இருக்கும். இது ஹக்குடைய உள்ளமை. இதற்கு 'கன்ஜுல் மக்பி' என்று பெயர்.

2. வஹதத்தின் பயான் (உதாரணம்: கடல் அலை)

இது தாத்தின் உணர்வு நிலை. அமதியத்துக்கப்பால் உள்ளது வதைத்தென்ற முதல் குறிப்பு என்று உணர்ந்துகொள். இதிலே சகல அகமியங்களும் வெளியாயின. தன்னைத் தான் அறியும் உணர்வு உண்டாயிற்று; தானே ஆதி என்றும் அந்தமென்றும்

ரகசியமென்றும் பராசியமென்றும் கூறப்பட்ட தெளிவு உண்டாயிற்று. இந்த நிலை மர்த்தபத்துல் ஹக்கீகத்துல் முஹம்மதியா என்றும், ஹக்கீகத்துல் ஹக்காவில் என்றும் கூறப்படும். இது முஹம்மது (என்) அவர்களின் உள்ளமையாய் இருக்கும்.

இன்னும், இந்த மர்த்தபாலில் ஆண்டவன் முதலாவதாக நிர்த்தது அந்த முஹம்மதியாலாகிய நுரே "அல்லதஆலா படைத்ததில் முந்தினது என் ஒளி" என்று ரசூல் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். வித்தில் மரம் அடங்கி இருப்பதுபோல் சகல படைப்புக்களும் இந்த மர்த்தமாயில் அடங்கியுள்ளன.

3. வாஹிதிய்யத்து (உதாரணம்: நீர்- தீர்க்குமிழ்)

இது அஹதியத் என்னும் குறிப்பற்ற தரத்தின் இரண்டாங் குறிப்பு. மூன்றாம் மர்த்தபா என்று உணர்ந்துகொள்!

முன்பு மொத்தப் பொருளாயும் மறை பொருளாயும் இருந்தவை இந்த மர்த்தபாவில் விபரமுள்ள விரிப் பொருள்களாய் வெளியாவின. இந்த மூன்று மர்த்தபாக்களும் சொல்லளவில் மூன்றாய் இருப்பினும் உண்மையில் ஒன்றென்றே உணர்க. இம்மூன்று மர்த்தபாக்களும் முச்சுடர் என்று கூறப்படும்.

இது ஆதமுடைய உள்ளமையாய் இருக்கும். இதற்கு மர்த்தபத்துல் வாஹிதிய்யா என்றும், ஹக்கீகத்துள் இன்சானியா என்றும் சொல்லப்படும். இந்த மர்த்தபாவில்தான் தாத்து தன்னுடைய வல்லமையையும் தத்துவத்தையும் உணர்ந்து சிருஷ்டிக்கும் நாட்டம் உண்டானதாக "குன்" என்ற கட்டளையை வெளியாக்கிற்று, இம் மூன்று மர்த்தபாக்களும் ரப்பைச் சேர்ந்தவை. (ரப்பாய் இருக்கும்.) இது பூர்வீகம், அனாதி, இதற்கு வரையரை கிடையாது.

இவ்விடத்தில், "வஹதத் பில் கஸரத்" - "கஸரத் பில் வஹதத்" என்பதன் விவரங் கூறுவது அவசியமாகும். வஹதத் பில் கஸரத் என்னும் பலவில் ஒன்று என்பது ஊண், குடிப்பு, நடை, இருப்பு எல்லா ஹாலிலும் கல்பைப் பலவாறான ஊசாட்டங்களற்று ஒரே நிலையில் நாட்டம் என்னும் ஆசையில் மூழ்கி இருக்கும் நிலை. இதுவே களரியிலே தனிமை என்று சொல்லப்படும்.

"எல்லாருங் கூடி இருக்கும் களரியிலே

வல்லானைக் கண்டு மகிழ்திருப்ப தென்னாளோ?"

கஸரத் பில் வஹதத் என்னும் ஒன்றில் பல ஆவது மேற்கூறிய ஓர்மையில் நிலைத்திருப்பதுடன், பலவின் அந்தஸ்துக்களுக்கு ஏற்ற தன்மைகளுக்கு மதிப்பளிப்பது.

இதனை "பனா" வென்னும் இல்லாமைக்குப்பின் "பகா" வென்னும் உள்ளமை நிலையை எத்திக்கொண்ட "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற முதல் மர்த்தபாவும், "முஹம்மதுர் ரசூலுல்லாஹ்" என்ற இரண்டாம் மர்த்தபாவும் சேர்மானமாகிய ஏக உள்ளமையில் பனாவாகித் தெளிவு

பெற்ற ஸஹ்வு நிலை என்று தெளிவுற்ற பாரவான்கள் உணர்த்தியுள்ளார்கள். உண்மையில் இவ்விரண்டு மர்த்தபாக்களும் ஒன்றில் ஒன்று நிலைபட்டவையாய் இருக்கும்.

இந்த புத்தகம் கைக்குள் அடக்கமாக இருந்தாலும் இதன் ஞான விளக்கங்களும், உள்ளத் தெளிவுகளும் நம் கற்பனைக்கு எட்டாத உயரத்தில் இருக்கிறது என்பதை நீங்களே உணர்ந்து கொள்வீர்கள்.

ரஹ்மத் ராஜகுமாரன்

+919360181033

இஸ்லாம் ஓர் ஈர்க்கும் மார்க்கம் 20



(நெதர்லாந்து அரசியல்வாதி அர்னாடு வேன்டூன் (Arnoud van doorn)

"இன்னோசன்ஸ் ஆஃப் முஸ்லிம்ஸ்' - முஸ்லிம்கள் அவ்வளவு எளிதில் மறக்க முடியாத திரைப்படம். கடந்த 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் உலகை உலுக்கி எடுத்த திரைப்படம். உயிருக்கு உயிராக உயிரினும் மேலாக முஸ்லிம்கள் மதித்து போற்றிடும் இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களை தவறாக சித்தரித்து எடுக்கப்பட்ட திரைப்படமே 'இன்னோசன்ஸ் ஆஃப் முஸ்லிம்ஸ்'.

அப்படத்தினால் இஸ்லாமிய உலகம் கொந்தளித்தது.முஸ்லிம் உலகில் ஏற்பட்ட எதிர்ப்பலையில் 75க்கும் மேற்பட்டோர் பலியாயினர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவும், சிறுபான்மையாகவும் வாழும் நாடுகளில் நடந்த உணர்ச்சி மிக்க போராட்டங்கள். அதே சமயம் முஸ்லிமல்லாதவர்களை இஸ்லாத்தை நோக்கி திரும்பிப் பார்க்கவும் வைத்தன.

நெதர்லாந்து நாட்டில் செயல்படும் கட்சி 'தீவிர வலதுசாரி இஸ்லாமிய எதிர்ப்பு சுதந்திர கட்சி' (Geert Wilders's far right-wing anti-Islam Freedom Party). அண்ணல் நபி (ஸல்) அவர்களை இழிவாக சித்தரித்து திரைப்படம் எடுப்பது, கார்ட்டூன் வரைவது ஆகியன

இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் எதிர்ப்பதை இலட்சியமாக கொண்டு நெதர்லாந்தில் செயல்பட்டு வரும் இக்கட்சியும் இத்தகைய திரைப்படம் ஒன்றினை டச்சு மொழியில் தயாரித்தது.

இஸ்லாத்தின் மீது இத்துணை காழ்ப்புணர்வுடன் செயல்பட்டு வரும் இக் கட்சியின் சார்பில் நெதர்லாந்து பாராளுமன்றத்தில் உறுப்பினராகவும், அந்நாட்டின் முக்கிய நகரங்களில் ஒன்றான ஹாக்(Hague) மாநகராட்சியில் கவுன்சிலராகவும் பதவி வகித்தவர் அர்னாடு வேன்டூன் (Arnoud van doorn)

அர்னாடு தமது வாழ்நாளின் பெரும்பகுதியை இஸ்லாத்தை எதிர்ப்பதில் தான் கழித்திருந்தார். இந்நிலையில், கடந்த 2012 ஆம் ஆண்டு ஆண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்களை இழிவாக சித்தரித்து தயாரிக்கப்பட்ட "இன்னோசன்ஸ் ஆஃப் முஸ்லிம்ஸ்' வெளிவந்தது.

அப்படத்திற்கெதிராக திரைப்படம் வெளி உலகம் முழுவதும் முஸ்லிம்கள் கொந்தளித்தார்கள். பல இடங்களில் போராட்டங்கள் நடந்தன. இப்போராட்டங்கள் அர்னாடை சிந்திக்க வைத்தன ஒருவர் இறந்து பல்லாண்டுகள் கழிந்த பின்னரும் அவர் மீது இத்துனை மில்லியன் மக்கள் மரியாதை வைத்துள்ளார்களா?

அவர் எவ்வளவு மரியாதைக்குரியவராக இருக்க வேண்டும்? அவர் போதித்த மார்க்கம் எவ்வளவு உயர்ந்த கொள்கையாக இருக்க வேண்டும்? இத்துணை மகத்தான மனிதரையா நாம் பகைத்து வாழ்ந்தோம்.? அவரையா இழிவாக சித்தரித்து திரைப்படம் தயாரித்த கட்சியிலா நாம் இருக்கிறோம்.? பல நாட்கள் சிந்தித்தார். விளைவு கட்சியை விட்டு ஒதுங்கினார். பின்னர் வில்கினார்.

தொடர்ந்து இஸ்லாத்தை ஆய்வு செய்தார்.அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அதிகமதிகம் படித்தார். முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களையும், பண்பாடுகளையும் தெரிந்து கொள்ள தன்னுடன் ஹாக் மாநகராட்சியில் பணியாற்றிய சக முஸ்லிம் உறுப்பினர்களிடம் பழகினார்.

பின்னர் ஒரு முடிவுக்கு வந்தார். இனியும் தாமதிப்பதில், யோசிப்பதில் அர்த்தமில்லை என்று. ஹாக் நகரில் உள்ள 'மஸ்ஜிதுஸ்சுன்னா' இறையில்லத்துக்குச் சென்றார். அப்பள்ளிவாசல் இமாம் 'ஃபவாஸ் ஜூனைத்' அவர்களின் கரம்பிடித்து இஸ்லாத்தை ஏற்றார். இதற்கு முன்னர் இதே 'ஃபவாஸ் ஜூனைத்' அவர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கு அவரது கட்சி பெரிய அளவில் வேலை செய்தது நினைவு கூறத்தக்கது.

நான் ஏன் முஸ்லிம் ஆனேன்?

கடந்த 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி 27ஆம் தேதி தமது ட்விட்டர் வலைதளத்தில் ஷஹாதத் கலிமாவை பதிவு செய்து, இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதாக வெளியுலகுக்கு அறிவித்தார் அர்னாடு. தாம் இஸ்லாத்தை ஏற்றது குறித்து வலைப்பக்கத்தில் அவர் கூறியதாவது;

"நான் எனது வாழ்க்கையில் பல தவறுகளை செய்துள்ளேன். அத்தவறுகள் எனக்கு பல பாடங்களை தந்துள்ளன. இஸ்லாத்தை எதிர்த்தே வாழ்நாளின் பெரும்பகுதியை கழித்தேன்.ஆனால் இஸ்லாம்தான் எனக்கு நிம்மதியை தந்துள்ளது. இஸ்லாத்தை ஏற்ற பின்பே உண்மையான வழி எனக்கு கிடைத்தது.

இப்போது நான் நம்புகிறேன். இப்புதிய தொடக்கம் எனக்கு நல்ல விதமாகவே அமையும். அத்துடன் எனது இம்முடிவு கூட பலத்த எதிர்ப்பை எதிர் கொள்ளலாம். நிச்சயமாக அல்லாஹ்வின் எல்லா வகையான உதவிகளும் எனக்கு கிடைக்கும். எல்லாவற்றையும் வெற்றி கரமாக சமாளிப்பேன் இன்ஷா அல்லாஹ்.."

இவ்வாறு ட்விட்டரில் கருத்து தெரிவித்திருந்த அவர் கடந்த (2013 ஆம் ஆண்டு) ஏப்ரல் 20 ஆம் தேதி மதீனா வந்தார். மஸ்ஜிதுன் நபவீ பள்ளிவாசலுக்கு வந்த அவர். தொழுகைக்கு பின்பு அண்ணல் நபி (ஸல்) அவர்களை புனித ரவ்ளாவில் ஸியாரத் செய்தார்.

அண்ணலாரின் ரவ்ளாவில் நிற்கும் பொழுது கடந்த காலத்தில் அண்ணல் நபி (ஸல்) ஐ திட்டியது, அவர்களை தவறாக சித்தரித்து எடுக்கப்பட்ட படத்திற்கு உதவியது போன்ற தமது தவறுகளை நினைத்து தேம்பித் தேம்பி அழுதார் அர்னாடு. (இதை சவூதியின் பிரபல 'உக்காள்' அரபி நாளிதழ் இதனை புகைப்படத்துடன் வெளியிட்டிருந்தது.)

'மஸ்ஜிதுன் நபவீ இன் இமாம்களான ஷெய்கு சலாகுல் புதைர், ஷெய்கு அலீ அல்ஹுதைஃபீ ஆகியோரை சந்தித்த அவர், 'உக்காள்' அரபி நாளிதழுக்கு பேட்டியளித்தார்.

அவரது பேட்டி பின்வருமாறு:"கடந்த காலத்தில் இஸ்லாத்தை கடுமையாக எதிர்த்த கட்சியில் பணியாற்றினேன். எனது உள்ளத்திலும் இஸ்லாத்திற்கு எதிரான பகைமை உணர்வே மேலோங்கி நின்றது. 'இன்னோசன்ஸ் ஆஃப் முஸ்லிம்ஸ்' திரைப்படத்திற் கெதிராக உலகெங்கும் நடந்த போராட்டங்கள் என்னுள் பல வினாக்களை எழுப்பின. அவை இஸ்லாம், முஸ்லிம்கள் தங்களின் மார்க்கம் மற்றும் இறைத்தூதரின் மீது வைத்திருக்கும் மரியாதை ஆகியவை குறித்த கேள்விகளாகும்.

விடை தேடினேன். சிந்தித்தேன். இஸ்லாம் குறித்து படிக்கத் தொடங்கினேன். படிப்பதில் நான் நுனிப்புல் மேயவில்லை. இறுக்கமான இதயத்துடனும் படிக்கவில்லை. மாறாக அகன்ற நெஞ்சுடனும், தெளிவான சிந்தனையுடனும் ஆழமாக இஸ்லாத்தைப் படித்தேன்.

முஸ்லிம்களை வெறுப்புணர்வுடன் பார்த்து வந்த நான் அவர்களுடன் நெருங்கிப் பழகத் தொடங்கினேன். எனது இதயத்தை அல்லாஹ் திறந்தான். இஸ்லாத்தை ஏற்றேன். அல்லாஹ் நிறைவானவன். இஸ்லாத்தை ஏற்ற பின்பு உம்ரா செய்ய முடிவு செய்தேன். எனினும் உம்ராவுக்கு முன்பு மதீனா வந்து அண்ணல் நபி (ஸல்) அவர்களை ஸியாரத் செய்ய முடிவு செய்தேன்.

ஏனெனில், கடந்த காலத்தில் நான் அவர்களை அதிகமதிகம் அவதூறாக பேசியுள்ளேன். (இதைக் கூறிய போது அர்னாடு தேம்பித் தேம்பி அழுதார்.) இப்பொழுது நான் இஸ்லாத்தை ஏற்றதற்கும் நபி(ஸல்) அவர்களே காரணம்.

உம்ராவை முடித்த பின்பு மீண்டும் மதீனா வருவேன். என்றாலும் மதீனா நகரை பிரிவது மிகவும் கடினம்தான். இன்ஷா அல்லாஹ் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் குறித்த உன்னத தகவல்களுடன் ஒரு சிறந்த படமொன்றை இயக்கி, அதன் மூலம் மேற்கத்திய நாடுகளில் இஸ்லாம் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொள்வேன்."

அன்று பிற்பகலில் உம்ரா செய்ய மக்கா நகருக்கு சென்ற அர்னாடு, அங்கு புனித மஸ்ஜிதுல் ஹராம் இன் தலைமை இமாம் அப்துர் ரஹ்மான் சுதைஸி அவர்களை சந்தித்து அறியாமைக் காலத்தில் தான் தவறு செய்து விட்ட தாகவும், அதற்கு பரிகாரமாக தனது வாழ்நாள் முழுவதும், இஸ்லாமியப் பிரச்சாரத்தில் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்தார்.

அவருக்குத் திருக்குர்ஆனை பரிசாகத் தந்த சுதைஸி, இனி வரும் வாழ்நாளை திருக்குர்ஆனின் வழியில் அமைத்துக் கொள்ளுமாறு கூறினார்.

Source: உக்காள் அரபி நாளிதழ் (சவூதி)

தாருல் அக்பார் அரபி நாளிதழ் (சவூதி)

அஹ்ராம் அரபி நாளிதழ் (எகிப்து)

ஹுர்ரிய்யத் ஆங்கில நாளிதழ் (துருக்கி)

அர்னாடு - ட்விட்டர் வலைப்பக்கம்

இஸ்லாம் ஓர் ஈர்க்கும் மார்க்கம் 21

(பிரெஞ்சு ராப் இசைப் பாடகி டியாம்ஸ்)



திரைத்துறையைச் சார்ந்தவர்கள் இஸ்லாத்தை ஏற்பது சமீப காலமாக சர்வதேச அளவில் அதிகரித்துள்ளது. நடிகர்கள், நடிகைகள், பாடகர்கள், பாடகிகள், இசைக் கலைஞர்கள் என திரைப்படத்துறையில் பல்வேறு பணிகளை தொழிலாக கொண்ட பலர் இஸ்லாத்தை வாழ்க்கை நெறி யாக ஏற்றிடும் நிகழ்வுகள் உலகம் முழுவதும் எல்லா நாடுகளிலும் அரங்கேறி வருகிறது.

பிரபல பாப் பாடகர் மைக்கேல் ஜாக்சன், அவரின் சகோதரியும் பாப் பாடகியுமான ஜானட் ஜாக்சன் (Janet Jackson), நேபாள நடிகை பூஜா லாமா (Pooja Lama), பிலிப் பைன்ஸ் நடிகை குயினி பாடில்லா (Queenie Padilla) அமெரிக்க நடிகை சாரா புக்கர் (Sora Booker) ஆகியோர் அவர்களில் முக்கியமானவர்கள்.

பொதுவாக திரைப்படத்துறை, வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு பச்சை பசுமையாக தெரிந்தாலும் உண்மையில் மன அழுத்தங்களும், வெளியில் சொல்ல இயலாத மர்மங்களும் நிறைந்த துறையாகும்.

அதிலும் நட்சத்திர அந்தஸ்தை அடைந்தவர்கள் குறிப்பாக நடிகைகளின் நிலைமை நிர்ப்பந்தங்களால் பின்னப்பட்ட பரிதாபமானது. பணமும், புகழும் கிடைத்தாலும், நிம்மதியான வாழ்க்கை அவர்களில் பலருக்கு கானல் நீர் தான்.

இதனால் தான் மன அழுத்தங்களில் சிக்கித் தற்கொலை செய்வோரும், அவ்வாறே மது மற்றும் போதை மருந்து பழக்கங்களில் தம்மை அழித்துக் கொள்வோரும் அவர்களில் காணப்படுகின்றனர். அவர்களுக்கு அமைதி மார்க்கமான இஸ்லாத்தின் ஒளிக்கீற்று கிடைத்ததெனில், பணம் நட்சத்திரப் புகழ் இவற்றையெல்லாம் கூட உதறித் தள்ளி விட்டு இஸ்லாத்தை இறுக அணைத்துக் கொள்வார்கள்.

அதன் வழியில் ஏற்படும் எதிர்ப்புகளையும், மீடியாக்களின் அவதூறுகளையும் துச்சமென தூக்கியெறிவார்கள். நிகழ்கால உலகில் இதற்கு சிறந்த உதாரணம் பிரான்ஸ் ராப் (Rap) இசைப் பாடகி டியாம்ஸ் (Diam's).

இவரது இயற்பெயர் மெலனி ஜார்ஜியேடஸ் Mélanie Georgiades) (பிறப்பு ஜூலை 30, 1980) 'டியாம்ஸ்' என்பது இசைத் துறைக்காக வைத்துக் கொண்ட புனைப் பெயர்.

கிரீஸ் ஆதிக்கத்திலுள்ள சைப்ரசை பூர்வீகமாக கொண்ட இவரது குடும்பம் 1984 ல் பிரான்சில் உள்ள ஈசோனி (Essonne) மாநிலத்தில் குடியேறியது. 19ஆம் வயதில் இசைத் துறையில் சாதிக்கத் தொடங்கிய டியாம்ஸ், ராப் பாடல்களில் பிரான்ஸ் நாடு முழுவதும் பிரபலமானார்.

2006ல் வெளியான இவரது 'டான்ஸ் மா புல்லே' (Dans Ma Bulle) ராப் இசை ஆல்பம் 10 இலட்சம் பிரதிகள் விற்றுத் தீர்ந்தது. இதனால் புகழின் உச்சிக்கு சென்ற அவருக்கு அதே ஆண்டில், MTV நெட்வொர்க் குழு மத்தினால் வழங்கப்படும் எம்.டி.வி.ஐரோப்பிய மியூசிக் விருது' (MTV Europe Music Awards) வழங்கப்பட்டது. இதனால் டியாம்சின் செல்வாக்கு மேலும் அதிகரித்தது. பிரான்சுக்கு அப்பாலும் இலட்சக்கணக்கான இரசிகர்கள் டியாம்சுக்கு கிடைத்தார்கள்.

மன அழுத்தத்தில் விழுந்த டியாம்ஸ்

நட்சத்திரப் புகழை அடைந்தாலும், திரைத்துறைக்கே உரித்தான அழுத்தங்களும், நெருக்கடிகளும் டியாம்சை வாட்டி வதைத்தன. பெண்ணாக இருந்ததால் அது இன்னும் அதிகமாக இருந்தது.

இசை நிகழ்ச்சிகளின் மூலம் மக்களை மகிழ்ச்சியில் திளைக்கச் செய்த அவர், நிகழ்ச்சிக்கு பின்பு தனிமையில் அதிகமதிகம் அழவே செய்தார். மன அழுத்தங்களில் விழுவோர் அதிலிருந்து தங்களை ஆசுவாசப்படுத்திட போதை மருந்துகளை உபயோகிப்பதுண்டு.

டியாம்ஸ் மதுவையும், போதை மருந்துகளையும் நாடிச் சென்றார். அது அவரது வாழ்க்கையை இன்னும் உருக்குலைத்தது.முழு மன நோயாளியாகவே மாறிப் போனார். திறமையான மன நல நிபுணர்கள் பலரிடம் சிகிச்சைக்காக நண்பர்களால் அழைத்துச் செல்லப்பட்டும் மனநல பாதிப்பில் இருந்து அவரால் மீண்டு வர இயலவில்லை.

வீட்டில் முடங்கிக் கிடந்த டியாம்சை காண வந்தார் அவரது முஸ்லிம் தோழி ஒருவர். டியாம்சின பரிதாப நிலையைக் கண்ட அவர் டியாம்ஸின் அறையில் தொழுது, அவர் குணமடைய பிரார்த்தனை செய்தார். தோழியின் பின்னால் நின்று டியாம்சும் தொழுதார்.

முழங்காலிட்டு நெற்றியை தரையில் வைத்து சுஜுது செய்யும் பொழுது மிகப் பெரிய அளவில் மனம் நிம்மதி அடைவதை டியாம்ஸ் உணர்ந்தார். தொடர்ந்து இஸ்லாத்தைப் படித்தார். விளைவு 2008 ஆம் ஆண்டு டியாம்ஸ் இஸ்லாத்தை ஏற்றார்.

இஸ்லாத்தை ஏற்றதை வெளியுலகுக்கு அறிவிப்பதை தவிர்த்த அவர், அதுவரை ஒப்புக் கொண்ட இசை நிகழ்ச்சிகளை முடித்துக் கொடுத்தார். இஸ்லாத்தை ஏற்ற பின்பு ஆரம்பத்தில், தலை மற்றும் உடலை முழுமை யாக மறைக்கும் முழு ஆடையை அணிந்து வந்த டியாம்ஸ், 2012 ஆம் ஆண்டு முதல் கருப்பு புர்கா அணியத் தொடங்கினார்.

டியாம்சுக்கு எதிராக மீடியாக்களின் யுத்தம்

டியாம்ஸ் இஸ்லாத்தை ஏற்றது குறித்த தகவல் மீடியாக்களுக்கு மத்தியில் பரவத் தொடங்கியது. மீடியாக்களால் இரகசியமாக கண்காணிக்கப்பட்ட அவர், பள்ளி வாசல் ஒன்றில் இருந்து கருப்பு புர்கா அணிந்து வந்த போது புகைப் படமெடுக்கப்பட்டார். அப்புகைப்படம் இணைய தளத்தில் பரப்பப்பட்டது.

டியாம்சுக்கு எதிராக மீடியாக்களில் அனல் பறக்கும் விவாதங்கள் நடந்தன. 'ரெடிமேட் தீர்ப்புகள்' தருவதற்கு அவற்றுக்கு மத்தியில் கடும் போட்டியே நிலவியது எனலாம்.

என்னவெல்லாம் கூறி விமர்சிக்க முடியுமோ அத்தனையும் கூறி விமர்சிக்கப்பட்டார் டியாம்ஸ். அனைத்தையும் பொறுமையுடன் சமாளித்த அவர், தொலைக்காட்சி நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றின் மூலம் அனைத்து விமர்சனங்களுக்கும் பதில் தந்தார்.

நான் ஏன் முஸ்லிம் ஆனேன்?

பிரான்ஸ் நாட்டின் பிரபல தொலைக்காட்சியான T1 டி.வி. 2000 ஆம் ஆண்டு மே மாதம் முதல் 'செப்ட் எ எய்ட் (sept à Huit) என்ற பெயரில் 'தொலைக்காட்சி செய்தித் 'தொடர்' ஒன்றை நடத்தி வந்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இரவு 6.45 முதல் 7.45 மணி வரை ஒரு மணி நேரம் நடத்தப்படும் 'செய்தி நேர்காணல்' நிகழ்ச்சியில், சர்ச்சைகளுக்கு புற்றுப்புள்ளி வைக்கும் விதமாக 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் தேதி கருப்பு பூக்கா அணிந்து டியாம்ஸ் பங்கேற்றார்

புர்கா அடிமைத்தனத்தின் அடையாளமா?

தொலைக்காட்சி நேர்காணலுக்கு கருப்பு புர்கா அணிந்து வந்திருந்த டியாம்ஸை அங்கு வீற்றிருந்த பத்திரிக்கையாளர்களுக்கு அதனை ஜீரணிக்கவே முடிய வில்லை. ஏனெனில், பிரான்ஸ் நாடு முஸ்லிம் பெண்கள் அணியும் புர்காவுக்கு எதிராக போர் முரசு கொட்டிய நாடு. 2004 ம் ஆண்டு ஜூன் மாதம் அந்நாட்டு அதிபர் நிக்கோலஸ் சர்கோசி இப்படிச் சொன்னார். "புர்கா மத அடையாளம் அல்ல..அது அடிமைத் தனத்தின் அடையாளம். பிரெஞ்சு குடியரசின் எல்லைக்குள் அதனை வரவேற்க இயலாது.

(The burqa is not a sign of religion, it is a sign of subservience... It will not be welcome on the territory of the French republic)."

புர்கா மீது இத்துணை வெறுப்பு உமிழப்பட்ட அந்நாட்டில் தான் புர்கா அணிந்து தொலைக்காட்சியில் தோன்றினார் டியாம்ஸ். நேர்காணலில் அவர் அணிந்திருந்த புர்காவை மையமாக வைத்தே பல கேள்விகள் கேட்கப்பட்டன. டியாம்ஸ் இப்படி பதில் தந்தார்.

"பிரான்ஸ் நாடு சுதந்திரத்தை ஊக்குவிக்கும் நாடு.நான் சகிப்புத் தன்மையுள்ள ஒரு சமூகத்தில் வாழ்வதாகவே நினைக்கிறேன். இந்நாடு சுதந்திரத்தை கட்டிக் காக்கும் நாடாக இருக்கும் வரை புர்கா அணிவேன். ஊடகங்களின் விமர்சனங்களையும், ரெடிமேட் தீர்ப்புகளையும் பொருட்படுத்தமாட்டேன்.

இங்கே தொகுப்பாளர் கேட்டதைப் போன்று அதனை அணியச் சொல்லி யாரும் என்னைக் கட்டாயப்படுத்தவில்லை. விரும்பித்தான் அதனை அணிகிறேன். இது எனக்கு அடிமைத்தனமாகத் தோன்றவில்லை. ஆரம்பத்தில் நான் புர்கா அணியவில்லை தான். ஆனால் இஸ்லாத்தைப் படிக்கப் படிக்க அதன் மாண்பினை அறிந்தேன். புர்காவை விரும்பி அணிந்து வருகிறேன் ".

நான் சாக வேண்டுமா?

" நான் இஸ்லாத்தை ஏற்றது குறித்து இங்கே எதிர்ப்பு தெரிவிக்கப் படுகின்றது. நான் கேட்கிறேன். பிரிட்டனின் பிரபல பெண் பாடகி 'எமி வைன் ஹவுஸ்' (Amy Winehouse 1983-2011)ஜப் போன்று என் வாழ்க்கையை முடித்துக் கொள்ள வேண்டுமா? ஐந்து கிராமிய விருதுகளைப் பெற்ற அவர், மன அழுத்தத்தில் வீழ்ந்து, மது, போதை மருந்து பழக்கம் மற்றும் கெட்ட பழக்கங்களுக்கு அடிமையானார். இதனால் தமது 27ஆம் வயதில் தன்னை மாய்த்துக் கொண்டார்.

அவரைப் போன்று மன அழுத்தத்தில் இருந்து மீளாமல் நான் அழிந்து போக வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்களா?" ஆதங்கப்பட்டார் டியாம்ஸ்.

ரசிகர்களை தவறாக வழிநடத்துகிறேனா?

எனது இரசிகர்களை தவறாக வழிநடத்துகிறேன் என்று விமர்சிக்கப்படுகிறது. நிகழ்ச்சிகளில் நான் ஆடிப்பாடி மகிழ்ச்சியாக இருந்தது தான் என் ரசிகர்களுக்குத் தெரியும். தனிமையில் நான் அழுது புலம்பியது அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இளைஞர்களுக்கு அபாயகரமான வழியை நான் காட்டி விட்டதாக சிலர் என்னை நோக்கி கை நீட்டுகிறார்கள். நான் கேட்கிறேன். ஒரு பெண் அமைதியை நாடி நல்ல மனிதனாக மாறுவதும், குடும்ப வாழ்க்கையை தேர்வு செய்வதும் அபாயகரமானதா ? இது நம்பும்படியாக

இருக்கிறதா?

இசையை விட்டு முழுமையாக விலகிய டியாம்ஸ், ஆப்பிரிக்காவில் மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டு வருகிறார். அல்லாஹ் அவரை பொருந்திக் கொள்வானாக..

Source: Diam's, autobiographie by Diam's Morocco World News

இஸ்லாம் ஓர் ஈர்க்கும் மார்க்கம் 22

(குவாண்டனாமா சிறைக் காவலர் டெர்ரி ஹால்ட் புரூக்ஸ்)



Journey To Islam – Terry Holdbrooks @ Al-Farooq ATL

9/11 அமெரிக்க இரட்டை கோபுர தாக்குதல் நிகழ்வு நடந்தவுடன் 'தீவிரவாதத்திற்கெதிரான போர்' என்று கொக்கரித்தார் ஜார்ஜ் புஷ். பொய்க் கதைகள் கூறி, ஆப்கானிஸ்தான் மீதும், ஈராக் மீதும் போர் தொடுத்தார். இலட்சக்கணக்கானோரை கொலை செய்தார். ஆப்கானிஸ்தானில் இருந்தும், ஈராக்கில் இருந்தும் 'போர்க் கைதிகள்' என்ற பெயரில் ஏராளமான அப்பாவிகள் வேட்டையாடப்பட்டனர்.

பிரிட்டன், ஆஸ்திரேலியா மட்டுமல்ல..பாகிஸ்தானும் கூட தனது குடிமக்களை அமெரிக்காவிடம் ஒப்படைத்து தனது செஞ்சோற்றுக் கடனை தீர்த்தது.

இவ்வாறு பிடிபட்ட அப்பாவிகள் அனைவரையும் சித்ரவதை செய்திட அமெரிக்கா உருவாக்கி வைத்திருந்த சிறைக் கூடம் தான் கியூபாவில் உள்ள 'குவாண்டனாமா' சிறைச்சாலை. 'நாகரிக உலகின் நரகம்' என்று மனித உரிமை ஆர்வலர்களால் வர்ணிக்கப்பட்ட அச்சிறைச்சாலையில், முஸ்லிம் கைதிகளுக்கு எதிராக அடிமைக் காலத்தை நினைவு படுத்திடும் சித்ரவகைகள் அரங்கேற்றப்பட்டன.

டெர்ரி ஹால்ட் புரூக்ஸ்

நாகரிக உலகின் நரகமான இச்சிறைச்சாலைக்கு காவலர் (guard) பணிக்கு சென்றவர் அமெரிக்காவைச் சேர்ந்த டெர்ரி ஹால்ட்புரூக்ஸ் (Terry Holdbrooks- பிறப்பு ஜூலை 7 - 1983). அமெரிக்காவில் உள்ள அரிசோனா மாநிலத்தில் உள்ள போனிக்ஸ் (Phoenix) நகரத்தில் பிறந்த இவர். பெற்றோருக்கு ஒரே பிள்ளை. இவருக்கு ஏழு வயதான பொழுது பெற்றோர் விவாகரத்துப் பெற்று பிரிந்தனர்.

தாத்தா - பாட்டியின் பராமரிப்பில் வளர்ந்த இவர், பெற்றோர் அரவணைப்புக்கு அதிகம் ஏங்கினார். வறுமையும், தனிமையும் சிறுவயதிலேயே இவரை பாதித்தன. இதனால் விரக்தியுற்று, இறை நம்பிக்கையற்ற நாத்திகனாக மாறிப்போனார். ஏனைய அமெரிக்க இளைஞர்களைப் போல மதுவுக்கு அடிமையானார். ராக் இசைப் பிரியரானார். பின் 2001-ல் பட்டப் படிப்பை முடித்து அமெரிக்க ராணுவத்தில் சேர்ந்தார். குவாண்டனாமா சிறைக்காவலராக பணியமர்த்தப்பட்டார்.

குவாண்டனாமா சிறையில் முஸ்லிம்களுக்கு நடந்த கொடுமையைப் பற்றி இந்த கட்டுரையில் விவரித்தால் கம்மினூட்டி ஸ்டான்ட்ர்டை மீறியதாக என் பதிவுகள் தடை செய்யப்பட்டலாம். குவாண்டனாமா கொடூரம் பற்றி கூகுளில் தேடிப் பெற்றுக்கொள்ளவும்

காவலர் பணிக்கான பயிற்சி இரண்டு வார காலம் அவருக்குத் தரப்பட்டது. பயிற்சியின் போது 9/11 தாக்குதலில், இரட்டைக் கோபுரம் சரிந்த வீடியோ அடிக்கடி காட்டப்பட்டது..

பயிற்சிக்குப் பிறகு பணியில் சேர்ந்தார் டெர்ரி. கைதிகளை கண்காணித்தல், விசாரணை அறைகளுக்கு அவர்களை அழைத்துச் செல்லுதல், சிறைகளைச் சுத்தமாக வைத்திருத்தல், குப்பை பொறுக்குதல் ஆகியன டெர்ரிக்கு தரப்பட்ட பணிகள். சிறை நிர்வாகம் தந்த இப்பணிகளை செவ்வனே செய்தார் டெர்ரி. இந்நிலையில், பணியின் போது முஸ்லிம் கைதிகளுக்கு இழைக்கப்பட்ட சித்ரவதைகளை பலமுறை நேரில் அவர் காண நேர்ந்தது.

அவ்வளவு சித்ரவதைகளுக்கு பின்பும் அவர்கள் கண்ணியமான பண்பாளர்களாக இருப்பதைப் பார்த்து அவருக்கு ஆச்சரியம் மேலிட்டது.! அதே நேரத்தில் தனது சக பணியாளர்களின் கெட்ட நடத்தைகளையும் உற்று நோக்கினார்.

குடித்து கும்மாளமிடுதல், ஆபாசமாகப் பேசுதல், பாலியல் விபச்சாரிகளுடன் கூத்தாடுதல், போதைப் பொருள் உபயோகித்தல் போன்ற அவர்களின் செயல்பாடுகளைப் பார்த்தார். தீய நடத்தைகளுடன் வாழும் இவர்கள் எங்கே? அனைத்து துன்பங்களை அனுபவித்தும் நற்பண்பாளர்களாக வாழும் அக்கைதிகள் எங்கே? கொடுமைப்படுத்தும் இக்காவலர்கள் எங்கே? தம்மை அடித்து துன்புறுத்தும் அமெரிக்கர்களிடமும் மதநல்லிணக்கத்துடன் நடக்கும் அம்மாண்பாளர்கள் எங்கே? யோசித்தார். விடை தேடினார்.முடிவில் அக்கைதிகளிடமே கேட்டு விட வேண்டியது தான் என்று முடிவு செய்தார்.

கைதிகளின் அறைக்குச் சென்று அவர்களிடம் கேட்டார். இஸ்லாம் தான் அதற்கு காரணம் என்றனர் அவர்கள். இத்துனை காலம் 'தீவிரவாத மதம்' என்று நம்பியிருந்த அந்த இஸ்லாமா? வியப்பு மேலிட்டது அவருக்கு. நம்பவே முடியவில்லை அவரால்.

தொடர்ந்து இரவு வேளைகளில் சக காவலர்களுக்கு தெரியாமல் கைதிகளின் அறைகளுக்குச் சென்று இஸ்லாம் தொடர்பான தனது சந்தேகங்களை கேட்டு தெளிவு பெற்றார்.

என்னுடன் உரையாடியவர்களில் முக்கியமானவர்கள் 'திப்டன் திரி (Tipton Three) என்று பிரபலமான இங்கிலாந்து நாட்டின் 'சேன்ட்வெல்' (Sandwell) மாவட்டத்திலுள்ள 'திப்துன்' எனும் ஊரைச் சேர்ந்த மூன்று முஸ்லிம் இளைஞர்கள். ருஹல் அஹ்மது, ஆசிஃப் இக்பால், ஷஃபீக் ரசூல் எனும் பெயர்கள் கொண்ட அவர்கள் மூவரும் நண்பர்கள். இங்கிலாந்தில் வசித்த அவர்கள் ஆப்கானிஸ்தானில் பிடிபட்டதாகக் கூறி குவாண்டனாமா சிறையில் அடைக்கப்பட்டனர். இரண்டு ஆண்டுகள் கழித்து 2004 ல் போதிய ஆதாரமில்லாததால் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலைக்குப் பிறகு குவாண்டனாமா சிறையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து மீடியாக் களுக்கு அவர்கள் அளித்த பேட்டி, அமெரிக்காவுக்கு எதிராக இங்கிலாந்தில் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியது.

பிரபல இங்கிலாந்து திரைப்படத் தயாரிப்பாளர் 'மிஷெல் வின்டர் பூட்டம்' (Michael Winterbottom) இம்மூவர் கைது செய்யப்பட்டதில் உள்ள மர்மங்கள் தொடர்பாக 'தி ரோடு டூ

குவாண்டனாமா' (The Road to Guantánamo) எனும் திரைப்படத்தைத் தயாரித்து 2006 ல் வெளியிட்டார். அது அமெரிக்காவின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தியது.

இம்மூவரிடமும் பேசினேன். அடுத்து என்னுடன் உரையாடியவர்களில் முக்கியமானவர் பிரிட்டன்வாழ் மொராக்கோ நாட்டவரான அஹ்மத் ராஷிதி என்பவர். 18 ஆண்டுகள் சமையல்காரராக பிரிட்டனில் வேலை பார்த்த அவர், அல்காயிதா முகாமில் பயிற்சி பெற்றதாகக் கூறி குவாண்டனாமா சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். (இவரும் போதிய ஆதாரமில்லாததால் விடுவிக்கப்பட்டார்)

பின்னர் இவர்களுடன் பல நாட்கள், பல மணி நேரங்கள் பேசியுள்ளேன். புத்தகங்கள், மியூசிக், தத்துவம் என எல்லாவற்றையும் விவாதித்துள்ளேன். சில சமயங்களில் இஸ்லாம் பற்றிய எங்களின் பேச்சு இரவு முழுவதும் நீடித்துள்ளது. இது ஆறு மாத காலம் நீடித்தது. கடைசியில் இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாக ஏற்க முடிவு செய்தேன். அல்லாஹ்வின்

மகத்தான அருளால் அந்நிகழ்வு நடந்தேறவே செய்தது. 2003 ஆம் ஆண்டு டிசம்பர் 23 ஆம் தேதி நள்ளிரவில் அஹ்மத் ராஷிதி இன் முன்னிலையில் ஷஹாதத் கலிமா கூறி இஸ்லாத்தை ஏற்றேன், குவாண்டனாமா சிறைக் காவலர் வேலையை ராஜினாமா செய்தேன்.

'முஸ்தஃபா அப்துல்லாஹ்' எனும் அழகிய பெயரில் வாழும் இவ்வாலிபர் அமெரிக்காவில் இஸ்லாமியப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார். தலையில் கருப்புத் தொப்பி, அடர்த்தியான தாடி, கழுத்தில் இருந்து கரண்டைக்கால் வரையிலான நீண்ட பாரம்பரிய அங்கி என இஸ்லாமிய கலாச்சாரத்தில் பற்றுடன் வாழும் இவ்வாலிபர், தமது குவாண்டனாமா நினைவுக் குறிப்புகளை தொகுத்து 'ட்ரைட்டர்' (Traitor?) எனும் நூலை வெளியிட்டுள்ளார். இவரை அல்லாஹ் திருப்தி படுவானாக!

Source: Traitor? by Terry Holdbrooks

Inside the Wire by Erik Saarand Viveca Novak

தி கார்டியன் ஆங்கில நாளிதழ் அக் 7 2009

நியூயார்க் டைம்ஸ் நாளிதழ் ஜூன் 21, 2005

வாஷிங்டன் போஸ்ட் நாளிதழ் மே 7, 2004

CNN 's wolf bitzer interview with Dick Chenney, June 2005

Tipton Three விக்கிபீடியா வலைப்பக்கம்

குவாண்டனாமா விக்கிபீடியா வலைப்பக்கம்.

இஸ்லாம் ஓர் ஈர்க்கும் மார்க்கம் 23

(டாக்டர் கேரி மில்லர் (Dr Gary Miller)



என்னைக் கவர்ந்த இஸ்லாம் - டாக்டர் கேரி மில்லர்

குர்ஆனில் தவறுகளைக் கண்டுபிடிக்க முயன்ற டாக்டர் மில்லர் கண்ட அதிசயங்கள்

கனடா நாட்டைச் சேர்ந்த கிறித்தவ பிரசார பீரங்கி டாக்டர் கேரி மில்லர் (Dr Gary Miller) பைபிளைக் கரைத்துக் குடித்தவர்.அதே நேரத்தில் கணக்குப் பிரியர். இதனால் எதையும் தர்க்கரீதியாக அணுகுவதையே விரும்புவார்.

இவர் ஒருநாள் திருக்குர்ஆனை வாசிக்க நினைத்தார்.அவரது எண்ணமெல்லாம், குர்ஆனில் தவறுகளைக் கண்டுபிடிக்க வேண்டும்; முஸ்லிம்களைக் கிறித்தவ மதத்திற்கு அழைக்க இத்தவறுகள் தனக்கு உதவும் என்பதுதான்.

பதினான்கு நூற்றாண்டுகளாக ஓதப்பட்டுவரும் ஒரு பழைய நூலில் என்ன இருந்துவிடப் போகிறது? பாலைவனம் பற்றியும் அது போன்ற செய்திகள் பற்றியுமே அது பேசும் என்பதே அந்தக் கணக்கரின் கணக்காக இருந்தது.

ஆனால், என்ன ஆச்சரியம்! உலகத்தில் வேறு எந்த நூலிலும் காணக்கிடைக்காத அற்புதத் தகவல்களை குர்ஆனில் கண்ட மில்லர், திகைப்பின் உச்சிக்கே சென்றுவிட்டார். நபி (ஸல்) அவர்களின் துணைவியார் கதீஜா (ரலி) அவர்களின் இறப்பு, அல்லது நபிகளாரின் புதல்வியர், புதல்வர்கள் ஆகியோர் மறைவு போன்ற சோகச் செய்திகள் குர்ஆனில் இருக்கக்கூடும் என எதிர்பார்த்திருந்தவருக்கு ஏமாற்றமே விடையானது.

நபியின் குடும்பத்தார் குறித்த தகவல்கள் இல்லாதது மட்டுமல்ல; குர்ஆனில் ஒரு முழு அத்தியாயமே அன்னை மர்யம் (அலை) அவர்களின் பெயரால் இடம்பெற்றிருந்தது மில்லரை திகைப்பில் ஆழ்த்தியது. அன்னை மர்யம் குறித்து கிறித்தவ நூல்களிலோ பைபிளிலோ கூறப்படாத அருமை பெருமைகள் இந்த அத்தியாயத்தில் சிறப்பாகக் கூறப்பட்டிருப்பதை மனிதர் கண்டார். ஆயிஷாவின் பெயரிலோ ஃபாத்திமாவின் பெயரிலோ ஓர் அத்தியாயம்கூட இடம்பெறாததையும் அவர் உணர்ந்தார்.

நபி ஈசா (அலை) அவர்களைப் பற்றி குர்ஆனில் 25 இடங்களில் பெயரோடு குறிப்பிடப்பட்டிருந்த அதே வேளையில், நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் பெயர் ஐந்தே ஐந்து இடங்களில் மட்டுமே கூறப்பட்டிருந்தது மில்லரின் வியப்பைக் கூட்டியது.

குர்ஆனைச் சற்று ஆழமாகப் படிக்கத் தொடங்கினார். ஏதேனும் குறைகள் கிடைக்காமலா போய்விடும்! ஆனால், திருக்குர்ஆனில் ஒரு வசனம் அவரைத் தூக்கிவாரிப் போட்டது.

இந்தக் குர்ஆனை அவர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாதவரிட மிருந்து வந்திருப்பின், இதில் அதிகமான முரண்பாடுகளை அவர்கள் நிச்சயம் கண்டிருப்பார்கள் (4:82) என அந்த வசனம் அறைகூவல் விடுக்கிறது.

இத்திருவசனம் குறித்து கேரி மில்லர் கூறுகிறார்: இன்றைய அறிவியல் அடிப்படைகளில் ஒன்று என்னவெனில், சிந்தனைகளில் தவறு இருக்கும்; தவறு இல்லை என்பது நிரூபிக்கப்படும் வரை. குர்ஆனோ, தன்னில் தவறுகளைக் கண்டுபிடியுங்கள் என முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதோருக்கும் சவால் விடுக்கிறது. அவர்களால்தான் அது முடியவில்லை.

உலகில் எந்தப் படைப்பாளனுக்கும், ஒரு புத்தகத்தை எழுதிவிட்டு, அதில் தவறுகளே இல்லை என்று அறைகூவல் விடுக்கும் துணிவு இருந்ததில்லை. குர்ஆனோ இதற்கு நேர்மாறாக, தன்னில் தவறுகளே கிடையாது; இருந்தால் காட்டுங்கள் பார்க்கலாம் என்று சொல்வதுடன், காட்ட முடியாது என்று பறைசாற்றவும் செய்கிறது.

டாக்டர் மில்லரை நீண்ட நேரம் சிந்திக்கவைத்த மற்றொரு வசனம்:

இறைமறுப்பாளர்கள் சிந்திக்க வேண்டாமா? வானங்களும் பூமியும் ஒன்றாக இணைந்திருந்தன. நாம்தான் அவற்றை வெடித்துச் சிதறவைத்தோம். உயிருள்ள ஒவ்வொன்றையும் நீரால் உருவாக்கினோம். அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டாமா? (21:30)

1973ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றுத் தந்த அறிவியல் ஆய்வே இந்தப் பொருள்தான். பெருவெடிப்பு' (Big Bang) எனும் பிரபஞ்சக் கோட்பாடுதான் அது. மிகமிக அதிகமான வெப்ப நிலையும் அடர்வும் மிகுந்த ஒரு வெடிபொருள், பலகோடி ஆண்டுகளுக்குமுன் வெடித்துச் சிதறியதால் உண்டானதே இந்தப் பிரபஞ்சம் என்கிறது இக்கொள்கை

'இணைந்திருத்தல்' என்பதைக் குறிக்க 'ரத்க்' எனும் சொல் வசனத்தின் மூலத்தில் ஆளப்பட்டுள்ளது. இது, ஒன்றோடொன்று நன்கு இணைந்த பொருளைக் குறிக்கும். 'சிதறல்' என்பதைக் குறிக்க மூலத்தில் 'அல்ஃபத்க்' எனும் சொல் ஆளப்பட்டுள்ளது. வெடித்துச் சிதறுவதை இது குறிக்கும். (ரத்க், ஃபத்க் – சுப்ஹானல்லாஹ்!)

நபி (ஸல்) அவர்களுக்கு இந்த குர்ஆனை ஷைத்தான்கள்தான் சொல்லிக் கொடுக்கின்றன என்று பலர் விமர்சித்தனர். டாக்டர் மில்லரும் கிட்டத்தட்ட இதை நம்பியிருந்தார்போலும். இவ்வாதத்தைத் திருக்குர்ஆன் தவிடுபொடியாக்குவதைக் கண்டு திகைத்துப்போனார் மில்லர்.

"இதை ஷைத்தான்கள் இறக்கிவிடவில்லை. அது அவர்களுக்குத் தகுந்ததும் அல்ல; அதற்கு அவர்களால் இயலவும் செய்யாது." குர்ஆன் (26:210,211)என்று கூறும் குர்ஆன்,"(நபியே!) நீர் குர்ஆனை ஓதுவதானால், விரட்டப்பட்ட ஷைத்தானைவிட்டு அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருவீரா!" (16:98)என்று கட்டளையிடுகின்றது.

ஷைத்தானே ஒரு வேதத்தை அருளிவிட்டு, அதை ஓதுவதற்குமுன் என்னைவிட்டுப் பாதுகாப்புக் கோருவீராக என்று எப்படிச் சொல்வான்?

டாக்டர் கேரி மில்லரை யோசிக்கவைத்த நிகழ்வுகள் பல குர்ஆனில் இடம்பெறுகின்றன. அவற்றை 'அற்புதங்கள்' என்கிறார் அற்புதக் கூட்டங்கள் பல நடத்திய அவர்.

அவற்றில் ஒன்று, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர் அபூலஹப் தொடர்பான நிகழ்ச்சி. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு சொல்லையும் மறுப்பதே அபூலஹபின் வேலை. அபூலஹப் மரணிப்பதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பே, அவரைச் சபிக்கும் அத்தியாயம் ஒன்று (தப்பத் யதா அபீலஹப்) அருளப்பட்டிருந்தது. அபூலஹப் நரகம் செல்வான் என அந்த அத்தியாயம் வெளிப்படையாகவே கூறுகிறது.

அபூலஹப் நினைத்திருந்தால், குர்ஆனைப் பொய்யாக்க ஒரே ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம். அதுதான் கலிமா. கலிமாவைச் சொல்லி வெளிப்படையிலேனும் தன்னை அவன் முஸ்லிமாகக் காட்டிக்கொண்டு, அதன் மூலம் குர்ஆனின் கூற்றை -தான் நரகவாசி என்பதை- பொய்யாக்கியிருக்கலாம்.

ஆனால், அவன் அப்படிச் செய்யவில்லை. ஏனெனில், குர்ஆன் நாலும் அறிந்த நாயகனால் அருளப்பெற்றது

திருக்குர்ஆனைப் படித்து, ஆய்வு செய்து இஸ்லாத்தை ஏற்று அப்துல் அஹத் உமர் எனும் அழகிய பெயரில் வாழ்ந்து வரும் இவரால் கனடாவிலும், கனடாவுக்கு அப்பாலும் பலர் இஸ்லாத்தைத் தழுவியுள்ளனர்.

இவரின் 'திருக்குர்ஆனின் அற்புதம்' (The Amazing Quran) முதல் பதிப்பு 1992) நூல், பலமொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதனை உள்வாங்கி 'குர்ஆனும் - நவீன விஞ்ஞானமும்' என்ற தலைப்பில் பலர் நூல்கள் எழுதியுள்ளனர்.

Source: The Amazing Quran by Dr. Gary Miller (Abdul-Ahad Omar)

இஸ்லாம் ஓர் ஈர்க்கும் மார்க்கம் 24

(அமெரிக்க கண் மருத்துவர் லாரன்ஸ் ப்ரௌன்)



இவர் கண் மருத்துவத்தில் தனித்துவம் பெற்றவர் , இவரும் நாத்திகராக இருந்து இஸ்லாத்திற்கு வந்தவர் தான். டாக்டர் லாரன்ஸ் ப்ரௌன் (Dr. Lawrence Brown), கனடியன் தாவாஹ் அசோசியேசனின் (Canadian Dawah Association) interfaith துறையின் தலைவர். அமெரிக்க விமானப்படையில் மதிப்புமிக்க கண் மருத்துவராக பணியாற்றியவர்.

1990 ஆம் ஆண்டு இவருடைய வாழ்க்கை திசை திரும்பியது. அதுதான் இவர் இறை நம்பிக்கையின்பால் வந்த நேரம் அது.

1990 ஆம் ஆண்டு. நான் ஜார்ஜ் வாஷிங்க்டன் பல்கலைகழக மருத்துவமனையில் பணியாற்றிய நேரம். அந்த ஆண்டு அக்டோபர் மாதம் பத்தாம் தேதி என்னுடைய இரண்டாவது மகள் பிறந்தாள். மார்பிலிருந்து பாதங்கள் வரை அடர்த்தியான நீல நிறத்தில் இருந்த அவளை கண்டு மிகவும் அதிர்ச்சியடைந்தேன். அவளுடைய இதய குழாய்களில் இருந்த பிரச்சனையால் அவளுடைய உடம்பால் தேவையான இரத்தத்தை பெற முடியவில்லை. ஒரு மருத்துவராக அவள் அதிக நாட்கள் பிழைத்திருக்க வாய்ப்பில்லை என்பதை உணர்ந்திருந்தேன். மிகவும் உடைந்து போனேன்.

இப்போது அவளுக்கு தேவை அவசர அறுவை சிகிச்சை. குழந்தைகள் இதய சிகிச்சையில் தனித்துவம் பெற்ற மருத்துவர் அழைக்கப்பட்டார். என் குழந்தையை அவசர சிகிச்சை பிரிவில் அவருடைய கண்காணிப்பில் ஒப்படைத்து விட்டு வெளியேறினேன். இப்போது எனக்கு துணை யாருமில்லை, என்னுடைய பயத்தை தவிர. அது என்னை அந்த மருத்துவமனையின் வழிபாட்டு அறைக்கு செல்ல வித்திட்டது.

பாரம்பரியமிக்க கிருஸ்துவ குடும்ப பின்னணியை கொண்ட நான், இறைவனை குறைந்த அளவாவது அங்கீகரித்தது என்றால் அது இப்போது தான். அதுகூட சந்தேகத்தில் தான் பிரார்த்தித்தேன்.... "இறைவா நீ இருந்தால்..." அவன் இருந்தால், அவன் என் குழந்தையை காப்பாற்றினால், என்னை அவனுடைய மார்க்கத்திற்கு வழி காட்டினால் நிச்சயம் அவனை நான் பின்பற்றுவேன்"

கஷ்டத்தில் சிக்கித் துடிதுடித்துக் கொண்டிருப்பவர்கள் அபயமிட்டு அழைத்தால் அவர்களுக்கு பதில் கூறி அவர்களுடைய கஷ்டங்களை நீக்குபவன் யார் ? (குர்ஆன் 27: 62)

இதுதான் அப்போது இறைவனுக்கு நான் அளித்த வாக்குறுதி. பிறகு அவசர சிகிச்சை பிரிவிற்கு திரும்பினேன். என் மகள் நலமாகி விடுவாள் என்று மருத்துவர் கூறினார். அவர் சொன்னது போன்றே இரண்டு நாட்களில் அவள் சரியாகி விட்டாள், மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை இல்லாமலேயே.... இன்று அவளுக்கு பதினெட்டு வயது. நலமாக இருக்கிறாள்.

நான் முன்னமே கூறியது போன்று நான் ஒரு மருத்துவர். அவள் குணமானதற்கு மருத்துவ ரீதியாக patent ductus arteriosis, low oxygenation and spontaneous resolution என்று காரணங்கள் சொல்லப்பட்டாலும் அதனை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை

நிச்சயமாக இதில் இறைவனின் பங்குள்ளது என்றே என் மனம் சொல்லியது. பயத்தில் இறைவனிடம் வாக்குறுதி கொடுக்கும் பலரும், அவர்களுடைய தேவை நிறைவேறிய பின்னர் தங்கள் வாக்குறுதியை நிறைவேற்றாமல் இருக்க புது புது காரணங்களை கண்டுபிடிப்பர். என் மகள் குணமடைந்ததற்கு மருத்துவ காரணங்களை காட்டி என்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றாமல் இருந்திருக்கலாம்.

"இன்னும், கடலில் உங்களை ஏதேனும் தங்கடம் (துன்பம்) தீண்டினால், அவனையன்றி நீங்கள் (தெய்வங்கள் என) எவற்றை அழைத்துக் கொண்டிருந்தீர்களோ, அவையாவும் மறைந்து விடும்; எனினும் (அல்லாஹ்) உங்களை ஈடேற்றிக் கரையளவில் கொண்டு வந்து சேர்க்கும் பொழுது நீங்கள் (அவனைப்) புறக்கணித்து விடுகிறீர்கள் - இன்னும், மனிதன் மகா நன்றி மறப்பவனாகவே இருக்கின்றான்". (குர்ஆன் : 17:67)

ஆனால் என்னால் அப்படி இருக்க முடியவில்லை. காரணம், நம்பிக்கை என்னுள் ஆழமாக நுழைந்து விட்டது. நாங்கள் எடுத்த cardiac ultrasounds, ஒருநாள் பிரச்சனை இருப்பதாக காட்டியதையும் மறுநாள் அந்த பிரச்சனை இல்லை என்று காட்டியதையும் என்னால் ஒரு சாதாரண நிகழ்வாக எடுத்துக்கொள்ள முடியவில்லை.

நான் நினைத்ததெல்லாம் இதுதான், இறைவன் நான் கேட்டதை நிறைவேற்றி விட்டான், இப்போது நான் அவனுக்கு கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

அடுத்த சில வருடங்கள் என்னுடைய வாக்குறுதியை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொண்டேன். ஆனால், அவை யாவும் தோல்வியை தழுவின. கிருத்துவம் மற்றும் யூத மார்க்கத்தை பற்றி நிறைய படித்தேன். ஆனால் அவை எனக்கு முழு திருப்தியை தரவில்லை. அதுமட்டுமல்லாமல் அவற்றுடன் என்னால் ஒன்றவும் முடியவில்லை.

பிறகு ஒருநாள் குரானும், மார்டின் லின்க்ஸ் (Martin Lings) அவர்களின் புத்தகமான "Muhammed: His life based on the Earliest Sources" என்னும் நூல் அறிமுகமாயின. நான் மார்க்கங்கள் குறித்து ஆராய்ந்த போது, யூத நூல்கள், வரப்போகும் மூன்று நபிமார்களை பற்றி குறிப்பிடுவதை படித்திருக்கிறேன். யஹ்யா(அலை) மற்றும் ஈசா(அலை) போன்றவர்கள் அவர்களில் இருவர், யார் அந்த மூன்றாவது நபர்? பைபிளில் ஏசு(அலை) அவர்கள், தனக்கு பின் வரும் நபி என்று குறிபிட்டிருக்கிறார்கள்.

ஆக, குரானைப் படிக்கும் போது அனைத்தும் ஒத்துவர ஆரம்பித்தன (Everything started to make sense). நபிமார்கள், ஒரே இறைவன், இறைவேதம் என்று அனைத்தும் அறிவுக்கு ஒத்துவர ஆரம்பித்தது. இஸ்லாத்தை ஏற்று கொண்டேன்.

நான் கற்றுக்கொண்ட பாடமென்றால், என்னை விட அறிவில் சிறந்த பலர் இஸ்லாம் என்னும் உண்மையை அறியாமல் இருக்கின்றனர். நீங்கள் புத்திசாலியா என்பது மட்டும் இங்கு முக்கியமல்ல, அந்த அறிவு உங்களுக்கு சரியான முறையில் புகட்டப்படுகிறதா என்பது தான் முக்கியம்.

"தான் நாடியோரை அல்லாஹ் தன்பால் தேர்ந்தெடுத்து கொள்கிறான் - முன்னோக்குபவரை அவன் தன்பால் நேர்வழி காட்டுகிறான்"

குர்ஆன் (42:13)..தான் நாடியோரை அல்லாஹ் நேர்வழிப் படுத்துகிறான்" (குர்ஆன் 24:46) அல்லாஹ் என்னை தேர்ந்தெடுத்து நேர்வழி காட்டியிருக்கிறான்.

அதற்காக அவனுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். இப்போது என்னிடத்தில் ஒரு எளிமையான பார்முலா உள்ளது. அது, முதலில் படைத்தவனை அங்கீகரிப்பது, அவனை மட்டுமே வழிபடுவது மற்றும் அவனிடத்தில் மட்டுமே வழிகாட்ட கோருவது.அவன் யாருக்கு நல்வழி காட்டுகிறானோ அவரை யாராலும் வழிகெட செய்ய முடியாது..." அல்ஹம்துலில்லாஹ்.

இவர் கண் மருத்துவர் என்பதால், டார்வின் கண்ணைப் பற்றி ஆராயும் போது ஏற்பட்ட தடுமாற்றத்தை ரொம்ப அழகாக விளக்குவார்.

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பின்புதான் இவருக்கு இறைவனின் சோதனை அதிகமிருந்தது. இஸ்லாத்தை ஏற்கும் பலரும் இதுபோன்ற நிலையை தாண்டி தான் வருகிறார்கள் என்றாலும், ஒரு சிலருக்கு இது போன்ற சோதனைகள் அதிகமாகவே இருக்கின்றன.

"நான் முஸ்லிமானதை என் மனைவியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. என்னிடமிருந்து விவாகரத்து வேண்டுமென்று கேட்டார். நீதிபதி "உங்களுக்குள் என்ன பிரச்சனை" என்று கேட்ட போதும், "விவாகரத்து வேண்டுமென்று" மட்டும் தான் சொன்னார். அவர் சென்றது மட்டுமல்லாமல் என் குழந்தைகளையும் என்னிடமிருந்து அழைத்து சென்று விட்டார்.

என் குழந்தைகளை நான் பார்க்க வேண்டுமென்றால் பாதுகாப்பு அதிகாரியின் துணையுடன் தான் பார்க்க வேண்டும். என் குழந்தைகளுடன் என் வீடு, செல்வம் என்று அனைத்தையும் தன்னிடத்தே கொண்டு சென்று விட்டார் என் மனைவி. வாரமொருமுறை வாடகை செலுத்தும் அறைகளில் என் வாழ்க்கையை அமைத்துக் கொண்டேன். என் பெற்றோர்களோ என்னை முற்றிலுமாக நிராகரித்து விட்டனர்

ஒருமுறை அவர்களிடமிருந்து வந்த கடிதம் எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. அதில், அவர்கள், என்னை பார்க்கவோ, என்னிடம் பேசவோ விரும்பவில்லை என்றும், நானும், இனிமேல் அவர்களை பார்க்க வரக்கூடாதென்றும், கடிதம் கூட அனுப்ப கூடாதென்றும் எழுதப்பட்டிருந்தது.

என் மனைவி மீதோ அல்லது என் பெற்றோர்கள் மீதோ இந்த நிகழ்வுகளுக்காக வருத்தம் இருந்ததில்லை. அவர்கள் நிலையிலிருந்து எண்ணி பார்க்கவேண்டும். அவர்கள் நான் தவறான வழியில் சென்று விட்டதாகவே நினைத்தனர். அன்றைய காலகட்டத்தில் ஊடகங்களும் அப்படி ஒரு நிலையைத் தான் ஏற்படுத்தி இருந்தன.

என் நண்பர்களும் என்னை விட்டு பிரிந்து செல்ல ஆரம்பித்தனர். இனி அவர்கள் எதிர்பார்க்கும் பழைய நபரில்லை நான். தற்போது நிலைமை பெரிதும் மாறி விட்டது. அல்ஹம்துலில்லாஹ்.

என் மனைவியை விட்டு பிரிந்த எனக்கு மற்றொரு அன்பான துணையை இறைவன் ஏற்படுத்தினான். மற்றொரு குழந்தையை கொடுத்தான். அமெரிக்காவில் வசிக்க சிரமப்பட்ட எனக்கு இப்போதைய இருப்பிடம் புனித மதீனா நகரம்.குடும்பத்தினரை விட்டு பிரிந்த நான் இப்போது உலகளாவிய இஸ்லாமிய குடும்பத்தில் ஒருவன்.

எங்கள் சகோதரத்துவம் போல எதுவும் வராது. நான் சொல்வது உண்டு, சகோதரத்துவம் என்றால் என்னவென்று ஒருவர் இஸ்லாத்தில் தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்று.

தற்போது என் பெற்றோர் என்னிடம் நெருங்கி வர ஆரம்பித்துள்ளனர். என் சகோதரர் இஸ்லாத்தை தழுவி விட்டார். என் குழந்தைகளை சுலபமாக பார்க்க முடிகிறது. இறைவன் குர்ஆனில் சொல்லுவது போன்று, கஷ்ட காலங்களுக்கு பின்னர் சூழ்நிலைகளை எளிதாக்கி வைத்துள்ளான்.

நான் இழந்ததை விட பெற்றவை அதிகம். என்னுடைய அனுபவங்கள் மூலம், இஸ்லாத்தை தழுவும் நிலையில் உள்ளவர்களிடம் நான் கூறிக்கொள்ள விரும்புவதெல்லாம், நீங்கள் ஒரு நொடி கூட, இஸ்லாத்திற்கு வந்தால் இதை இழக்க நேரிடுமோ, அதை இழக்க நேரிடுமோ என்று எதை எண்ணியும் அஞ்சாதீர்கள். உங்களுக்கு சர்வ வல்லமையுள்ள இறைவன் கிடைத்துள்ளான். அவனிடம் உங்களுக்கு அமைதியையும், பலத்தையும் கொடுக்கச் சொல்லி துஆ செய்யுங்கள்

அப்படியே அவன் உங்களுக்கு சோதனைகளை தந்தாலும் அது உங்களால் தாங்கக்கூடிய அளவாக இருக்க வேண்டுமென்று அவனிடம் கேளுங்கள். என் அனுபவத்தின் மூலமும், நான் பார்த்த புதிய முஸ்லிம்களின் அனுபவத்திலிருந்தும் கூறுகிறேன்,

நீங்கள் இஸ்லாத்தை தழுவ நேர்ந்தால் அதனால் நீங்கள் பெரும் மன அமைதி என்பது, நீங்கள் இதுவரை பெற்ற எந்த ஒரு விசயத்தையும் விட மேலானதாக இருக்கும்....." சுப்ஹானல்லாஹ்....ஈமானை இறுக பற்றி பிடித்திருக்கும் இவர்களைப் போன்றவர்களை காணும் போதெல்லாம் நம்முடைய ஈமானும் அதிகரிக்கிறது.

டாக்டர் லாரன்ஸ் அவர்கள் ஒரு மிகச்சிறந்த மருத்துவர் மட்டுமல்ல, சிறந்த எழுத்தாளரும் கூட. இவருடைய கட்டுரையான "The Big Questions", ஒருவர் தன் வாழ்நாளில் கேட்க நினைக்க கூடிய கேள்விகளை அடிப்படையாக கொண்டது.

பல நூல்களை எழுதியிருக்கும் இவர், கனடா, அமெரிக்கா, அரேபிய நாடுகள் என்று தன் தாவாஹ் பணியை செய்து வருகிறார். இறைவன் இவர் போன்றவர்களின் மன பலத்தை நமக்கும் தந்தருள்வானாக...ஆமின்... இறைவன் நம்மை என்றென்றும் நேர்வழியில் நிலைக்கச் செய்வானாக...ஆமின். அல்லாஹ்வே எல்லாம் அறிந்தவன்...

இஸ்லாம் ஓர் ஈர்க்கும் மார்க்கம் 25

டேனியல் ஸ்ட்ரெய்ச் (Daniel Streich)



கருப்பு பணம் பதுக்கலுக்கும் புகழ் பெற்ற சுவிட்சர்லாந்து நாடு.அங்கு 2004ஆம் ஆண்டுகளில் அந்நாட்டில் பள்ளிவாசல் மினாராக்களுக்கு எதிரான பிரச்சினை கிளப்பப்பட்டது. "சுவிட்சர்லாந்து ஒரு கிறிஸ்தவ நாடு. இங்கு கிறிஸ்தவர்கள்தான் பெரும்பான்மையினர். இஸ்லாமியர் வெறும் 6 சதவீதம் உள்ளவர்கள்.

ஆதலால் எங்கு பார்த்தாலும் தேவாலயங்களின் கோபுரங்கள்தான் தெரியவேண்டும். ஆனால் பள்ளிவாசல்களின் மினாராக்கள் தேவலாங்களின் கோபுரங்களை விஞ்சி நிற்கின்றன. இது நாட்டின் இறையாண்மைக்கு எதிரானது "

இதுவே எதிர்ப்பாளர்களின் கோஷம்." அரசியல் ஆதாயத்திற்காகவும், விரைவில் பிரபலமாக வேண்டும்.சொந்த நாட்டில் இருந்து கருத்துப் போரை தொடங்கியவர் சுவிஸ் மக்கள் கட்சி (Swiss people's Party (SVP) டேனியல் ஸ்ட்ரெய்ச் (Daniel Streich) என்பவரவார் .

சுவிஸ் மக்கள் கட்சியின் மாவட்ட தலைவராக டேனியல் உயர்ந்தார். கட்சியின் கொள்கையை உருவாக்கும் அளவிற்கு அக்காட்சியில் ஆதிக்கம் செலுத்தினார் டேனியல். கட்சியிலும் அரசியலிலும் தனது செல்வாக்கை உயர்த்திட இஸ்லாத்திற்கு எதிரான பிரச்சாரத்தை கையில் எடுத்தார்.

தேவாலயங்களின் கோபுரங்களை விட மினாராக்கள் உயர்ந்திருப்பது நாட்டிற்கு அவமானம் என்ற பரபரப்பான பேச்சால் அந்நாட்டின் முக்கிய அரசியல்வாதியாக உயர்ந்த அவர், பத்திரிக்கைகளுக்கு செய்தி விருந்தானார். ஐரோப்பா முழுவதும் பிரபலமானார்.

மினாராக்களுக்கெதிராகப் பேசி மீடியாக்களுக்குத் தீனி போட்ட அவர், தொலைக்காட்சிகளில் இஸ்லாம் குறித்து பல்வேறு தலைப்புகளில் முஸ்லிம்களுடன் விவாதம் நடத்த விரும்பினார். அதன் மூலம் இன்னும் பிரபலமாகலாம் என்பதே அவரது நோக்கம்.

இதற்காக குர்ஆன் மொழிபெயர்ப்பு ஒன்றினை வாங்கினார். படித்தார். சுமார் ஒரு வருட காலம் திருக்குர்ஆனை மிக ஆழமாக படித்து ஆய்வு செய்த அவர் 2005 ஆம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்றார்.

இஸ்லாத்தை ஏற்ற பின்பு மினாராக்களுக்கெதிரான எதிர்ப்புக் கருத்துக்களைக் கைவிட்டார். அதுவரை முஸ்லிம்களை எதிரிகளாகப் பார்த்து வந்த அவர், அதன் பின்பு முஸ்லிம்களுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தார். 2007 ஆம் ஆண்டு தமக்கு ஏராளமான முஸ்லிம் நண்பர்கள் உள்ளதாக மிடியாவில் கருத்துச் சொன்ன அவர், அதற்கு மேல் பேசவில்லை.

டேனியல் இஸ்லாத்தை ஏற்றாலும் அவர் தொடங்கி வைத்த மினராக்களுக்கு எதிரான பிரச்சாரம் அந்நாட்டில் உச்ச கட்டத்தை அடைந்தது. இதன் விளைவு 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பொது வாக்கெடுப்பு நடத்துவதாக அரசு அறிவித்தது மினராக்களை அனுமதிக்கலாமா ? வேண்டாமா ? என்பது பொது வாக்கெடுப்பின் நோக்கம்

அதுவரை மவுனம் காத்து வந்த டேனியல் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வாய் திறந்தார். பொதுவாக் கெடுப்புக்கு எதிராக தமது கண்டனத்தை பலமாக பதிவு செய்தார். இது சுவிஸ் அரசியலில் கடும் பரபரப்பை ஏற்படுத்தியது. பொதுவாக்கெடுப்புக்கு முந்தைய வாரத்தில் அவர் மீடியாக்களுக்கு பேட்டியளித்தார். அவரது பேட்டி பின்வருமாறு,

"நான் வாழ்நாளில் பெரிய தவறை செய்து விட்டேன். திருக்குர்ஆனுக்கு எதிராகவும், இஸ்லாமிய ஒழுக்கநெறிகளுக்கு எதிராகவும் நிறைய பேசியுள்ளேன். முஸ்லிம்களுடன் விவாதம் நடத்தி வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவே திருக்குர்ஆனைக் கற்றேன். ஆனால் திருக்குர்ஆனே எனக்கு மெய்யான வழியைக் காட்டியது. இஸ்லாத்தை எனது வாழ்க்கை நெறியாக ஏற்றுள்ளேன்.

நான் முன்னர் கிறிஸ்தவத்தில் இருந்தேன். தினமும் பைபிளைப் படித்தேன். ஆனால் என்னுள் எழுந்த வாழ்க்கை குறித்த முக்கிய கேள்விகளுக்கு அது பதில் தரவில்லை. ஆனால் நான் ஏற்றுள்ள இப்புதிய மார்க்கமான இஸ்லாம் வாழ்க்கையின் முக்கிய கேள்விகளுக்கு தத்துவார்ந்த பதில் (logical answers to important life questions)" தந்தது.

தொடர்ந்து பொதுவாக்கெடுப்பு நடத்தும் அரசின் முடிவினை கடுமையாக எதிர்த்த அவர், சுவிஸ் மக்கள் கட்சி அரசியல்வாதிகள் முஸ்லிம்களுக்கு எதிரான சாத்தான்களாக உள்ளனர் என்றார். அவ்விடத்திலேயே அக்கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்த அவர், 'கன்சர்வேடிவ் டெமாக்ரடிக் கட்சி' யை (Conservative Democratic Party) தொடங்க காரணமானார்.

சுவிஸ் நாட்டில் மிக அதிக வாசகர்களை கொண்ட பத்திரிக்கையான

'20 மினிட்டன்' (20 Minuten - 20 நிமிடங்கள் என்பது இதன் பொருள்) எனும் ஜெர்மன் மொழி பத்திரிக்கை இதனை முதல் பக்கச் செய்தியாக வெளியிட்டது.,

டேனியல் இஸ்லாத்தை ஏற்ற செய்தி வாக்கெடுப்பில் பிரதிபலித்தது. ஆம். வெறும் 6 சதவீத முஸ்லிம்கள் வாழும் அந்நாட்டில் மினாராக்களுக்கு ஆதரவாக 42.5 சதவீத மக்கள் வாக்களித்தனர். 57.5 சதவீத மக்களே எதிர்த்து வாக்களித்தனர்.

இந்த 4.2.5 சதவீத மக்களில் இஸ்லாமியர் 6 சதவிதம் போக மீதி 36 சதவீத முஸ்லிமல்லாத மக்கள் மினாராக்களை ஆதரிப்பதாக வாக்கெடுப்பில் தெரிய வந்தது.

மினாராக்கள் மற்றும் இஸ்லாமிய ஒழுக்க நெறிகளுக்கு எதிராக சுவிஸ் அரசியல் கட்சிகள் நடத்திய வெறுப்புப் பிரச்சாரங்களும், அதனை தொடங்கி வைத்த டேனியல் இஸ்லாத்தை ஏற்றதும் இஸ்லாத்திற்கு சாதகமான சூழலை ஏற்படுத்தின.

மக்களில் அதிகமானோர் இஸ்லாத்தைத் தெரிந்து கொள்ள ஆர்வப்பட்டார்கள். திருக்குர்ஆனின் மொழி பெயர்ப்புகள் மிக அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டன. இஸ்லாத்தையும் குர்ஆனையும் கருப்பொருளாக வைத்து மக்கள் தங்களுக்குள் விவாதம் நடத்தி பலர் இஸ்லாத்தை ஏற்றார்கள்.

பொது வாக்கெடுப்புக்கு பின்பு பேட்டியளித்த டேனியல் இவ்வாறு கூறினார். "ஐரோப்பிய நாடுகளில் எங்கும் இல்லாத வகையில் அழகிய பொலிவும் உயர்ந்த மினாராக்களும் கொண்ட சுமார் 15 பள்ளிவாசல்களை எங்களது சுவிஸ் நாட்டில் கட்டுவோம் இன்ஷா அல்லாஹ்."

Source:

- 20 மினிட்டன் ஜெர்மன் மொழி நாளிதழ் (சுவிஸ்)

(23 நவம்பர் 2009)

- பிலிக் (Blick) ஜெர்மன் மொழி நாளிதழ் (சுவிஸ்) (24 நவம்பர் 2009)

- டிக்குன் டெய்லி (Tikkun Daily) யூத இணைய ஆங்கில இதழ் (04 டிசம்பர் 2009)

- தி நேஷன் (The Nation) ஆங்கிலநாளிதழ் (பாகிஸ்தான்)(30 ஜனவரி 2010)

- டேனியல் ட்விட்டர் வலைப்பக்கம்

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 1

(கடிதம்)



ஓர் எஜமானன் தன் ஊழியனுக்குக் கடிதம் எழுதினால், அக்கடிதத்தின் தொடக்கத்திலேயே எஜமானனின் போக்கைப் புரிந்து கொள்ளலாம்.

இரக்கமுள்ள இதயத்தோடு அவன் எழுதுகின்றானா, இல்லை அடக்க முடியாத கோபத்தோடு அவன் ஆரம்பிக்கின்றானா; நேசம் நிறைந்த நெஞ்சத்தோடு பேசுகின்றானா அல்லது அறியாமல் செய்த பிழைக்கும் கொடுமையான தண்டனை தரும் நோக்கத்தோடு தொடங்குகின்றானா என்பது அக்கடிதத்தின் முதல் வரியைப் படித்தாலே தெரிந்துவிடும்.

கோபமும், கொடுமையும் உடையவனாக இருந்தால், அக்குணங்களை ஆரம்பத்திலேயே அவன் புலப் படுத்தி விடுவானல்லவா?

இறைவனின் திருமறையும் நமக்கு இறைவனிடமிருந்து வந்த ஒரு கடிதமாகக் கருதி, அதனை ஊன்றிப் பார்ப்போம்: அல்லாஹ்வின் அருள் வேதத்தை ஓர் அருமைக் கடிதமாக அறிஞர்கள் பலர் பாவித் திருக்கிறார்கள்.

"உங்களுக்கு முன்னிருந்த மக்கள் திருக்குர்ஆனை இறைவனிடமிருந்து தங்களுக்கு வந்த ஒரு கட்டளைக் கடிதமாகக் கருதினார்கள். இரவில் அதன் கருத்தைப் பற்றிச் சிந்திப்பவர்களாகவும், பகலில் அதன்படி அமல் செய்பவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள்.

"நீங்களோ அதைக் கற்பிக்கவும், அதன் எழுத்துகளைச் செம்மையாக உச்சரிக்கவும் மட்டும் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள்.அக்கடிதத்தின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் சோம்பலாக இருக்கிறீர்கள்" என்று இமாம் ஹஸன் பஸரீ (ரஹ்). இறைவனின் வேதத்தை ஒரு கடிதமாக உவமித்துக் கூறினார்கள்.

இன்னும்,''அடியவனே! உனக்குத் தெளிவில்லையா? உன் நண்பன் ஒருவனிடமிருந்து ஒரு கடிதம் வருமாயின், நீ வழி நடந்து கொண்டிருந்தாலும், உடனே நின்று விடுகிறாய்; ஒரு பக்கமாக ஒதுங்கிப் போய், அதன் ஒவ்வொரு சொல்லையும் படிக்கிறாய்.

ஆனால் இந்த வேதமோ, நீ நன்கு விளங்கி, அமல் செய்யும் பொருட்டு, நான் உனக்கு எழுதிய கடிதமாகும். ஆனால் இதை நீ அலட்சியம் செய்கிறாய். இதன்படி நீ செயல்படுவதுமில்லை. சில சமயம் நீ இதை ஓதினாலும், இதன் கருத்தை நீ சரிவர உணர்ந்து கொள்வதில்லை என்று ஹல்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு அருளிச் செய்த தெளராத் வேதத்தில் இறைவன் கூறியிருப்பதாக இமாம் கஸ்ஸாலீ குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வாறாக இறைவன் மக்களுக்கு அனுப்பும் வேதங்கள் ஓர் ஊழியன் தன் எஜமானனிடமிருந்து பெறும் கடிதங்களுக்கு ஒப்பிடப்படுவது ஒரு மரபு. மாநிலத்து மக்களுக்கெல்லாம் மாமறையாக விளங்கும் மதிநிறை திருக்குர்ஆனும், நமக்கு நம்மைப் படைத்தவன் அனுப்பிய ஒரு கடிதத்தைப் போன்றதேயாகும். அக்கடிதத்தின் தொடக்கத்திலேயே நம்மைப் படைத்த நாயன், தன் குணத்தை, தன் தன்மையை, தன் மென்மையைக் காண்பித்து விடுகிறான்.

உலகத்துக்குப் பொது மறையாகும் இத்திருவேதம், கருணைமிகு பெரியோனால் நமக்கு அனுப்பப்பட்ட இக்கடிதம் எப்படித் துவங்குகிறது?

"பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்" "அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரைக் கொண்டு," நாம் இத்திருமறையை ஓதி உணர வேண்டும் என்ற நல்லுரையோடு எழுகிறது நனி சிறந்த இவ்வேதம்.

இறைவனுக்கு 99 அழகிய திருநாமங்கள் உண்டு; ஒவ்வொன்றும் அவனுடைய ஒவ்வொரு தன்மையைப் பிரதிபலிப்பது. அல் வஹ்ஹாப் (கொடையளிப்போன்), அல் ஹக் (உண்மையாளன்), அல் கபூர் (மன்னிப்பருள்வோன்), அஸ்ஸமது (எந்தத் தேவையுமில்லான்) அல்கஹ்ஹார் (கோபமுடையான்), அல் ஜப்பார் (அடக்கி யாளும் வலுப்ப முடையோன்) போன்ற இவை 'அஸ்மாஉல் ஹுஸ்னா' (அழகிய திருநாமங்கள்) என்று சொல்லப்படுகின்றன.

இவற்றிலிருந்து இரண்டைத் தன் கடிதமாகிய திருவேதத்தின் தொடக்கத்தில் சேர்த்திருக்கிறான் இறைவன். அர்ரஹ்மான் (அருள் மிக்கோன்), அர் ரஹீம் (அன்பு செறிந்தோன்) ஆகிய இரண்டு பதங்கள் முதலில் இடம் பெற்று விடுகின்றன. அவனுடைய கோபத்தையோ, தண்டிக்குந் தன்மையையோ குறிப்பிடுவன அல்ல இவையிரண்டும்.

பிஸ்மில்லாஹில் ஜப்பாரில் கஹ்ஹார் அடக்கியாளும் கோபமுடையோனின் திருநாமத்தால் என்று தொடங்கவில்லை அவன் திருவேதம். படைத்த நாயன் தன் பலத்தைக் காட்ட விரும்பவில்லை; மாறாக, தன் கிருபையை, தன் கருணையைச் சுட்டிக் காட்டுகிறான், தன் கடிதத்தின் ஆரம்பத்தில்.

"அருளாளனும் அன்புடையோனுமாகிய ஆண்டவனின் திருநாமத்தால்" என்று தொடங்குகிறது அல்லாஹ்வின் அருள் மறை.

ஒரு தடவை போர்க்களத்தினின்றும் சிறைப் பிடிக்கப்பட்டு வந்தவர்களுள் கைக் குழந்தையோடு ஒரு பெண்ணும் இருந்தாள். வெயிலின் கொடுமையால் நாவரண்டு அக்குழந்தை அழுதது. அதைக் கண்ட தாய் ஓடிவந்து அக்குழந்தையை எடுத்து நெஞ்சோடு அணைத்து, பாலூட்டலானாள். இன்னும் தன் செல்வக் குழந்தையின் மீது வெயில் படாது நிழல் விழும் பொருட்டு, அதன் மீது கவிழ்ந்து கொண்டாள் அதாவது தன் உடம்பையே அக் குழந்தைக்கு ஒரு குடையாக்கிக் கொண்டாள்.

இக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த எம்பெருமானார் (ஸல்) அவர்கள், "இத்தகைய அன்புள்ளம் கொண்ட ஒரு தாய், தன் குழந்தையை நெருப்பில் வீசத் துணிவாளா?" என்று வினவினார்கள்.

"ஒருபோதும் மாட்டாள்" என்று நாயகத்தின் தோழர்கள் பதிலிறுத்தார்கள்.

"கருணையுள்ள அல்லாஹ் இத் தாயை விட அன்பு நிறைந்தவன்" என்று இறைவனின் அருளையும் அன்பையும் விளக்கினார்கள் நபி (ஸல்) அவர்கள்.

என் அருள் என் கோபத்தை மிகைத்து விடுகிறது' என்று இறைவன் கூறியிருக்கிறான். ஆகவேதான் முஸ்லிம் சமுதாயம், ''உம்மத்துல் மர்ஹூமா" (அருள் பெற்ற சமுதாயம்) என்று சிறப்பிக்கப்படுகிறது.

இத்தகைய நாயனின் அருளையும், அன்பையும், இரக்கத்தையும், ஈகையையும், கருணையையும், பொறுமையையும் சுட்டிக் காண்பிக்கும் அர்ரஹ்மான், அர்ரஹீம் என்ற இரு சொற்களையும் பற்றிச் சுவைபட எழுதியிருக்கிறார்கள் விரிவுரையாளர்கள்.

அன்பும், அருளும், இரக்கமும், ஈகையும் சிறப்பாகக் கொண்டுள்ள அல்லாஹ், தன் திருமறையிலே கூறுகின்றான்:

"... உங்களுடைய ரப்பு (உங்களுக்குக்) கிருபை செய்வதைத் தன்மீது (தனக்குத்தானே) விதியாக்கிக் கொண்டான்; நிச்சயமாக, உங்களிலிருந்து எவர் அறியாமையினால் (ஏதேனும் ஒரு) தீமையைச் செய்து விட்டு பிறகு அதன்பின் (அதை விட்டு) தவ்பாச் செய்து (மீண்டு, தம்மைச்) சீர்திருத்திக் கொள்கிறாரோ (அப் பொழுது அவருக்கு) நிச்சயமாக (அல்லாஹ்வாகிய) அவன் மிக்க மன்னிக்கிறவனாகவும், மிகக் கிருபையாளனாகவும் இருக்கிறான்." குர்ஆன் (6:54)

இந்தக் கருணையிலும், இரக்கத்திலும் அவன் மனிதனுக்கு மனிதன் வேற்றுமை காண்பிப்பதில்லை. ஏனெனில் அவன் அருளாளன் நல்ல அன்பாளன்.

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 2

(எல்லா படைப்புகளும் அவனுக்கு ஒன்றுதான்)



அவன் கருணை நோக்குக்கு தீர்க்கதரிசியும், பேரரசருமான ஸுலைமான் நபியும் ஒன்றுதான்; தன் இரட்சிப்பைத் தேடும் எறும்பும் ஒன்றுதான் என்பதை ஸர்.எட்வின் ஆர்னால்டு என்னும் பெரியார் தம் நூலில் விளக்கியிருக்கிறார்.

இறைவனின் 99 திருப் பெயர்களைச் சிறப்பிக்கும் முறையில் ஒவ்வொரு பெயருக்கும், இஸ்லாமிய நூற்களிலிருந்து ஒவ்வொரு சம்பவத்தைக் கோத்து "சமயத்தின் நன்முத்துகள்" என்று ஓர் உயர் காவியம் தொகுத்திருக்கிறார் ஸர். எட்வின் ஆர்னால்டு. அதில் "அர்ரஹீம்" என்னும் திருப்பெயரை விளக்கி அவர் வரைந்திருக்கும் சொற்சித்திரம் காவிய நயமும், கருத்து நிறைவும் கொண்டது.

"....இறைவனின் ஏவலை நிறைவேற்ற மலக்குகள் காத்து நிற்கின்றனர். அவன் கருணைக்கு வலியோர், வறியோர் என்று பேதமில்லை. படைப்பில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் இலர்; அன்னையின் அமுதத்தைப் பருக அவளருகே கிடக்கும் அன்று பிறந்த பச்சிளங் குழவியையும் அவன் கண்காணிக்கிறான். மலை யென அலையெழுப்பி மாலையும், காலையும் குரலொலிக்கும் ஒவ்வொரு அலையும் அவன் பார்வைக்குத் தப்புவதில்லை.

இப்படித் தன் படைப்புகளைக் காத்து நிற்கும் கருணை மஹா பெரியோனின் சந்நிதானத்திலே ஒரு நாள் ஜிப்ரீல் (அலை) இறைவனின் வாக்கைக் கேட்டார்கள். அது இரண்டு கட்டளைகளைக் கொண்டிருந்தது.

முதல் கட்டளை: "நீர் ஸுலைமானின் இன்ப மாளிகைக்குச் செல்லும். என்னிடம் அரசு பெற்ற ஸுலைமான் இப்பொழுது தகாத ஒரு காரியத்தைச் செய்யப் போகிறார். இன்று நிபிஸிலிருந்து அவருடைய அரண்மனைக்கு ஆயிரம் குதிரைகள் வந்திருக்கின்றன. போர்ப் புரவிகள் இவை. அழகான இக்குதிரைகள் தம் அரண்மனை வாசலிலே ஆர்ப்பரித்து நிற்கும் காட்சியிலே அவர் தம்மை மறந்திருக்கிறார் ஸுலைமான்.

அவரிடம் அந்திச் சூரியன் மாலையின் வரவை அறிவித்து விட்டது. வெள்ளிச் சுடர்கள் விண்ணிலே ஒளிவிடும் முன், ஸுலைமான் மாலை வணக்கத்துக்கு ஆயத்தம் செய்ய வேண்டும். ஆனால் தம் குதிரைப் படையின் பெருமையில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்திருக்கும் ஸுலைமான், இதை கவனிக்கவில்லை.

"இறைவனைத் துதிப்பதை விட போரிலே தாம் பெற்ற புரவிகளைப் பெரிதாக மதிக்கிறார் நம் அரசர்" என்று மக்கள் பேச ஆரம்பிப்பார்கள். ஆகவே "ஜிப்ரீலே ! எம் அடியானை இதிலிருந்து காப்பீரா !

''ஜிப்ரீல்! இன்னுமோர் ஆணை!" அரபாத் மலைச் சரிவில், விழுந்து கிடக்கும் ஒரு மரத்தின் கீழே, உணவு தேடுகிறது ஒரு மஞ்சள் எறும்பு; தான் சேகரித்த உணவைத் தன் புற்றுக்கு இழுத்துச் செல்ல இயலாமல் தத்தளிக்கிறது. அந்த உணவு கூடுகளிலுள்ள மற்ற எறும்புகளுக்கும் உரியது.

நைந்துபோன அதன் கால்கள் அதனைச் சுமக்கச் சக்தியிழந்து வருகின்றன. இதோ ...மழை பெய்யப் போகிறது. தள்ளாடும் அச்சிற்றெறும்பு அதிலேயே மாய்ந்து விடாது அதனைக் காப்பாற்றி, அருகேயிருக்கும் கற்பாறையிலே வாழும் அதன் இனத்தோடு அதனைச் சேர்த்துவிடும்."

மலக்குகளின் தலைவருக்கு இறைவன் மேற்கண்ட இரண்டு கட்டளைகள் விதிக்கிறான்.

ஒன்று: தாவூது கலீபத்துல்லாஹ்வின் திருமகனாரும், திருநபியும், பேரரசருமான ஹல்ரத் ஸுலைமான் (அலை) அவர்களைப் பிழையினின்றும் காக்கச் சொல்லுகின்றான்.

பிறிதொன்று: தன் உணவை இழுத்துச் செல்ல முடியாது, திண்டாடும் ஓர் எறும்பைக் காத்து வரக் கட்டளையிடுகின்றான். இதுதான் "அர்ரஹீம்" என்னும் திருப் பெயரின் தத்துவம் என்று அழகாக முடிக் கிறார் ஸர். எட்வின் ஆர்னால்டு

அவன் கருணை நோக்குக்கு தீர்க்கதரிசியும், பேரரசருமான ஸுலைமான் நபியும் ஒன்றுதான்;தன் இரட்சிப்பைத் தேடும் எறும்பும் ஒன்றுதான். ஆக எல்லா படைப்புகளும் அவனுக்கு ஒன்றுதான்

ஏனெனில், அவன் அருளாளன் நல்ல அன்பாளன்

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 3



அபூபக்ரு ஷிப்லீ (ரஹ்) அவர்களிடம், இறைவன், " அபூபக்ரே! நான் உம் பிழைகள் யாவையும் பொறுத்து, உம்மை எப்படி சுவர்க்கத்துக்கு உரிமையுடையவராக்கினேன் தெரியுமா?" என்று இறைவன் கேட்கிறான்.

"என்னுடைய நேரிய செயல்களின் காரணமாக இருக்கும்" என்று ஷிப்லீயவர்கள் பதில் கூறுகிறார்கள்.

"இல்லை!"

"உள்ளொன்று நினைத்துப் புறமொன்று செய்யாது தூய நோக்கோடு உனக்குத் தொண்டு செய்தேன். அது காரணமாக விருக்கலாம்."

"இல்லை!"

"என்னுடைய தொழுகை காரணமாவிருக்கலாம்... உற்றார் உறவினர் மீது பாசம் வைக்காது உன்மீது பற்றுக் கொண்டேன்... நல்லோர் உறவுக்காக நாடு முழுதும் சுற்றினேன்... கல்வியைத் தேடி காசினியெல்லாம் அலைந்தேன்...!" இவ்வாறு ஒவ்வொரு காரணமாகக் கூறுகிறார்களாம் ஷிப்லீ (ரஹ்).

"இறையே! என்னுடைய நற்செய்கை வேறெதுவும் நினைவிலில்லை...!" என்று இறுதியாகப் பதிலளிக்கிறார்கள் அப்பெரியார்.

அபூபக்ரே! ஓரிரவு நீர் பக்தாது நகரத்துத் தெரு வீதி ஒன்றின் வழியாகப் போய்க் கொண்டிருந்தீர். பனியின் கொடுமையால், குளிர் பொறுக்காது ஒரு பூனைக் குட்டி வெடவெடவென்று நடுங்கிப்போய் ஒரு சுவர் ஓரமாக ஒதுங்கிக் கிடந்தது.

அப்பொழுது நீர் அப்பூனைக் குட்டியின் மீது இரக்கங்கொண்டு, அதற்குச் சூடு கொடுப்பதற்காக வேண்டி உம் மேலங்கிக்குள் வைத்து அதைக் காப்பாற்றினீர். நீர் அப்பூனைக் குட்டியின் மீது இரக்கம் காண்பித்த அன்றே, நான் உம் பேரில் இரங்கி உம் பிழைகள் அனைத்தையும் பொறுத்தேன்" என்று இறைவன் பதிலளிக்கிறான்.

இறைவன் எத்தகைய இரக்கத்தையும், அன்பையும் நம்மீது சொரிகிறான் என்று எண்ணிப் பார்த்தால் நம் சிந்தனையே மயங்கும்.

"அவன்தான் கர்ப்பக் கோளறைகளில் தான் விரும்பியவாறு உங்களை வடிவமைக்கிறான்..." (குர்ஆன் 3:6) என்று அல்லாஹ் திருமறையில் கூறுகிறான். அந்த கர்ப்ப காலத்திலிருந்தே, அவன் அருள் நம்மீது பொழிய ஆரம்பிக்கிறது.

இஸ்ரவேலர்களுக்கு அனுப்பப்பட்ட 'தௌராத்' என்னும் வேதத்தில் அவன் சொல்லுகிறான்:

"ஆதமுடைய மகனே! உன் தாய் வயிற்றில் உனக்குத் தரிக்கத் தலம் தந்தேன்; அக் கருவறையில் நீ திடுக்கிடாதிருக்க, உன் முகத்துக்கு ஒரு முகமூடியிட்டேன்; இன்னும் செவ்வையாக அங்கே நீ சாய்ந்து கொள்ள வலப்புறமும் இடப்புறமும் உன் தாய் வயிற்றினுள்ளே சாய்மானங்கள் தந்தேன்; உன் தாய் புசிக்கும் உணவின் வாடை வீசாமல் இருப்பதற்காக உன் முகத்தைத் தாயின் முதுகுப் புறம் பார்த்திருக்கச் செய்தேன்...

உன் தாய் வயிற்றிலிருந்து நீ வெளியேறும் பொழுது உனக்குக் கடிக்கப் பல்லில்லை; பிடிக்கக் கையில் வலுவில்லை; நடக்கக் காலில் திராணியில்லை; உன் இயல்புக்கு ஏற்ற உணவை உன் தாயிடமிருந்து வெளிப்படச் செய்தேன்; இன்னும் உன் தாய் தந்தையரின் உள்ளங்கள் உன்மீது பாசங்கொள்ளச் செய்தேன்; உன் வயிறு நிரம்பினாலொழிய அவர்கள் உண்ணமாட்டார்கள்; நீ உறங்கினாலொழிய அவர்கள் கண்ணயர மாட்டார்கள்...

இவ்வளவு மிருந்தும் உன் முதுகு பலத்து, இடை வலுத்து நீ ஆளானதும் எனக்கு மாறு செய்கிறாய். இன்னும் நானிருக்க, நான் படைத்த படைப்புகளின் மீது (அவர்கள் காப்பார்கள் என்றெண்ணி) நம்பிக்கை வைக்கிறாய். நீ பாவம் செய்யும் பொழுது மற்றவர்களுக்கு மறைக்கிறாய்; தனித்து என்னுடன் போருக்கும் நிற்கிறாய்...

"ஆனால் நானோ நீ கூப்பிட்டால் பதில் கொடுக்கிறேன்; கேட்டால் தருகிறேன்; பாவ மன்னிப்புக் கோரி என்னளவில் திரும்பினால் சேர்த்துக் கொள்கிறேன்" என்று மீண்டும், மீண்டும் தன் கருணையுள்ளத்தை மிக்கோனாகிய ஆண்டவன். வெளிப்படுத்துகிறான் அருள்

பாவிகளையும் கூட அவன் அருள் நோக்கு புறக்கணிப்பதில்லை. "அல்லாஹ் பிழை பொறுப்பவன்; இன்னும் கிருபை செய்பவன்," என்று தன்னருளைப் பற்றி அவன் வலியுறுத்திக் கொண்டே தானிருக்கிறான்.

ஒரு தடவை "தாவூதே! பாவிகளுக்கு நற்செய்தி கூறுவீராக! இன்னும் உண்மையாளருக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக!" என்று ஹல்ரத் தாவூது நபியவர்களுக்கு இறைவன் அறிவித்தான்.

நபி தாவூது கலீபத்துல்லாஹ் ஆச்சரியப்பட்டார்கள். பாவிகளிடத்தில் போய் நற்செய்தி என்ன சொல்ல வேண்டியிருக்கிறது என்று எண்ணமிட்டவர்களாக,

''இறைவா! பாவிகளுக்கு நான் எவ்விதம் நற்செய்தி சொல்ல வேண்டும்? இன்னும் உண்மையாளரை நான் எவ்வாறு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வது?" என வினவினார்கள்.

"தாவூதே! பாவத்தை மன்னிப்பதில்தான் என் மகிமையிருக்கிறது என்று பாவிகளுக்கு நற்செய்தி கூறுவீராக! என் நீதி யாரையும் விடாது. தங்களுடைய நற்செய்கைகளைப் பற்றிப் பெருமை கொண்டு திரிய வேண்டாமென்று 'ஸித்தீகீன்' (உண்மையாளர்)களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக" என்று தன் நீதி நோக்கை வலியுறுத்தினான் இறைவன்

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 4

(கருணையாளனின் கடமை!)



...உங்களுடைய ரப்பு (உங்களுக்குக்) கிருபை செய்வதைத் தன்மீது (தனக்குத் தானே) கடமையாக்கிக் கொண்டான்... (குர்ஆன் 6:54)

என்று இறைவன் தன் திருவேதத்தில் கூறியிருக்கிறானல்லவா? அக்கருணையைத்தான், "பிஸ்மில்லாஹி..."அருளாளனும் அன்புடையோனுமாகிய ஆண்டவனின் திருநாமத்தால் என்னும் சொற்றொடர் எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது.

ஸுப்யானுத் தவ்ரீ (ரஹ்) என்ற பெயருடைய தூயவர் ஒருவர் இருந்தார்கள். உடல் இச்சைகளையும், உலக ஆசைகளையும் சுட்டெரித்த அவ்வுத்தமர், தாம் அறியாமல் செய்த பிழைகளுக்காக ஆண்டவன் தண்டிப்பானோ என்று நினைந்து, நினைந்து அழுவார்கள்.

அவர்கள் காலம் முடிந்ததும், இறைவன் பக்கம் சென்று விட்டார்கள். அவர்களுடைய நெருங்கிய நண்பர் ஒருதடவை ஸுப்யானுத் தவ்ரீயைக் கனவில் கண்டு,

"தூயவரே! உங்களை இறைவன் எப்படி நடத்தினான்?" என்று வினவினார்.

''அல்லாஹ் என்னைத் தன் சமூகத்தில் நிறுத்தி, "ஸுப்யான் உம் இறைவன்தான் அளவற்ற அருளாளனும், கருணையாளனும், பாவங்களை மன்னித்து அருள்பவனும் ஆயிற்றே! நீர் ஏன் ஓயாது அழுது கொண்டிருந்தீர்? என் கிருபையையும், காருண்யத்தையும், அன்பையும் அறிந்திருந்தும் நீர் அழுவதற்கு வெட்கப்பட வில்லையா?" என்று இறைவன் என்னிடம் கேட்டான்" - எனப் பதிலிறுத்தார்களாம் ஸுப்யானுத் தவ்ரி (ரஹ்).

தன் கருணையையும், அன்பையும் பற்றி உலகத்தோர் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்றே ஆண்டவன் விரும்புகிறான். ஆகவே தான்,

''இன்னும் உங்கள் மீது தன்னுடைய அருட் கொடைகளை வெளிப்படையாகவும் அந்தரங்கமாகவும் நிரப்பமாக்கி வைத்துள்ளான் என்பதையும், நீங்கள் பார்க்கவில்லையா?.. (31:20)

என்று தன் அருளையும் அன்பையும் மனிதனுக்கு நினைவூட்டுகிறான் ஆண்டவன். அவன் அருள் கொடைகள் ஒன்றா, இரண்டா?

"அல்லாஹ் எத்தகையவன் என்றால், வானங்களையும், பூமியை யும் அவன் படைத்தான்... இன்னும் சூரியனையும், சந்திரனையும் (தத்தம் பாதைகளில்) இரண்டும் ஒழுங்காகச் செல்லும் நிலையில் உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்தான். மேலும், எவற்றை அவனிடம் நீங்கள் கேட்டீர்களோ அனைத்திலிருந்தும் உங்களுக்குக் கொடுத்தான்; அல்லாஹ்வின் அருட் கொடைகளை நீங்கள் எண்ணுவீர்களாயின் அதனை நீங்கள் கணக்கிட முடியாது..."(14:32-34)

என்று இறைவனின் அருள் தன்மையைப் பிரகடனப்படுத்துகிறது திருக்குர்ஆன்.

தமாஸ்கஸ் (திமஷ்கு) ஸுல்தான் ஓர் இரவு நகர் சோதனை செய்து வரும்போது இப்னு ஸுலூல் என்னும் குயவனைக் கண்டார். நித்திரையில் ஆழ்ந்திருந்த இப்னு ஸுலூலை தம் அரண்மனைக்கு அப்படியே தூக்கிச் செல்லுமாறு கட்டளையிட்டார்.

பணியாட்களும் இப்னு ஸுலுலை விழிப்புக் காட்டாது, அரசு மாளிகைக்கு எடுத்துச் சென்றனர். அழகிய ஆடைகளும், அணிமணிகளும் தன் மேனியை அலங்கரிக்கக் கண்டு அதிசயப்பட்டு நின்ற இப்னுஸுலூலிடம் ஸுல்தான் கூறினார்:

"இப்னு ஸுஹூல் சிந்தித்துப் பார்! ஓர் அரசன் உன்னைத் தன் நேசத்துக்கு உரியவனாகக் கருதித் தன் தர்பாருக்கு அழைத்துச் செல்கிறான். அரச தர்பார் நடக்கும் மாளிகையின் தரையெல்லாம் பசும் பொன் பதியப்பட்டிருக்கிறது. அதன் மீது அழகிய மலர்கள் தூவப்பட்டிருக்கின்றன. அம் மாளிகையின் முகடெல்லாம் நன் முத்துகள் ஒளி சிந்தப் பிரகாசிக்கின்றன.

"பிறகு அரசன் உன்னை விருந்துக்கு அழைத்துச் செல்கிறான். நீ விரும்பும் உணவெல்லாம், பழமெல்லாம் உன்விரல் அசைவிலே உன் முன் வருகின்றன. நீ பார்த்து நடப்பதற்காக ஒரு பொன் விளக்கு தொங்குகிறது. உன் படுக்கையைச் சுற்றி மணிகள் பதித்த கறுப்பு நிறத் திரைச் சீலைகள்.

சூட்டைத் தணிக்கத் தென்றல் வீசச் செய்கிறான் அவ்வரசன். தாகத்துக்கு குளிர்ந்த பானங்களை ஊற்றச் செய்கிறான்; சுற்றியுள்ள மலர் வனங்களில் உல்லாச உடையுடுத்தி, இன்னிசை எழுப்பும்படி நல்லிசைவாணர்கள் குழுமியிருக்கின்றனர்.

"நெடிய அலைகள் நிமிர்ந்தோடி வரும் நீலத் திரைக்கடலை அதோ பார்! பாய்ந்து வரும் அலைகளிலே சாய்ந்து செல்லும் மரக்கலங்களைப் பார்! மாசறு பொன்னும், வலம்புரி முத்தும்,வாணிபப் பொருள்களும் ஏற்றிச் செல்லும் மரக் கலங்களைப் பார்!" என்று மாளிகையிலிருந்தே மாகடலைச் சுட்டிக் காண்பிக்கிறான் அம்மன்னன்.

''இன்னும் அம்மாளிகையில் உனக்குத் துணையாக சுற்றத்தையும், நட்பையும் சூழ வைக்கிறான் அவ்வரசன். படைப்பினங்கள் வாழும் விந்தையை, இயற்கையின் இன்பக் கருவூலங்களைக் காட்டுகிறான்; பவழமும் நன்முத்தும், அம்பரும் தந்தமும், மாணிக்கமும் மரகதமும், வைரமும் வைடூரியமும் உனக்கு வாரி இறைக்கின்றான் அம் மாமன்னன்.

இத்தனையும் தந்த அரசன் தன் மாளிகையின் உள் கதவிலே எழுதி வைக்கிறான்:

'எனக்குப் பணிவிடை செய்; என் கட்டளைகளுக்கு அடங்கி நட; இம்மாளிகையிலிருந்து நீ ஒருநாள் வெளியேறுவாய்; அப்பொழுது இன்னும் அதிகமான இன்பங்கள் பெற நான் வழி செய்கிறேன்.'

"இந்நிலையில் நீ இவ்வளவும் தந்த அரசனைப் புகழ மாட்டாயா?" என்று இப்னு ஸுஹூலிடம் கேட்டார் ஸுல்தான்.

ஆம்! ஒரு மாமன்னன் இவ்வளவையும் நமக்குத் தந்தருள்கிறான். அல்லாஹ்வே அம்மாமன்னன்; அவன் வானத்திலே மணிகளைப் பதித்திருக்கின்றான்; அவன் பூமி பசும் பட்டாடை போர்த்தியிருக்கிறது. அதிலுள்ள பொக்கிஷங்களெல்லாம் மனிதனின் இன்பத்திற்காகப் பரந்து கிடக்கின்றன.

பகலிலே கதிரவனும், இரவிலே தண்மதியும், விண்மீன்களும் நமக்கு ஒளி தருகின்றன. அசைந்து வரும் தென்றல் நம்மைக் குளிர்விக்கிறது; நம் மரக்கலங்களை நீந்தச் செய்கிறது. இனிய பொழில்களும், நெடிய வயல்களும் நிறைந்த அவன் பூமியைக் கடல்கள் சுற்றி வளைத்து நிற்கின்றன; அக்கடல்களில் நின்றெழும் கார் முகில்கள் மழை பொழிகின்றன. இறைவன் தோற்றுவித்திருக்கும் இந்த இன்பப் பூமியிலே மனிதன் ஆனந்தமாகச் சுற்றி வருகிறான்.

"இந்தப் பூமியின் இருள் நிறைந்த வாயில்களைத் தாண்டி இன்னும் பெரிய ஓர் இன்பபுரிக்குப் பயணமாவாய்; என்னை நேசித்தவனாக வாழ்ந்திரு; என் கட்டளைகளுக்கு அடங்கி நட, பேரின்ப வாழ்வு பெறுவாய்" என்று எழுதப்பட்டிருப்பதை மனிதன் பார்க்கிறான்; படிக்கிறான்.

இறைவனின் கணக்கிலடங்கா அருள் கொடைகளைக் கண்ட இப்னு ஸுஹூலின் அகக்கண் திறந்தது; குயவன் இப்னு ஸுஹூலின் கண்கள் திறந்தவாறு, நம் கண்களும் திறக்க வேண்டும்.

ஆழ்கடலும், நீள் மலையும்; செங்கதிரும், விண்மீனும், நீலவானும், கோலமா மதியும் படைத்த அவன் கருணையாளன். தன்னை நேசித்து நடக்க வேண்டும் என்று கூறுகிறான், பிறரையும் நேசித்து நடக்க போதிக்கிறான்.

"நாம் உமக்குக் கருணை புரிய வேண்டுமாயின் நீர் மற்றவர்களுக்குக் கருணை காட்டும்.

எவர் அவ்வாறு கருணை காட்டினாரோ நிச்சயமாக அவருக்கு நான் கருணை காட்டுவேன்.

மேலும் என் கருணையைப் பொழிந்து அவரை சுவர்க்கத்தில் புகுத்துவேன்" என்று ஹல்ரத் மூஸா நபிக்கு இறைவன் வஹீ அறிவித்தான்.

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 5

(அவன் கருணையாளன்)



ஜப்பான் நாட்டை சேர்ந்த ஒருவர் தன்னுடைய வீட்டை புதிப்பிப்பதற்காக மரத்தாலான சுவற்றை பெயர்த்து எடுத்து கொண்டு இருந்தார்.ஜப்பான் நாட்டில் பெரும்பாலும் வீடுகள் மரத்தாலயே கட்டப்பட்டிருக்கும் இரண்டு கட்டைகளுக்கு இடையில் இடைவெளி விட்டு கட்டப்பட்டிருக்கும்.

வீட்டு சுவற்றை பெயர்த்து எடுக்கும்போது இரண்டு கட்டைகளுக்கு இடையில் ஒரு பல்லி சிக்கி இருப்பதை பார்த்தார்.அது எப்படி சிக்கி இருக்கிறது என்று அந்த பல்லியை சுற்றி பார்த்தார்,அவர் அப்போதுதான் கவனித்தார். வெளி பகுதியில் இருந்து ஆணி அடிக்கும்போது அந்த ஆணி பல்லியின் காலில் இறங்கி இருக்கிறது.

அவருக்கு ஆச்சரியமாக இருந்தது அந்த ஆணி அடித்து குறைந்தது 3 வருடம் ஆகி இருக்கும். இந்த பல்லி 3 ஆண்டுகள் உயிருடன் எப்படி இருந்தது இதை நாம் கண்டு பிடித்து ஆக வேண்டும் என்று மேற்கொண்டு வேலை செய்யாமல் அந்த பல்லியை கண்காணித்து கொண்டு இருந்தார்

சிறிது நேரம் கழித்து இன்னொரு பல்லி அதன் அருகில் வருவதை கண்டார்.அந்த பல்லி தன் வாயில் இருந்து உணவை எடுத்து சுவற்றில் சிக்கிக் கொண்டு இருந்த பல்லிக்கு ஊட்டுவதை பார்த்ததும் அவருக்கு தூக்கி வாரிப்போடது 3 ஆண்டுகளாக இந்த பல்லி சுவற்றில் சிக்கி இருந்த தன் சக பல்லிக்கு உணவு அளித்து வந்து உள்ளது.

ஒரு பல்லி தன் சக பல்லிக்கு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் 3 ஆண்டுகள் உணவளித்து வந்துள்ளது. ஒரு பல்லியால் முடியும்போது உங்களால் முடியாதா...

وَمَا مِنْ دَآ بَّةٍ فِى الْاَرْضِ اِلَّا عَلَى اللّٰهِ رِزْقُهَا وَ يَعْلَمُ مُسْتَقَرَّهَا وَمُسْتَوْدَعَهَا كُلٌّ فِىْ كِتٰبٍ مُّبِيْنٍ

இன்னும், உணவளிக்க அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்ளாத எந்த உயிரினமும் பூமியில் இல்லை; மேலும் அவை வாழும் இடத்தையும் (இருக்கும்) இடத்தையும், அவை (மடிந்து) அடங்கும் இடத்தையும் அவன் அறிகிறான். இவையனைத்தும் (லவ்ஹுல் மஹ்ஃபூல் என்னும்) தெளிவான புத்தகத்தில் (பதிவாகி) இருக்கின்றன. (குர்ஆன் : 11:6)

இறைவனின் தோழராம் தபி இப்ராஹீம் (அலை) அவர்கள் பாலைவனத்தில் ஒரு கூடாரமடித்துத் தங்கியிருந்தார்கள். பாறையையும் உருக்கும் கொடும் வெயிலில் அனலாக கழன்று கொண்டிருந்தது.

இரண்டு நாட்களாக தாகத்துக்குத் தண்ணீர் கிடைக்காமல், பாலை வனமெங்கும் அலைந்து திரிந்து, நா உலர்ந்து, பேசவும் சக்தியற்று முதியவர் ஒருவர் நபியவர்கள் கூடாரத்துக்கு வந்து சேர்த்தார்

அவருடைய மூக்கிலும், முகத்திலும் புழுதி அப்பிக் கொண்டிருந்தது. மெலிந்து எலும்புந் தோலுமாகி விட்ட அவருடைய ஓட்டகம். கூடாரத்தின் முன்னே வந்ததும், நிற்க வலுவற்று, முகத்தைத் தரையில் சாய்த்துக்கொண்டு படுத்துவிட்டது.

தண்ணீர் கேட்கவும் திராணியற்று, களைத்து நின்ற கிழவரைக் கண்ட, இப்ராஹிம் நபி கூடாரத்திலிருந்தோர் ஒரு குவளை நிறைய நீர் கொண்டு வந்து கொடுத்தனர்.

நடுங்கும் கரங்களால் அதனைப் பெற்ற அம்முதியவர் தம் தாகத்தையும் பாராது, தவித்து நின்ற தம் ஓட்டகத்தின் வாயிலே நீரை ஊற்றினார். சூரியனின் கதிர்கள் அப்பாலையிலே பொன்னொளி பாய்ச்சிக் கொண்டிருந்தது. கதிரவனை வணங்கும் பழக்கமுடைய அம்முதியவர் வானக் கோடியிலே வட்டமிட்டு நின்ற சூரியனை நோக்கி ஒரு சிறங்கைத் தண்ணீர் தெளித்தார்.

இதைப் பார்த்த இப்ராஹீம் நபியவர்கள், "அல்லாஹ்வின் அருள் கொடையாம் தண்ணீரை அவனால் படைக்கப்பட்ட சூரியனுக்கு இறைக்கும். நம்பிக்கையற்ற இக்கிழவரை நீர் அருந்த விடாதீர்கள்" என்று கட்டளையிட்டார்கள்.

படபடக்கும் கையோடு, அக்குவளையை ஏந்தி நின்ற பெரியவரின் முகம் வாடிவிட்டது: கைக்கெட்டில் நீர் வாய்க்கெட்டாது போனதைக் கண்ட அவர் நெஞ்சமும் வதங்கி விட்டது.

ஆனால் அதே நேரந்தில் சுவனத்தின் ஒளி பெற்று சொர்ண மயமாய்த் தோன்றிய ஓர் உருவம் குளிர் நீர் நிறைந்த ஒரு குவளையை பெரியவரின் கையிலே கொடுத்தது.

தம் கூடாரத்திலேயே தம் கட்டளைகளைப் புறக்கணிப்பவர் யாரோ இருப்பதாக எண்ணிய இப்ராஹிம் நபியவர்கள், நம்பிக்கையற்ற அம்மனிதர் தம் நீரை அருந்துவதை தடுப்பதற்காகக் கையை உயர்த்தினார்கள்.

அதே நேரத்தில் தெய்வீகப் பேரொளி ஒன்று, இறை தோழர் இப்ராஹிமின் கண்களிலே பட்டுத் தெறித்தது.

இறைவனின் தூதர் மீக்காயில் (அலை) அவர்களின் குரல் அப்பாலையிலே ஒலித்தது.

"இறையன்பர் இப்ராஹிம்! இறைவன் உம்மைக் கடித்து கொள்கிறான். கொளுத்தும் வெயிலிலே தவித்து வந்திருக்கும் இம்மனிதருக்கு, இறைவனின் அருள்கொடையாம் தண்ணீரையுமா நீர் கொடுக்க மறுக்கிறீர்? இறைவன் படைத்த பொருளை வணங்குபவராக இம்மனிதர் இருந்தாலுங்கூட இவர் கருணையைப் பார்த்தீரா? தம் தாகத்தையும் மறந்து, முதன் முதலில் வாயில்லாப் பிராணியான தம் ஒட்டகைக்கு அவர் தண்ணீர் கொடுத்தாரே! இம்மனிதர் செயலை ஆண்டவன் அறியாதவனா?

இவருக்கு தானியங்களையும், கன்று காலிகளையும், நில புலன்களையும், புத்திர களத்திரங்களையும் கொடுத்து அல்லாஹ் காப்பாற்றவில்லையா? அவர் முடிவு எப்படியாகும் என்று இறைவன் தானே நன்கறிவான். அவர் இறுதியிலே இறைவனின் பேரொளியைப் பெறுவாரா மாட்டாரா என்பது உமக்குத் தெரியுமா ?

"அறுபதாண்டுகளாக இவரிடம் பொறுமையோடு, கருணை பூண்டு இரக்கங் காட்டி வந்திருக்கிறான் இறைவன்; ஆனால் நீர் இந்த ஒரு நாளைக்கு, இவர் மீது பொறுமையுடன் கருணைபூண்டு இரக்கங் காட்ட உம் உள்ளம் மறுத்து விட்டதே! இப்ராஹீம்! இறைவனிடத்தில் பிரார்த்தனை செய்யும். புவியில் அவன் அருள் பெருகட்டும்."

அப்பேரொளியும், அருளொலியும் மறைந்து விட்டன. பாலையிலே மீண்டும் நிசப்தம்.

முதியவரின் கரங்களைப் பற்றிப் பிடித்த நபி இப்ராஹீம் (அலை), "அருளும், அன்பும், கனிவும் கருணையும் நிறைந்த அல்லாஹ் உம்மை மன்னித்தது போல, என்னையும் மன்னித்தருள்வானாக," என்று உளமுருகக் கூறினார்கள்.

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 6

(அறவழி நின்ற அபூதர் கிபாரீ (ரலி)



(ஆதார நூல் : மௌலானா M. அப்துல் வஹ்ஹாப் - தித்திக்கும் திருமறை - பாகம் 2. பக்கம் 330)

இப்படி "சத்தியத்தை எடுத்துரைக்கும் துணிவு ஜிஹாதுக்கு - இறைவன் பாதையில் உயிரை அர்ப்பணிப்பதற்கு - சமமாகும். அதிலும் யதேச்சாதிகாரப் (சர்வதிகாரப்) போக்குடையோர் முன்னே (அவருக்கு பிடிக்காது எனத் தெரிந்தும்) நியாயத்தை எடுத்துக் கூறுதல் மிகப் பெரும் ஜிஹாது;" ஆகும் எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஹஸ்ரத் அபூதர் கிபாரீ (ரலி) அவர்கள் இவ்வாறு அஞ்சாது நியாயத்தை எடுத்துரைப்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள்.

குலபாவுர் ராஷிதீன் (நேர்வழி பெற்ற கலீபாக்கள் நால்வர்) காலத்திலும் இஸ்லாமிய ஆட்சி அல்குர் ஆன் வகுத்த வழியிலும், அண்ணல் நபி பெருமானார் வாழ்ந்து காட்டிய முறையிலும் செவ்வனே நடைபெற்றது. அது இஸ்லாத்தைப் பொறுத்தவரை மிகச்சிறந்த பொற்காலமாகவே வரலாற்றாசிரியர்கள் கணிக்கிறார்கள்.

அதன் பிறகு உமய்யா ஆட்சியை ஹஸ்ரத் முஆவியா நிறுவியதும், நிலைமை மாறலாயிற்று. எளிய வாழ்வு ஏற்றமுடையதாகக் கருதப்படவில்லை; பணம் ஆர்ப்பரித்துப் பேசலாயிற்று. ஏழை மக்களின் நலன் புறக்கணிக்கப்பட்டது; பொன்னும், வெள்ளியும் வைத்திருப்போரின் செல்வாக்கு ஓங்கலாயிற்று, தங்கள் செல்வத்தால் எதையும் சாதித்துக் கொள்ளலாம் என்ற மமதையும், மனப்பான்மையும் தலை தூக்கலாயிற்று.

இதை எதிர்த்து ஹஸ்ரத் அபூதர் (ரலி) அவர்கள் ஒரு சோஷலிசப் புரட்சியே செய்யத் தொடங்கிவிட்டார்கள்; தங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றாமல் செல்வர்கள் பணம் சேர்ப்பதிலேயே கண்ணும், கருத்துமாகயிருப்பதைக் கடுமையாகக் கண்டித்தார்கள். மக்கள் ஆதரவு அவர்கள் பக்கம் திரளவே செல்வர்கள் செய்வதறியாது ஹஸ்ரத் முஆவியாவிடம் முறையிட்டார்கள்.

தங்களை அரசவையில் வந்து சந்திக்குமாறு ஹஸ்ரத் அபூதர் (ரலி) அவர்களுக்கு சேதியனுப்பினார்கள் முஆவியா. எவரையும், எங்கும் சந்திப்பதற்கு அஞ்சா அப்பெருமகனார் அரசவைக்கும் வந்தார்கள். ஒல்லியாக, ஒடிந்து விழும் உடல்வாக்கோடு இருந்த அவர்கள், ஒரு கிராமவாசியைப் போல் காணப்பட்டார்கள்.

ஆனால் அவர்களைப் பார்த்ததும் ஹஸ்ரத் முஆவியா மரியாதையுடன் எழுந்து சென்று அவர்களை வரவேற்று, தங்களுக்குச் சரியாசனத்தில் அமரச் செய்தார். இதற்கு முன்னரே சுவை மிக்க பற்பல உண்டியுடன் ஒரு பெரும் விருந்தை படைக்க ஏற்பாடும் செய்திருந்தார்கள்.

சிறிது நேரம் உரையாடிவிட்டு, அழகிய விரிப்புகள் மீது அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த அறுசுவை உண்டிகள் முன் அபூதர் கிபாரி (ரலி) அவர்களை அமர்த்தி, "உண்ணுங்கள், உண்ணுங்கள்' என்று உபசரித்தார்கள் முஆவியா

ஆனால், அம்முதியவர் அபூதர் கிபாரி (ரலி) அவர்கள் ருசிமிக்க எந்த உணவுப் பொருள்மீதும் கை வைக்கவில்லை. ஓரிரு ரொட்டித் துண்டுகளை மட்டும் புசித்து, கை கழுவி விட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் முஆவியா காரணம் கேட்பதற்கு முன்னரே, "ஒரு வாரத்திற்கு இரண்டு சேர் கோதுமையுடன் (ஒன்றரை கிலோவுக்கு சற்று அதிகம்) நான் போதுமாக்கிக் கொள்கிறேன் அதற்கு மேல் எனக்கு உணவு தேவையில்லை. இந்தப் பழக்கத்தை நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் காலத்திலிருந்தே நான் ஏற்படுத்திக் கொண்டுள்ளேன். இறைவன் ஆணையாகச் சொல்லுகிறேன் - பெருமானாரை மறுமையில் மீண்டும் சந்திக்கப் போகும்வரை இப்பழக்கத்தை விடமாட்டேன்.

அபூதர் கிபாரி (ரலி) அவர்கள் முஆவியாவைப் பார்த்து, "அபூஸுஃப்யானின் மகனே! நீர் நிரம்பவும் மாறி விட்டீர்; பழைய கரடு, முரடான வாழ்வை மறந்துவிட்டீர் போலும். இப்பொழுது மெல்லிய மாவில் செய்த ரொட்டியல்லாத வேறு உணவு உண்பதில்லை; விதவிதமான கறிகள் விரிப்பில் பரப்பி வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கின்றேன். காலையில் ஓர் உடை, மாலையில் ஓர் உடை என்று மாற்றுகிறீராம். ரஸுலுல்லாஹ் காலத்தில் நீர் இவ்வாறு இருந்ததில்லையே!" என்று, முஆவியா யிடம் விசாரிப்பதற்குள்,

மூஆவியாயே விசாரணையைத் தொடங்கி விட்டார்.

"இப்போது நிலைமை வேறு! நாம் அஜமிகள் (அரபியரல்லாதார்) இடையே வாழ்கிறோம். நாம் இப்படியில்லாவிட்டால் அவர்கள் நம்மை இழிவாக எண்ணிவிடுவார்கள்!" என பதில் சொன்னார் முஆவியா.

"என்னுடைய வாழ்க்கை முறையை நான் மாற்றிக் கொள்ளப் போவதில்லை. ஏனென்றால் மறுமையில் அண்ணல் நபியவர்களின் அருகாமையில் இடம் பெற விரும்புகின்றேன்!" என்று பதிலளித்து விட்டார்கள் அபூதர் (ரலி) அவர்கள்.

இப்பொழுது அமீர் முஆவியா தங்கள் பிரச்னையை அணுகினார்.

"யா அபூதர்! என்னுடைய ஆட்கள் உங்களைப் பற்றிப் புகார் செய்கிறார்கள். ஏழை மக்களை அவர்களுக்கு எதிராகத் தூண்டி விடுவதாய்க் குற்றம் சாட்டுகிறார்கள்"

"செல்வர்கள் ஏழைகள் நலனைப் புறக்கணித்துப் பணம் சேர்ப்பதைத் தானே நான் தடுக்க முயல்கிறேன். அல்லாஹு ஆலா போதித்திருக்கிறானே;

யார் பொன்னையும், வெள்ளியையும் சேமித்து வைத்துக் கொண்டு, அவற்றை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யவில்லையோ அவர்களுக்கு துன்புறுத்தும் வேதனையுண்டு என்று (நபியே) நீர் நன்மாராயம் கூறுவீராக" (9:34)

"இந்தத் திருவசனம் அஹ்லுல் கிதாப் (யூத, கிறிஸ்தவர்களுக்காக) அருளப்பட்டதல்லவா?" என்று முஆவியா இடைமறித்தார்கள்.

"இல்லை. இது அவர்களுக்கும், நமக்கும் பொதுவான போதனை' என்று சட்டென பதிலளித்தார்கள் அபூதர்(ரலி) அவர்கள்

"சரி, இருந்து விட்டுப் போகட்டும்!"

" இத்தகைய புரட்சிகரமான பிரச்சாரங்களிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளவேண்டும் என்று முஆவியாகிய நான் உங்களுக்கு ஆணையிடுகிறேன்"

"அல்லாஹ்வின் ஆணையாய்ச் சொல்லுகிறேன்! நான் உம் போன்றோரை எளிய வாழ்க்கையின் பால் அழைத்துக் கொண்டு தானிருப்பேன். இப்படி தலைமுறை தலைமுறையாகப் பொருள்சேர்த்து வருவதைக் கண்டிப்பேன். கண்ணை மூடிக் கொண்டு இறைவனின் கட்டளையை மீறி, பொன்னையும், பொருளையும் குவித்துக் கொண்டே போவீர்களானால், நரகத்தின் வேதனையைப் பற்றி உங்களுக்கு நினைவூட்டிக் கொண்டு தானிருப்பேன்"

"இல்லை. இத்தகைய பிரச்சாரத்தை நீங்கள் கைவிடுவது தான் உங்களுக்கு நல்லது?".

"வல்லாஹி! இந்த சொத்துகள் ஏழை மக்களிடம் வினியோகிக்கப்படாத வரையில் நான் என் பிரச்சாரத்தைக் கைவிடேன்" என்று குளுரைத்தார்கள் நீதிக்காகப் போராட எழுந்து விட்ட அந்த நேர்மையாளர் அபூதர் (ரலி)

"அபூதர்! இனி உங்களுக்கும் எனக்குமிடையே எந்த உறவுமில்லை. இதனால் உண்டாகக் கூடிய விளைவுகளைப் பற்றி உங்களை எச்சரிக்கிறேன்" என்று ஹல்ரத் முஆவியா (ரலி) அச்சுறுத்த முயன்றார்கள்.

"நமக்கு என்ன நேரும் என்று அல்லாஹ் விதித்திருக்கின்றானோ அதைத் தவிர வேறு என்ன விளைவுகள் உங்களால் உண்டாக முடியும்?" என்று மிகச் சாதாரணமாகச் சொல்லி விட்டு அரசவையை விட்டு வெளியேறினார்கள் ஹல்ரத் அபூதர் கிபாரீ (ரலி) அவர்கள்.

அவன் அருளாளன்தான் நல்ல அன்பாளன்தான் அதே நேரத்தில் கேள்விகணக்குகளைக் கேட்பதிலும் அவன் தீவிரமானவன்

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 8

(உணவு எங்கிருந்து வருகிறது ?)

ஹலரத் ஹாதமு அஸம்மு என்ற இறை நேசச் செல்வர் ஒருவர் இருந்தார்கள். பரம ஏழையாக இருந்த அன்னார் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவே இருந்தார்கள். தங்களுக்கும், தங்கள் சீடர்களுக்கும் அடுத்த வேளை உணவு எங்கிருந்து வரும் என்று அவர்களுக்கே தெரியாது; இருப்பினும் அதுபற்றிய கவலையே அவர்களிடம் காணப்படமாட்டாது.

இந்த நிலை அவர்களுடைய சீடர்களுக்குப் பேராச்சர்யத்தைக் கொடுத்தது.

فَلْيَنْظُرِ الْاِنْسَانُ اِلٰى طَعَامِهٖۤ

எனவே, மனிதன் **#தன்உணவின்** பக்கமே (அது எவ்வாறு பெறப்படுகிறது) என்பதை நோட்டமிட்டுப் பார்க்கட்டும்.(குர்ஆன் : 80:24)

என்ற வசனத்தை சீடர் மனதினில் வைத்து,

"யா ஷெய்கு! நம் அடுத்த வேளைச் சாப்பாடு எங்கிருந்து கிடைக்கப் போகிறது என்பது நமக்கே உறுதியில்லை; ஆனால் தாங்களோ எதைப் பற்றியும் கவலைப்படாமல், எப்பொழுதும் மகிழ்ச்சியும், மன நிறைவுங் கொண்டவர்களாகவே இருக்கிறீர்களே! இது எப்படி சாத்தியமாகிறது?" என்று அச்சீடர்கள் கேட்டார்கள்.

ஹாதமு அஸம்மு (ரஹ்) பதில் சொன்னார்கள்: ''நான்கு பேருண்மைகளை நான் மனதில் இருத்திக் கொண்டேன்.

1. எனக்காக அல்லாஹு தஆலா ஒதுக்கி வைத்திருக்கும் உணவுப் பொருளை என்னைத் தவிர வேறு யாரும் உண்ணப் போவதில்லை.

2. எனக்கென்று இடப்பட்டிருக்கும் வேலைகளை என்னைத் தவிர வேறு யாரும் செய்யப் போவதில்லை.

3. மரணம் ஒருநாள் வந்தே தீரும். அதிலிருந்து யாரும் தப்பித்துக் கொள்ளப் போவதில்லை.

4. நான் எங்கிருந்தாலும், என்ன செய்தாலும் இறைவன் என்னைப் பார்த்துக் கொண்டே இருக்கிறான்.

இப்பேருண்மைகள் தாம் கவலையைப் போக்கி, மன நிறைவைத் தருகின்றன" என்றார்கள்.

ரிபாயி நாயகம் அவர்கள் ஒருநாள் ஆற்றங்கரையில் அமர்ந்து தம் முரீதுகளுக்கு உபதேசித்துக் கொண்டிருக்கையில் ஒருவர்; கேட்டார்: 'எஜமானே! இறையண்மையில் நிலைத்திருக்கிறவர் – என்றால் என்ன?'

ரிபாயி நாயகம் அவர்கள் நவின்றார்கள் 'படைப்புகள் மீது ஆட்சி செலுத்துகிற தத்துவம் உள்ளவரே முத்தகீன்'

"அவரின் அடையாளம் என்ன? "

"உண்டு முடித்த பொருட்களுக்கு அவரால் மீண்டும் உயிர் கொடுக்க முடியும் "

இந்தச் சமயத்தில் தண்ணீரில் திரிந்து கொண்டிருந்த மீன்கள் துள்ளி துள்ளிக் கரையில் விழுந்தன.

ரிபாயி நாயகம் சொன்னார்கள்: 'இவற்றை நாம் சாப்பிட வேண்டுமென்று இந்த மீன்கள் இறைவனிடம் மன்றாடியிருக்கின்றன. எனவே இவற்றைச் சமைக்க ஏற்பாடு செய்யுங்கள்'

சிறிது நேரத்தில் மீன்கள் சமைக்கப்பட்டன. எல்லோரும் அவற்றை சாப்பிட்டு முடித்தார்கள். எஞ்சிய நடு முள்களும், வால்பகுதியையும் ஆற்றோரத்தில் வைக்கும்படி ஆண்டகை நாயகம் அவர்கள் பணித்தார்கள்.

அவற்றபை பார்த்து, '"உயிரை இழந்து விட்ட ஜடங்களே, அல்லாஹ்வின் உத்திரவு கொண்டு கட்டளையிடுகிறேன். உயிர் பெற்று விரைந்தோடுங்கள்" - என்று சொல்ல அக்கணமே அந்தக் கழிவுகள் மீன்களாய் உருவெடுத்துத் துள்ளித் தண்ணீரில் பாய்ந்தன.

கேள்விக் கேட்டவரைப் பார்த்து ஆண்டவர்கள் புன்னகைத்தார்கள். 'முத்தகின்களின் பண்பு என்னவென்று இப்போது தெரிந்து கொண்டீரா?'

இதைக் கவனித் கொண்டிருந்த அப்துல் மாலிக் ஸர்ரோஜ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் 'உண்மைதான். சாகாத மனிதரின் கட்டளைகள் சாகப் போவதில்லைதான்' என்றார்."

ரிபாயி நாயகம் அவர்கள் இதுபோன்று பல்வேறு அற்புதங்கள் நிகழ்த்தி இருக்கிறார்கள் அதன்மூலம் பலன் பெற்றவர்கள் ஏராளம். ஏராளம்.

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 9

(படைப்பினங்களில் மனிதன் சிறந்தவன்)

உலகில் உள்ள உயிரினங்கள் அனைத்தையும் படைத்தவன் இறைவன். கண்ணுக்கு தெரியாத உயிரினம் முதல் உருவத்தில் மிகப்பெரிய உயிரினங்கள் வரை பல்வேறு வகையான அமைப்பில் உயிரினங்களை இறைவன் படைத்துள்ளான். ஆனால் இறைவனின் படைப்பில் மிகவும் அற்புதமானது மனிதன். வேறு எந்த உயிரினங்களுக்கும் இல்லாத பல்வேறு சிறப்புகளுடன் மனிதனை இறைவன் படைத்துள்ளான்.

இதையே திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

'அத்தியின் மீதும், ஜெய்த்தூனின் மீதும் சத்தியமாக, தூர்ஸினாய் மலைத்தொடரின் மீதும் சத்தியமாக, அபயமளிக்கும் இந்த நகரத்தின் மீதும் சத்தியமாக, நிச்சயமாக நாம் மனிதனை மிக்க அழகிய அமைப்பில் படைத்திருக்கிறோம்' (திருக்குர்ஆன் 95:1-4)

அருள்மறையாம் திருக்குர்ஆனில் அல்லாஹ் தனது கட்டளைகளைச் சொல்லும் போது சிலவற்றை மிக அழுத்தமாக சொல்ல நினைத்தால், சிலவற்றின் மீது சத்தியம் செய்து சொல்வதுண்டு. அப்படிப்பட்ட செய்திகளில் மிகுந்த உண்மைத்தன்மையும், பல அத்தாட்சிகளும் இடம் பெற்றிருக்கும்.

அப்படிப்பட்ட ஒரு செய்தியாகத் தான் மனித படைப்பை பற்றி ஏக இறைவன் குறிப்பிடுகின்றான். 'மனிதனை அழகிய அமைப்பில் படைத்திருக்கின்றோம்' என்று சொல்வதிலும் கூட ஒரு மறை பொருளை வைத்துச் சொல்கிறான்.

‘அழகு’ என்பது கண்ணோட்டங்களைப் பொருத்தது. ஒருவருக்கு அழகாய்த் தெரிவது, பிறருக்கு பிடிக்காமல் போகலாம். நிறங்களில், தோற்றங்களில், வடிவமைப்புகளில் அழகுணர்ச்சி வேறுபட்டு நிற்கலாம். அதில் உண்மையும் இருக்கலாம்.

இந்த வசனத்தில் ‘அழகிய அமைப்பில்’ என்ற சொல்லாடல் கையாளப்பட்டிருப்பதால் அழகையும் அமைப்பையும் இரண்டையும் சேர்த்தே அல்லாஹ் குறிப்பிடுகின்றான். மனிதன் அழகானவன், அழகிய வடிவத்தில் படைக்கப்பட்டிருப்பவன்.

உச்சந்தலை முதல் உள்ளங்கால்கள் வரை உள்ள உடல் உறுப்புகள் அனைத்தும் மனிதனுக்கு பயன்படும் வகையில் இறைவன் அமைத்திருக்கின்றான். வெளி உறுப்புகள், உள் உறுப்புகள் என்று எத்தனையோ உடல் உறுப்புகள் அற்புத படைப்பாய் அமைந்து மனித வாழ்க்கைக்கு உதவுகிறது.

சிரிப்பு, அழுகை, துக்கம், மகிழ்ச்சி, கோபம், அமைதி, என்று உருவமில்லா எத்தனை உணர்ச்சிகள். ஒன்றோடொன்று வேறுபட்ட தன்மை கொண்டாலும் குறிப்பிட்ட நிகழ்வுகளில் சரியான காலகட்டத்தில் அவை தன்னையறியாமல் வெளிப்படும் தன்மையை அளித்திருக்கிறான் ஏக இறைவன்.

மனிதன், உணவு, உரையுந்தலம் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் படைத்திருப்பதனால் அவன் மீது இறைவன் தன் விசேஷ அருளைப் பொழிந்திருக்கின்றான் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் படைப்பினங்களில் மனிதன் தான் சிறப்புடை யவன் என்பதையும் மறுக்க முடியாது.

ஏனென்றால் இதர படைப்புகளில் பல, மனிதனுக்குப் பயன்படுவதற்காகவே படைக்கப்பட்டிருக் கின்றன; அப்படைப்புகளின் மீது ஆதிக்கம் செலுத்தும் ஆற்றலும் அவனுக்கு அருளப்பட்டிருக்கிறது.

ஆதித் தந்தை ஆதம் (அலை) அவர்களுக்கு அமரர்களையே அடிபணியச் செய்தான் ஆண்டவன். இன்னும் படைப்பினங்களிலே சிறப்பினமாம் மனிதக்குலம், தான் உண்டாக்கும் உருவங்களுக்கே வணக்கம் செலுத்துவது தகாது.

ஒரே இறைவன் தவிர வேறெந்த சக்திக்கும் அக் குலம் தலைதாழ்த்தக் கூடாது. "வாழ்த்த வாயும், தாழ்த்தச் சென்னியும்," தந்த அத் தலைவன் ஒருவனுக்கே தொழுகையும், வணக்கமும் உரியன என்று எத்திக்கும் தித்திக்கும் இறையுணர்வை இசை முழக்கும் பரிசுத்தத் திருமறை கட்டளையிடுகிறது.

அல்லாஹ் அல்லாதவனையா, உங்களுக்கு நாயனாக நான் தேடுவேன் ? அவனோ உங்களை அனைத்துலகத்தாரையும் விட மேன்மையாக்கி வைத்தான். (7:140)

என்று தம் சமூகத்தினருக்கு இப்ராஹீம் (அலை) அறிவுறுத்தினார்கள் அல்லவா.

அதோடு மனிதனின் சிறப்புக்குச் சான்றாக இதர படைப்பினங்கள் எவ்வாறு அவனுக்குப் பயன்படும்படியாக ஆக்கப்பட்டுள்ளன என்பதையும் இறைவன் தன் திருமறையிவே குறிப்பிடுகிறான்.

அல்லாஹ் எத்தகையவனென்றால் கடலை உங்களுக்காக அவன் வசப்படுத்திக் கொடுத்துள்ளான். வானங்களில் உள்ளவை, பூமியில் உள்ளவை அனைத்தையும் தன்புறத்திலிருந்து உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ளான்." குர்ஆன் (45:12,13)

என்று மனிதனின் மாண்பினை எடுத்துரைக்கும் திருமறை.

வானங்களும், பூமியும், மாறி மாறி வரும் இரவு பகலும் கடலும் அதன் நீரைக் கிழித்துச் செல்லும் கப்பல்களும் வறண்ட நிலத்தை வளப்படுத்தும் வான் மழையும்: பூமியிலே பரந்து உயிர் வாழும் ஆடு மாடு போன்ற கன்று காலிகளும்; பல திசைகளிலும், திரும்பித் திரும்பி வீசும் காற்றும் மனிதனுக்காக **#மனிதனின்நன்மைக்காகவே** படைக்கப்பட்டிருக்கின்றன. என்று உறுதி கூறுகிறது (2:184).

..."மேலும், இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ளான்..." (16:12)

என்று கூறி மனிதனின் தனிச் சிறப்பை இறைவன் விளக்குகின் நான்.

உணவு, உடை, உறையும் தலம் ஆகியவற்றைப் பெறும் வகையில் மனிதன், விலங்கை விட விசேஷ அருளைப் பெற்றவனாக இல்லை என்பதைப் பார்த்தோம். என்றாலும் கூட "மற்றப் படைப்புகளெல்லாம் உன் நன்மைக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன" என்று இறைவனே மனிதனிடத்தில் கூறுகிறான்.

மனிதனிடத்தில் இருக்கும் எந்தச் சிறப்புக்காகக் கருணையுள்ள ரஹ்மான் மனிதனுக்கு இத்தகைய மேம்பாட் டைக் கொடுத்தான்?

இதைப் பற்றி இறவாப் புகழ் பெற்ற 'இஹ்யா' வாயிலாக இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) கூறுவதைப் பார்க்கலாம்:

"மிருகங்களை விட மனிதனுக்குச் சிறப்புத் தருவது அவன் அறிவு (அதை) வளப்படுத்தும் கல்வி) தான். மனிதன் தன் பலத்தால் வலுவால் சிறப்படைந் திருக்கின்றான் என்று சொல்ல முடியாது;

ஏனென்றால் ஒட்டகம் மனிதனிலும் வலுவுடையது. வீரத்தால் அவன் சிறப்புடையோன் என்று கூற முடியாது; ஏனெனில் சிங்கம், புலி போன்ற வனவிலங்குகள் இவனிலும் வீரமுடையவை; பெரும் அளவில் உண்ண முடிவதால் அவன் சிறப்புள்ளோன் என்றாலோ, காளை மாடு இவனிலும் அதிகமாகத் தின்னும்;

வீர்ய சக்தியால் மனிதன் சிறப்புக்குரியோன் என்று சொல்ல முடியுமா? சின்னஞ்சிறு ஊர்க்குருவி இவ்வகையில் மனிதனைவிட சக்தியுடையது. ஆகவே மனிதன் அறிவும் கல்வியும் கொண்டே சிறப்புப் பெற்றிருக்கின்றான்" என்று அப்பேரறிஞர் கூறியிருக்கிறார்கள்.

அறிவுக்கும், அறிவு தேடும் தூய பணிக்கும் இஸ்லாம் எத்தகைய உன்னத இடம் கொடுத்திருக்கிறது என்று தித்திக்கும் திருமறையே தெளிவுபடுத்துகிறது. மனிதனுக்கு அறிவை அருட் கொடையாகத் தந்த ஆண்டவன் தன் திருத்தூதருக்கு முதன்முதலில் எந்த வாக்கியத்தைக் கற்றுக் கொடுத்தான் தெரியுமா ?

"இக்ரஃ பிஸ்மி ரப்பிக... உம்முடைய ரப்பின் திருப்பெயரைக் கொண்டு நீர் ஓதுவீராக! அவன் எத்தகையவனென்றால் (அனைத்தையும்) படைத்தவன். மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து அவன் படைத்தான். ஓதுவீராக! உம்முடைய ரப்பு மிக்க தயாளமானவன் - அவன் எத்தகையோனென்றால் எழுதுகோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றை (யெல்லாம்) அவன் கற்றுக் கொடுத்தான் (96:1-5)

திருமறையில் இறைவன் அருளிய முதல் வாக்கியத்திலே மனிதனின் தூய பிரதிநிதி எம்பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்களை ஓதுமாறு அவன் பணிக்கின்றான். இன்னும் எழுதுகோலின் மூலமாக மனிதனின் அறிவும் கல்வியும் பெருக, தான் வழி வகுத்திருப்பதைச் சுட்டிக் காண்பிக்கிறான்.

தொடக்கத்திலேயே அறிவுக்கும், கல்விக்கும் இத்தகைய மகத்தான இடத்தைத் தந்திருக்கும் திருமறை, மனிதனுக்கு இறைவன் அளித்திருக்கும் பேரருளே அறிவுதான் என்று வலியுறுத்தும் திருமறை அறிஞர் உலகில் தித்திக்கும் தீஞ்சுவைக் காப்பியமாக திகழ்வதில் வியப்பேது?

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 10

(எவருடைய ஈமான் ஆச்சரியமானது என்று உங்களுக்கு தெரியுமா ?)

ஒரு தடவை நாயகம் (ஸல்) அவர்கள் தம் அன்புத் தோழர்களிடம், "எவருடைய ஈமான் ஆச்சரியமானது என்று உங்களுக்குத் தெரியுமா?" என வினவினார்கள்.

"நபிமார்களுடைய ஈமான்!" என்று பதிலிறுத்தார்கள் தோழர்கள்.

"நபிமார்களுக்கு வஹீ வந்து கொண்டிருக்கும்போது, அவர்கள் வியத்தகு ஈமான் கொள்ளாது எப்படி இருக்க முடியும்?" என்று திருப்பிக் கேட்டார்கள் பெருமானார்.

''மலாயிக்கா (வானவர்களுடைய) ஈமான் ஆச்சரியமானதாக இருக்கும்!" என்று சொன்னார்கள் நாயகத் தோழர்கள்.

"வானவர்கள் வஹீ கொண்டு வருபவர்கள். சுவர்க்கத்தையும், நரகத்தையும் நேரே பார்ப்பவர்கள். அப்படியிருக்க அவர்கள் ஈமான் கொள்ளாது, இருக்க முடியுமா?" என்று மடக்கிக் கேட்டார்கள் மாநபியவர்கள்.

"எங்களுடைய ஈமான் தான் ஆச்சரியமானது!" என்று மூன்றாவது முறையாக பதிலளித்தார்கள் தோழர்கள்.

"நபியாகிய என்னை நாள்தோறும் பார்த்துக் கொண்டிருக்கும் உங்களின் ஈமான் நம்பிக்கை இயல்பானது அதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்?" என்று எம்பெருமானார் மீண்டும் வினவினார்கள்.

இப்பொழுது பெருமானாரின் பிரிய தோழர்களுக்கு ஒரே ஒரு பதில் தான் மிஞ்சியிருந்தது.

"அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் தாம் இது பற்றி நன்கு அறிந்தவர்கள்;" என்று கூறி நாயகத்தின் நன்மொழியை எதிர்பார்த்து அமைந்தார்கள்

அப்பொழுது தான் வரலாற்றுப் புகழ்மிக்க - நம்மில் வறியவரையும், வல்லவரையும் வாழ்விக்கவல்ல வளமான பதிலைக் கொடுத்தார்கள் வள்ளல் நபியுல்லாஹ்.

பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

"எனக்குப் பின்னர் ஒரு கூட்டத்தினர் தோன்றுவர். அவர்கள் என்னைப் பார்த்திருக்க மாட்டார்கள்; எனக்கு வஹீ வந்ததைக் கண்டிருக்க மாட்டார்கள். வஹீ கொண்டு வந்த வானவரையும் பார்த்திருக்க மாட்டார்கள். வஹீயை அருள் செய்த வல்ல நாயனையும் பார்த்திருக்க மாட்டார்கள். சுவர்க்கம், நரகம் போன்றவற்றையும் பார்த்திருக்க மாட்டார்கள். எனினும் என்னை நம்புவார்கள்: எனக்கு வந்த வஹியை வளமார் திருக்குர்ஆனை நம்புவார்கள்:

வஹீ கொண்டுவந்த வானவரை - அவ்வானவரை அனுப்பி வைத்த வல்லவனை நம்புவார்கள். அவன் படைத்த சுவர்க்கத்தையும், நரகத்தையும் நம்புவார்கள் அவர்களுடைய ஈமான் தான் ஆச்சரியமான - வியத்தகு - ஈமானாக இருக்கும்!" என்று விளக்கம் கொடுத்தார்கள்

வேதநபி பெருமானார். எனவே நாம் ஈமான் கொண்டிருக்கின்றோம் என்பது உறுதி; ஆனால் இந்த நம்பிக்கை எவ்வளவு தூரம் நம் நெஞ்சில் ஆழமாகப் பதிந்திருக்கிறது என்று நாம் அடிக்கடி சோதித்துப் பார்த்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

ஏனென்றால் இறைவன் மீது நாம் ஈமான் கொண்டுள்ள அவனுடைய பேராற்றல், வல்லமை, அவனுடைய பார்வையிலிருந்து நாம் எந்நிலையிலும் தப்ப முடியாது என்னும் பேருண்மைகளைப் பூரணமாக உணர்ந்திருக்கின்றோமா ?

இன்னும் நாம் நம்முடைய ஈமானில் கொண்டுள்ள உறுதி ஆச்சரியமானதாக இருக்கும் என்று ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னரே அண்ணல் நபி பெருமானார் ஆணித்தரமாகக் கூறியுள்ளார்கள்.

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 11

(நமக்கு முன்னாடி ஒரு கைத்தடி)



"எல்லோரும் இந்நாட்டு மன்னர்!" என்று ஒரு கவிஞர் பாடினார்.

இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள், "ஒவ்வொரு மனிதனும் ஓர் அரசனே ஆவான்" என்று கூறினார்கள்.

எப்படி? இமாம் அவர்களே நிரூபிக்கிறார்கள் பாருங்கள்:

"இறைவனின் அடியானாகிய மனிதனுக்கும் அரசாங்கம் இருக்கிறது. அந்த அரசின் எல்லைகள் அவனுடைய உடலும் உள்ளமும் ஆகும். மனிதனின் ராணுவமோ அவனுடைய இச்சையும், கோபமும், பேராசையும்தாம். அவனுடைய நாவும், அவனுடைய இரு கண்களும் கைகளும், கால்களும், இதர உறுப்புகளுமே அவனுடைய குடிமக்கள் ஆவர்.

மனிதன் இவற்றின் மீது ஆட்சி செலுத்துவானாகில் அவன் தன்னுடைய உலகில் ஓர் அரசனின் அந்தஸ்தைப் பெற்றுக் கொள்கிறான். மாறாக இவற்றுக்கு மனிதன் அடிமையாகி, இவை தன் மீது ஆட்சி செலுத்தும்படி அனுமதி அளித்து விட்டானானால், அவன் அடிமையேதான்"

இறைநேசச் செல்வர் ஒருவரைக்கண்டு, கண்ணியப்படுத்தி வரப் புறப்பட்டார் ஓர் அரசர். துறவியின் சன்னிதானத்தில் வெகுநேரம் அமர்ந்து, அவர் நல்லுரைகளைச் செவிமடுத்த பின்னர், விடை பெற்றுக்கொள்ளும் நேரம் வந்தது.

"தங்களுக்குத் தேவையானது எதுவும் இருந்தால் என்னிடம் கேளுங்கள். அதனை உங்களுக்கு உடன் தர ஏற்பாடு செய்கிறேன்" என்றார் அரசர்.

"அரசரின் தேவையை ஓர் அடிமை எப்படிப் பூர்த்தி செய்ய முடியும்? என்று திருப்பிக் கேட்டார் துறவி.

"மன்னரான நம்முடைய பதவி எப்படி பறிபோயிற்று? என்று ஆச்சரியப்பட்ட அரசர், "என்னை அடிமையாக்கி தாங்கள் எப்படி அரசரானீர்கள்?" என்று வியப்போடு வினவினார்.

"எனக்கு அடிமைகள் இருவர் இருக்கின்றனர்; ஆனால் அந்த இரு அடிமைகளும் உம்முடைய எஜமானர்களாக இருக்கின்றனர்; என்று பதிலளித்தார் இறைநேசச் செல்வர்.

"என்னுடைய எஜமானர்களா? யார் அவர்கள்?"

"இச்சையும், கோபமும்! இவ்விரண்டையும் நான் வசப்படுத்தி அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றேன். ஆனால் அந்த இரண்டுக்கும் இன்னும் நீர் அடிமையாக இருக்கின்றீர்!" என்று விளக்கம் கொடுத்தார் அத்துறவி

இதைக் கேட்டுக் கூட அரசன் கோபப்படலாம், சினந்து எழலாம். ஆனால் துறவிக்கு வேந்தன் துரும்பு தானே !

மனிதனை அவனுடைய உயர்ந்த பதவியிலிருந்து குப்புறத் தள்ளுவது அவனுடைய இச்சைகளும் ஆத்திர உணர்வும்தாம் என்பது புலனாகும். முதலில் இச்சைகளைப் பார்ப்போம்.

"இச்சையூட்டுபவற்றை நேசிப்பது மனிதர்களுக்கு மிகவும் அழகாக்கப்பட்டுள்ளது; பெண்களும் ஆண்மக்களும், பொன், வெள்ளி, ஆகியவற்றில் இருந்து மிகுதமான பெருங்குவியலும், அடையாளமிடப்பட்ட குதிரைகளும், (ஆடு, மாடு, ஒட்டகை) போன்ற கால்நடைகளும் வேளாண்மையும்தாம் (அத்தகு] இச்சைப் பொருள்கள். இவை சொற்பமான உலக வாழ்க்கையின் இன்பங்கள்தாம் - ஆனால் அல்லாஹ்வோ **#அவனிடம்தான்நித்தியமான**, அழகிய தங்கும் இடம் உள்ளது" குர்ஆன் (3: 14)

என்று திருமறை மனிதனின் இச்சைகளைக் கோடிட்டுக் காண்பிக்கிறது.

பிரபல எழுத்தாளரான மௌலானா மாயில் கைராபாதீ "அழகான ஓர் உருதுக் கவிதை இயற்றியுள்ளார்கள். அதில் உல்லாச வாழ்க்கையையே உயரிய இலட்சியமாகக் கொண்ட நவாப் ஸாஹிப் ஒருவர் வருகிறார். அவரை மகிழ்விப்பதற்கென்றே ஒரு திருக்கூட்டம் அவரைச் சுற்றி இருக்கிறது. கூத்துக்கும், கும்மாளத்துக்கும் போக எஞ்சியுள்ள நேரத்தை அவரை முகஸ்துதி செய்வதிலேயே இத்திருக் கூட்டம் செலவழிக்கிறது. இபாதத் , இறைவழிபாடு என்ற பேச்சுக்கே அங்கு இடமில்லை.

ஒரு நாள் இந்த நவாப் சாஹிபிடம் ஏழை கிராமவாசி ஒருவன் வந்தான்.

"ஹுஸூர்! எனக்கு ஏதாவது வேலை கொடுங்கள்!" என்று அவன் இறைஞ்சி நின்றான்.

"இதற்கு முன் எங்காவது வேலை செய்திருக்கிறாயா?" என்று கேட்டார் நவாப் சாஹிப்

"ஒண்ணா, ரெண்டா? சொல்லி முடியாது; அவ்வளவு இடங்களிலே வேலை செய்திருக்கிறேன்! ஆனால் எங்கேயும் வேலை நிலைக்கவில்லை!" என்று அந்த ஏழை அப்போது அங்கலாய்த்தான்.

ஏன் அப்படி?" என்று வினவினார் நவாப்.

"எல்லா இடத்திலேயும் என்னை 'முட்டாள் முட்டாள்'னு சுழிச்சிக் கட்டிட்டாங்க எசமான்!" என்று அவன் கண்ணீர் வடித்தான்.

நவாப் சாஹிபுக்கு இது பொழுதுபோக்குக்கு ஒரு புதுச் சாதனமாகப் பட்டது. இப்பட்டிக்காட்டான் தனக்கு ஒரு கேலிப் பொருளாக அமைவான் என்று அவர் எண்ணமிட்டார்.

ஒரு கைத் தடியை அவனிடம் கொடுத்து, "இதை எடுத்துக் கொண்டு போ, பகலெல்லாம் சுற்று! உன்னை விடப் பெரிய முட்டாள் எவனும் உன் கண்ணில் பட்டால், அவனிடம் கைத்தடியைக் கொடுத்து, அவனையும் கூட்டிக்கொண்டு வா!" என்று அந்த அப்பாவிக்கு ஒரு வேலையைக் கொடுத்தார் நவாப் சாஹிப்

அவனும் அதை உண்மை என்று நம்பி ஒவ்வொரு நாளும் பொழுது சாயும் வரை சுற்றிவிட்டு வந்து, என்னைவிடப் பெரிய முட்டாள் யாரும் அகப்படல்வே எசமான்" என்று சொல்வான்.

தவாப் சாஹிப் வயிறு குலுங்க குலுங்கச் சிரிப்பார்.

"போ... போ.. எப்படியும் உன்னை விட பெரிய முட்டாள் சிக்குவான் "

ஒரு நாள் அந்தி மயங்கும் நேரம் அவனை விட பெரிய முட்டாள் கிடைக்காமல் அவன் கைத்தடியுடன் வழக்கம்போல் திரும்பி வந்தான். நவாபின் மாளிகை அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. அவர் ஒரு பெரிய கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தார். அவருக்கு மூச்சுவாங்கிக் கொண்டிருந்தது. அவரைச் சுற்றிப் பெருங்கூட்டம் கண்ணீரும் கம்பலையுமாக நின்று கொண்டிருந்தது.

"எசமான்!" என்று அலறிக்கொண்டே அவர் அருகே வந்தான் அவன், "என்ன எசமான்? ஏன் இந்தக் கூட்டம்? உங்களுக்கு என்ன வந்தது?" என்று உருக்கத்தோடு விசாரித்தான்

உங்கள் எல்லோரையும் விட்டுப் போகப் போறேண்டா" என்று ஓர் ஏக்கப் பெருமூச்சோடு பதில் கொடுத்தார் நவாப் சாஹிப்

"தனியாகவா ? ஊஹூம் முடியாது. நானும் கூட வருவேன்" என்று அழுதான் அவன்.

இவனைப் பார்த்து மௌனமாகக் கண்ணீர் வடித்தார் நவாப் சாஹிப்

"முன்னாலே ஒரு தடவை பக்கத்து கிராமத்துக்குப் போகும்போது என்னையும் கூட்டிட்டு போனீங்களே, எசமான் ! இப்பவும் நான் உங்ககூட வருவேன்!" என்று அடம் பிடித்தான் அந்த அப்பாவி

"இது இறுதிப் பயணம்! இந்தப் பிரயாணத்திலே யாரும் கூடவர முடியாதுடா !" என்று வெதும்பினார் நவாப் சாஹிப்

"சரி போகட்டும்! பிரயாணம்னா பெட்டி, படுக்கை எல்லாம் எங்கே? நீங்க புறப்பட்டிராதீங்க எசமான். நான் போய் அதையெல்லாம் சரிப்படுத்தி வண்டிக்கு ஏற்பாடு செய்றேன்" என்றான்.

"ஹூஹூம்" என்று தலையசைத்தார் நவாப்.

அவனுக்கு ஒரே குழப்பமாக யிருந்தது. திடீரென்று ஞானம் பிறந்ததுபோல் அவன் முகத்தில் ஒரு மலர்ச்சி.

"ஓஹோ! அப்படீன்னா, முன்னாலே பெட்டிபடுக்கை யெல்லாம் அனுப்பிச்சிட்டீங்களா?" என்று அப்பேதை வினவினான்.

ஆவி பிரியப் போகும் நேரத்தை வினாடிக் கணக்கில் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நவாப் சாஹிப் பெரு மூச்சு விட்டார்.

"அப்படியும் செய்யல்லேடா? அந்தக் காலத்திலே நல்லவங்க சொன்னாங்க; நான் கேக்கல்லே! கேட்டிருந்தா இப்படிக் கலங்கமாட்டேன்! என்று திக்கித் திணறிப் பதில் கொடுத்தார் நவாப் சாஹிப்

"எசமான்! இது என்னவோ இறுதிப் பயணம் அப்படீன்னு சொல்றீங்க! அப்படீன்னா பெரிய பிரயாணமாகத்தான் இருக்கும் அதுக்கு நானும் பெட்டிபடுக்கை தயார் செய்ய வேண்டாம் அப்படீன்னு சொல்றீங்க. இதுக்கு முன்னாலேயும் பெட்டி, படுக்கை, சாப்பாடு எதையும் அனுப்பவும் இல்லை அப்படீங்கிறீங்க- நானே ஒரு ஊருக்குப் புறப்படறதுன்னா எவ்வளவு தயார் செய்வேன்.

எசமான், எசமான் இந்தக் கைத்தடியை வைத்து நானும் ஊரெல்லாம் தேடிக்கிட்டு இருக்கேன், என்னை விட பெரிய முட்டாளை கிடைக்கவில்லை ; பிரயாணத்திற்கு எந்தவித முன்னேற்பாடும் செய்யாத உங்களைதான், என்னை விடப் பெரிய முட்டாளாக் கண்டு பிடிச்சுட்டேன், அது நீங்கதான்; பிடிங்க கைத்தடியை!" என்று அவர் கையில் அதைக் கொடுத்தான்.

நம் கையில் கொடுப்பதற்கு ஒரு கைத்தடி எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கிறது !

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 12

(அல்லாஹ்வின் அருளில்லாமல் எதுவும் நடைபெறாது)



الرَّحْمَنِ الرَّحِيمِ

அளவற்ற அருளாளன்: நிகரற்ற அன்புடையோன்.

சகலவற்றையும், பரிபாலித்து இரட்சித்தல் என்ற செய்கையானது கிருபையில்லாவிட்டால் ஒரு போதும் நடைபெறாது. ஆகவே தான், இங்கு அர்ரஹ்மான் - "**#அளவற்றஅருளாளன்** " என்று அல்லாஹ் தன்னைக் குறிப்பிடுகிறான்.

உலகில் அவன் அடியார்கள் செய்யும் குற்றங்களுக்கும் பாபங்களுக்கும் அளவு கிடையா அவ்வாறிருந்துங்கூட அவர்கள் விஷயத்தில் அல்லாஹ் அளவற்ற அருளாளனாகவே இருந்து வருகிறான். அவர்கள் செய்யும் குற்றங்களைப் பொருட்படுத்தாமல் அவர்களை வளர்த்துப் போஷித்து சதாவும் அவர்களுக்குக் கிருபை புரிந்து கொண்டே வருகின்றான்.

"(மெய்யாக) எனது அருள் சர்வ பொருட்களின் மீதும் பரவியிருக்கின்றது" (7:156) என்று அவனே தனது திரு குர்ஆனில் தனது

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 13

فَتَلَقّٰٓى اٰدَمُ مِنْ رَّبِّهٖ كَلِمٰتٍ فَتَابَ عَلَيْهِ اِنَّهٗ هُوَ التَّوَّابُ الرَّحِيْمُ

அப்பால், ஆதம் தன் "ரப்பி டமிருந்து (பாவமன்னிப்புப் பிரார்த்தனைக்குரிய) வார்த்தைகளைப் பெற்றுக் கொண்டார். ஆகவே, (அவரின் பிரார்த்தனையினால்) அவரை (அல்லாஹ்) மன்னித்து விட்டான். நிச்சயமாக அவன்தான் மிகவும் மன்னிப்போனும் **#பேரன்புடையோனுமாக** இருக்கின்றான்.(குர்ஆன் : 2:37)

அல்லாஹுு தஆலா ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அந்த வார்த்தைகளை உதிக்கும்படிச் செய்தான் என்பதுதான்

فَتَلَقّٰٓى اٰدَمُ مِنْ رَّبِّهٖ كَلِمٰتٍ

ஆதம் தனது றப்பிலிருந்து சில சொற்களை கற்றுக் கொண்டார் என்பதன் கருத்தாகும்.

"எங்கள் றப்பே! எங்களுக்கு நாங்களே அநியாயம் செய்து கொண்டோம். இன்னும் எங்களுக்கு நீ பிழை பொறுத்து எங்களுக்கு கிருபை செய்யாவிடில் நாங்கள் நஷ்டவாளர்களில் உள்ளவர்களாகி விடுவோம்" என்பனவாகும். குர்ஆன் (7:23)

''ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முஹம்மதுடைய பொருட்டால் எனக்கு மன்னிப்புச் செய்தருள்" என்று அல்லாஹுு தஆலாவைக் கேட்டார்கள்.

அதற்கு அல்லாஹுு தஆலா ''முஹம்மதை நீர் எப்படி அறிந்தீர்?" என்று கேட்டான்.

அப்பொழுது ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "என்னை நீ படைத்து என்னில் நீ ஆன்மாவை ஊதியபோது எனது கண்ணை நான் திறந்தேன். அப்பொழுது அர்ஷின் தூணில் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி என்று எழுதப்பட்டிருந் ததைக் கண்டேன்.

ஆகவே, அவர் உன்னிடத்தில் சிருஷ்டிப் பொருள்களில் மிகவும் கண்ணியம் பெற்றவர் என்றும், அப்படி கண்ணியம் பெற்றிருப்பதினால்தான் உனது திருப்பெயருடன் அவரது பெயரையும் சேர்க்கப்பட்டு இருக்கிறது என்றும் தெரிந்து கொண்டேன்" என்று சொன்னார்.

அதற்கு அல்லாஹு தஆலா ''ஆம்'' என்று கூறினான். இன்னும் அவருடைய திருப்பெயரின் பொருட்டால் அவருக்குப் பிழைபொறுக்கப்பட்டது.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹு தஆலா விடத்தில் "இறைவர் நீ என்னை உனது கையால் படைக்கவில்லையா?" என்று கேட்டார். அதற்கு அவன் "ஆம்" என்றான். அப்பொழுது அவர் "நீ என்னை உன்னுடைய சொர்க்கத்தில் குடியிருக்கச் செய்யவில்லையா?" என்றார். அதற்கவன் "ஆம்" என்றான்.

பிறகு, அவர் "உன்னுடைய ரஹ்மத் தென்னும் கிருபை உன்னுடைய கோபத்தைப் பார்க்கினும் முந்தவில்லையா?" என்று கேட்டார். அதற்கவன் "ஆம்" என்றான். அப்பொழுது அவர் "நான் தவ்பாச் செய்து மீண்டால் என்னை இனியும் சுவர்க்கத்தில் மீளவைப்பாயா?" என்று கேட்டார். அதற்கவன் "ஆம்" என்றான். அப்பொழுது ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தவ்பாச் செய்தார்கள்.

தவ்பா என்ற பதம் தவ்பு என்பதைச் சேர்ந்தது. தவ்பு என்பதற்கு "மீளுதல்" என்பது பொருள். ஆகவே, அல்லாஹு தஆலாவுடன் இந்தப் பதத்தைச் சேர்த்துச் சொல்லும்போது அல்லாஹு தஆலா வேதனை செய்வதை விட்டு மன்னிப்புச் செய்வதன்பால் மீண்டான் என்று கருத்துக் கொள்ள வேண்டும்.

அடியார்கள்பால் இந்தப் பதத்தைச் சேர்க்கும் போது "பாவத்தை விட்டு வழிபடுவதன்பால் மீண்டார்" என்று கருத்துக் கொள்ள வேண்டும். இந்த இடத்தில் அல்லாஹு தஆலா தவ்பாவை ஒப்புக் கொண்டான் என்பதற்கு "அவர்பால் அல்லாஹு தஆலா கிருபையைக் கொண்டு மீண்டு, அவருடைய மன்னிப்பை ஏற்றுக் கொண்டான்" என்பது கருத்து.

التَّوَّابُ الرَّحِيمُ

அத்தவ்வாபுர் ரஹீம் என்று இரண்டு வார்த்தைகளையும் இந்த இடத்தில் ஒன்று சேர்த்துக் கூறி இருப்பதானது மன்னிப்புச் செய்து பிழைபொறுத்தல் என்ற விஷயத்தில் அல்லாஹு தஆலா மிகவும் தாராளமானவன் என்பதைப் பாவிகளுக்கு வாக்களித்திருக்கிறான் என்பது கருத்து.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்களும் சுவர்க்கத்துடைய நிஅமத்து (அருட்கொடை) கள் தவறிப் போனதற்காக 200 வருடகாலம்

அழுதார்கள். நாற்பது நாள்வரை அவ்விருவரும் சாப்பிடவுமில்லை தண்ணீர் அருந்தவுமில்லை.

நூறு வருட காலம் வரை ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்களும் பிரிந்திருந்தார்கள் என்று ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பூமிக்கு இறக்கப்பட்டதிலிருந்து 300 வருட காலம் வரை தமது தலையை உயர்த்தாமல் இருந்தார்கள். என்று தமக்குத் தெரிய வருவதாக ஹளரத் ஷஹ்ருப்னு ஹுஷப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

பூமியில் உள்ளவர்கள் அனைவருடைய கண்ணீரையும் ஒன்று சேர்த்தாலும் ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களது கண்ணீர்தான் அதிகமாக இருக்கும் என்றும், ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களது கண்ணீரையும் பூமியிலுள்ளவர்களின் கண்ணீரையும் ஒன்று சேர்த்தாலும் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது கண்ணீர்தான் அதிகமாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

சிறு பாவமாகக் கூட இல்லாமல் தவறு செய்து விட்டவரின் நிலை இப்படி இருந்தால் பாவக் கடலிலேயே மூழ்கி இருப்பவரின் நிலை என்னவாகும்? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

தவிரவும், தவ்பா சோப்புடைய அந்தஸ்தில் இருக்கிறது. சோப்பு புற அழுக்கை அகற்றுவதுபோல தவ்பா அக அழுக்கை அகற்றுகிறது. ஆகவே, அடியான் தனது பாவத்தை விட்டு மீண்டு, தனது செயல்களைத் திருத்திக் கொண்டால், அல்லாஹு தஆலா அவருடைய அந்தஸ்தையும் சீர்திருத்தி, அவரிடமிருந்து தவறிப் போன அருட்கொடையையும் மீண்டும் கொடுக்கிறான்

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 14

وَاِذْ قَالَ مُوْسٰى لِقَوْمِهٖ يٰقَوْمِ اِنَّكُمْ ظَلَمْتُمْ اَنْفُسَكُمْ بِاتِّخَاذِكُمُ الْعِجْلَ فَتُوْبُوْآ اِلٰى بَارِٕكُمْ فَاقْتُلُوْٓا اَنْفُسَكُمْ ذٰلِكُمْ خَيْرٌ لَّـكُمْ عِنْدَ بَارِٕكُمْ فَتَابَ عَلَيْكُمْ اِنَّهٗ هُوَ التَّوَّابُ الرَّحِيْمُ

மூஸா தம் சமூகத்தாரை நோக்கி; “என் சமூகத்தாரே! நீங்கள் காளைக் கன்றை(வணக்கத்திற்காக) எடுத்துக் கொண்டதன் மூலம் உங்களுக்கு நீங்களே அக்கிரமம் செய்து கொண்டீர்கள்; ஆகவே, உங்களைப் படைத்தவனிடம் பாவமன்னிப்புக் கோருங்கள்; உங்களை நீங்களே மாய்த்துக் கொள்ளுங்கள்; அதுவே உங்களைப் படைத்தவனிடம், உங்களுக்கு நற்பலன் அளிப்பதாகும்” எனக் கூறினார்.

(அவ்வாறே நீங்கள் செய்ததனால்) அவன் உங்களை மன்னித்தான் (என்பதையும் நினைவு கூறுங்கள்.) நிச்சயமாக, அவன் தவ்பாவை ஏற்(று மன்னிப்)பவனாகவும், பெருங் **#கருணையுடையோனாகவும்** இருக்கிறான். (குர்ஆன் : 2:54)

மூஸா நபி அவர்கள் 'தூர்' மலையிலிருந்து திரும்பி வந்ததும் இஸ்ரவேல் மக்களின் தவறான நிலை கண்டு மனவேதனை அடைந்தது .அப்பால் அவர்கள் கூட்டத்தினரை நிந்தித்துவிட்டு மன்னிப்புப் பெறுவதற்குரிய மார்க்கத்தை தெரிவித்த செய்தி இந்த வசனத்தில் கூறப்படுகிறது.

என் கூட்டத்தினரே! நீங்கள் உங்களுக்கே ஒரு பெரிய அநியாயத்தைச் செய்து கொண்டீர்கள் உங்களை உண்மையிலேயே படைத்து இரட்சித்து வருகிற அல்லாஹ்வினிடம் உடனே மன்னிப்பு கோருங்கள். குற்றவாளிகளான நீங்கள் ஒருவரை ஒருவர் வெட்டிக் கொள்வதுதான் பாவத்திற்கு பரிகாரமாகும் என்ற கருத்தை மூஸா நபி (அலை) தெரிவித்தார்கள்.

மூஸா நபி அவர்கள் உத்தரவிற்கிணங்க அக்கூட்டத்தினர் செய்ததாயும் அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் வரை கொல்லப்பட்டதாயும் பழைய ஏற்பாடு யாத்திராகமம் 32-ம் அதிகாரம் 27 முதல் 29 வசனங்களில் கூறப்பட்டுள்ளது.

யாத்திராகமம் – அதிகாரம் 32

"27 அவன் அவர்களை நோக்கி: உங்களில் ஒவ்வொருவனும் தன் பட்டயத்தைத் தன் அரையிலே கட்டிக்கொண்டு, பாளயமெங்கும் உள்ளும் புறம்பும் வாசலுக்கு வாசல் போய், ஒவ்வொருவனும் தன்தன் சகோதரனையும் ஒவ்வொருவனும் தன்தன் சிநேகிதனையும் ஒவ்வொருவனும் தன்தன் அயலானையும் கொன்றுபோடக்கடவன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

28 லேவியின் புத்திரர் மோசே சொன்னபடியே செய்தார்கள்; அந்நாளில் ஜனங்களில் ஏறக்குறைய மூவாயிரம் பேர் விழுந்தார்கள்.

29 கர்த்தர் இன்றைக்கு உங்களுக்கு ஆசீர்வாதம் அளிக்கும்படி, இன்றைக்கு நீங்கள் அவனவன் தன்தன் மகனுக்கும் சகோதரனுக்கும் விரோதமாயிருக்கிறதினால், கர்த்தருக்கு உங்களைப் பிரதிஷ்டை பண்ணுங்கள் என்று மோசே சொல்லியிருந்தான்.

முடிவில் மூஸா நபிக்குத் தங்கள் கூட்டத்தினர் மீது இரக்கம் பிறந்தது. அக்கூட்டத்தினரை மன்னிக்குமாறு அல்லாஹ்விடம் மனமுருகிக் கேட்டுக் கொண்டார்கள். அல்லாஹ் அவர்களை மன்னித்தான், மெய்யாக, அவன் மிக்க மன்னிக்கிறவன்; நிகரற்ற அன்புடையவன்.

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 15

ثُمَّ تَوَلَّيْتُمْ مِّنْ بَعْدِ ذٰلِكَ فَلَوْلَا فَضْلُ اللّٰهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهٗ لَـكُنْتُمْ مِّنَ الْخٰسِرِيْنَ

பின்பு, நீங்கள் அதன் பிறகும் (வேதக் கட்டளைப்படி நடக்காமல்) புறக்கணித்து விட்டீர்கள். ஆயினும் உங்கள்பால் அல்லாஹ்வின் கிருபையும் அவனின் **#அன்புக்கருணையும்** இல்லாதிருப்பின் நீங்கள் நஷ்டமடைந்தவர்களிலாகி இருப்பீர்கள். குர்ஆன் 2:64

تَوَلَّيْتُمْ

"நீங்கள் புறக்கணித்து விட்டீர்கள்" என்பதற்கு நீங்கள் அந்த வாக்குறுதியின்படி நடக்காமல் பின்வாங்கி விட்டீர்கள், நீங்கள் செய்த வாக்குறுதியின்படி தொடர்ந்து நடக்கவில்லை என்பது கருத்து.

அல்லாஹு தஆலாவுக்கு பனீ இஸ்ராயீல்கள் செய்த வாக்குறுதிக்கு மாறாக அவர்கள் நடந்தபோது உடனே அவர்களுக்கு அவன் வேதனையை அனுப்பாமல் தாமதம் செய்து, அவர்கள் திரும்பவும் ஒழுங்காக நடந்து கொள்வதற்குத் தவணையும் கொடுத்தான்.

இவ்வாறு தாமதம் செய்து தவணை கொடுத்ததை இறைவன் இந்த இடத்தில் அல்லாஹ்வின் கருணை என்றும் அவனது கிருபை என்றும் கூறி இருக்கிறான்.

الْخٰسِرِيْنَ

" காஸிரீன் " என்பது குஸ்ரான் என்பதிலிருந்து உண்டானது. குஸ்ரான் என்பது அசல் மூலதனம் ஒழிந்து போவதற்குச் சொல்லப்படுகிறது. அதாவது வியாபாரத்தில் போட்ட முதலீடு குறைந்து, இல்லாமல் போனால், அதற்கு குஸ்ரான் என்று பெயர். ஆனால், இவ்விடத்தில் நஃப்ஸு (உடலும் உயிரும் உள்ள ஜீவன்) அழிந்து போகுதல் என்பதற்கு இப்பதம் சொல்லப்பட்டிருக்கிறது.

தவிர, அல்லாஹு தஆலா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்திற்கு இவ்விஷயத்தில் பெரும் கிருபை செய்திருக்கிறான்.

எவ்வாறெனில் உம்மத்தே முஹம்மதிய்யாவிடம் எல்லா ஃபர்லுகளையும் விலக்கல்களையும் ஒரே சமயத்தில் விதியாக்காமல் ஒன்றன்பின் ஒன்றாகவே விதியாக்கினான்.

ஒரு ஃபர்லை முதலில் விதித்து அதனை நமது உம்மத்துகள் கடைப்பிடித்து ஒழுகும்படி செய்தபின் மற்றொரு ஃபர்லை விதித்தான். இவ்விதமாகவே இஸ்லாம் மார்க்கத்திலுள்ள ஃபர்லுகள் ஒன்றன்பின் ஒன்றாக ஆதியில் விதிக்கப்பட்டன.

ஆனால் பனீ இஸ்ராயீல்களுக்கு அவ்வாறில்லை. அவர்கள் மீது எல்லா ஏவல் விலக்கல்களையும் ஒரே முறையில் விதித்தான். இதனால் அவர்களுக்கு அவைகள் கஷ்டமாகத் தோன்றி அதனை ஒப்புக் கொள்ள மறுத்தார்கள். அதன் காரணமாக அவர்களின் தலைக்கு மேலில் தூர் ஸினா மலையை உயர்த்தி அவர்கள் ஒப்புக் கொள்ளும்படி செய்ய வேண்டியதாயிற்று.

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 16

(முன்னறிவிப்புச் செய்யப்பட்ட நன்னபி)

رَبَّنَا وَاجْعَلْنَا مُسْلِمَيْنِ لَكَ وَ مِنْ ذُرِّيَّتِنَا أُمَّةً مُسْلِمَةً لَّكَ وَأَرِنَا مَنَاسِكَنَا وَتُبْ عَلَيْنَا إِنَّكَ أَنْتَ التَّوَّابُ الرَّحِيْمُ

எங்கள் இறைவனே! எங்களிருவரையும் உனக்கு (முற்றிலும்) வழிப்படும் முஸ்லிம்களாகவும், எங்களுடைய சந்ததியிலிருந்தும் ஒரு கூட்டத்தினரை உனக்கு (முற்றிலும்) வழிப்படும் முஸ்லிம்களாகவும் ஆக்கிவைப்பாயாக! ("ஹஜ்ஜு" காலத்தில்) நாங்கள் புரிய வேண்டிய வணக்கங்களையும் அறிவிப்பாயாக! (நாங்கள் தவறிழைத்து விட்டாலும்) எங்களை நீ மன்னிப்பாயாக! நிச்சயமாக நீதான் மிக மன்னிப்பவனும், நிகரற்ற **#அன்புடையவனுமாக** இருக்கின்றாய். (குர்ஆன் : 2:128)

ஹஜரத் இப்ராஹிம் இஸ்மாயில் அலை ஆகிய இருவரும் திரு கோபாவை கட்டி முடித்த பின்னர் மனமுருகி இறைவனிடம் கேட்டவை மேற்கண்ட வசனத்தில் கூறப்படுகிறது

''இறைவா' எங்களது இத்திருப்பணியை ஏற்றருள்வாயாக, நாவினால் நாங்கள் இறைஞ்சுவதை நீ நன்கு செவியுறுகிறவன், உள்ளங்களில் உதயமாகும் எங்கள் எண்ணங்களை நீ நன்கறிகிறவன். இரட்சகனோ எங்கள் இருவரையும் உனக்கு முற்ற முற்ற வழிப்பட்டவர்களாகவும் எங்கள் சந்ததியிலிருந்து உனக்கு வழிபடுகிற கூட்டத்தினரையும் ஆக்கியருள்.

நீ பொருந்தாத செயல் எங்களின் மூலம் சில சமயம் ஏற்பட்டாலும் அதனை மன்னித்தருள். திரு கஃபா தேவாலயத்திற்கு வந்து ஹஜ்ஜின் பெயரால் நாங்கள் செய்ய வேண்டிய வணக்கங்களை எங்களுக்கு அறிவித்தருள். அவ்வணக்கங்களைச் செய்ய வேண்டிய புனிதத் தலங்களையும் எங்களுக்குக் காட்டியருள். அவற்றிற்கிணங்கி நாங்கள் வணக்கம் புரியச் சித்தமாக இருக்கின்றோம்.

மனித உணர்ச்சி மேலிட்டு உனது கட்டளைக்கு நாங்கள் மாறு செய்தால் எங்கள் மீது இரக்கம் கொண்டு அதை மன்னித்தருள். நீ தான் மிக்க மன்னிக்கிறவன்; நிகரற்ற அன்புடையோன் என்பது இவ்வசனத்தின் கருத்தாகும்.

தம் சந்ததியில் சற்குணங்கள் நிரம்பிய உலகத் திருத்தூதர் தோன்ற வேண்டுமென்று ஹஜ்ரத் இப்ராஹீம் நபிக்கு விருப்பம் இருந்தது. அவ்விருப்பத்தை இறைவனிடம் கூறி அத்தகைய ஒரு தூதரைத் தம் சந்ததியிலிருந்து எழச் செய்யுமாறு அவர்கள் கோரிக் கொண்ட பிரார்த்தனை அடுத்த வசனத்தில் விபரிக்கப்படுகிறது.

எங்கள் இரட்சகனே! (என் சந்ததியினரான) அவர்களிலிருந்து ஒரு தூதரை அவர்களில் எழச் செய்வாயாக. அத்தூது)வர் உன் வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பிப்பார். மேலும் வேதத்தையும் ஞானத்தையும் அவர்களுக்குக் கற்பிப்பார். அவர்களைப் பரிசுத்தமாக்கவும் செய்வார். மெய்யாக, நீயோ (யாவற்றையும்) மிகைத்தவன்; தீட்சண்ய ஞானமுடையவன். (குர்ஆன் 2:129)

இப்பிரார்த்தனையின் மூலம் இப்ராஹீம் நபியவர்கள் விரும்பிய இலக்கணங்களையுடையவர் இறுதி நபியாம் எம்பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் தாம் ஏன்பதில் ஐயத்திற்கிடமில்லை.

ஏனெனில், இப்பிரார்த்தனையை செய்பவர்கள் இப்ராஹீம் (அலை) அவர்களும் இஸ்மாயீல் (அலை) அவர்களுமாவர். இவ்விருவர் மூலம் ஏற்பட்ட சந்ததிகளில் எம்பெருமானார் (ஸல்) அவர்களைத் தவிர்த்து வேதம் வழங்கப்பட்ட வேறு எந்தத் தூதுவரும் தோன்றவில்லை.

இதர நபிமார்கள் அனைவரும் இப்ராஹீம், இஸ்ஹாக் (அலைஹிமா) ஆகியோர் மூலம் தோன்றியவர்களாவர் இது பற்றிப் பெருமானார் (ஸல்) அவர்கள் விளக்குகையில்,

"நான் எனது ஆதித்தோன்றல் பற்றி உங்களுக்கு அறிவிக்கின்றேன்: நான் இப்ராஹீமின் பிரார்த்தனையால் தோன்றியவன் அவர் இத்திரு வீட்டின் அஸ்திவாரங்களை உயர்த்திக் கட்டியபொழுது எங்கள் ரட்சகனே! அவர்களிலிருந்து ஒரு தூதுவரை அவர்களில் நீ எழச் செய்வாயாக என்று பிரார்த்தித்தார்.

மேலும் நான் ஈஸா நபியால் முன்னறிவிப்புச் செய்யப்பட்டவன், தவிர என் அன்னை, என்னை ஈன்ற சமயம் கண்ணுற்ற கனவின் கருத்தானவன்; தம்மிலிருந்து ஒரு ஒளி வெளிப்பட்டு ஷாம் தேசத்தின் மாளிகைகளை ஒளிவாக்கியதை என் அன்னை கண்டார்கள்' என்று அறிவித்தார்கள்.

(அறிவிப்பவர்: ஹஜ்ரத் இர்பாலு (ரலி) நூல்: முஸ்னத் இமாம் அஹ்மத்)

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 17

(அறிவை மறைப்பவன்)



اِلَّا الَّذِيْنَ تَابُوْا وَاَصْلَحُوْا وَبَيَّنُوْا فَاُولٰٓٮِٕكَ اَ تُوْبُ عَلَيْهِمْ وَاَنَا التَّوَّابُ الرَّحِيْمُ

நிச்சயமாகத் தெளிவானவைகளையும், நேர் வழியையும் நாம் இறக்கி, அவற்றை மனிதர்களுக்காக வேதத்தில் நாம் விளக்கிய பின்னரும். எவர்கள் அவற்றை மறைக்கின்றனரோ அவர்களையே அல்லாஹ் சபிக்கின்றான். சபிப்பவர்களும் அவர்களைச் சபிக்கின்றனர். (குர்ஆன் 2:159)

انَّ الَّذِينَ يَكْتُمُونَ مَا أَنزَلْنَا مِنَ البيتِ وَالْهُدَى مِنْ بَعْدِ مَا بيْنَهُ لِلنَّاسِ فِي الكتب أوليك يلْعَهُمُ اللَّهُ وَيَلْعَهُمُ اللعِنونَ إِلَّا الَّذِينَ تَابُوا وَ أَصْلَحُوا وَ بَيِّنُوا فأُولَيْكَ أَتُوبُ عَلَيْهِمْ وَأَنَا التَّوَّابُ الرَّحِيمُ

ஆனால், எவர்கள் (மறைத்த குற்றத்திற்காக) மன்னிப்புக்கோரி (தங்கள் தவறுகளைத்) திருத்தியுங் கொண்டு (பொது மக்களுக்கு) விளக்கவும் செய்தார்களோ, அப்பொழுது அவர்களை நானும் மன்னிக்கிறேன் - நானோ மிக்க மன்னிக்கிறவன், **#நிகரற்றஅன்புடையவன்** (குர்ஆன் 2:160)

"முஆது பின் ஜபல், ஸஅது பின் முஆது, காரிஜத் பின் ஜைது (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகிய பெருமானார் (ஸல்) அவர்களின் நேயர்கள், யூதப் பண்டிதர்களின் ஒரு குழுவிடம் தவ்ராத் வேதத்தின் சில பிரிவுகள் பற்றி விளக்கம் கோரினர், அவர்கள்

அவற்றை மறைத்து விளக்கிக் கூற மறுத்து விட்டனர். அச்சமயமே இவ்வசனங்கள் இறக்கப்பட்டன” என்று ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

தெளிவான வசனங்களையும் பொதுமக்களுக்கு நேர்வழி காட்டும் நல்ல உரைகளையும் அல்லாஹ் இறக்கியருளி சிலருக்கு அவற்றை நன்கு விளக்கி வைத்து மற்றையோருக்கும் எடுத்துரைக்குமாறு கட்டளையிட்டிருக்கிறான்.

ஆகவே, அவற்றை மறைப்போர் மகாபாவிகளாவர். தன் கட்டளைக்கு மாறு செய்யும் அவர்களை அல்லாஹ் சபிக்கின்றான். சபிப்பவர்களான வானவர்களும், மனிதர்களும் அன்னோரைச் சபிக்கின்றனர்."

"ஆனால் அவ்வாறு மறைத்தோர் தங்கள் தவறுகளை உணர்ந்து வருந்தி மன்னிப்புக் கோரி, தாங்களும் திருந்தி மற்றையோரையும் திருத்தி அல்லாஹ் விளக்கியதை மறைக்காமல் மற்றையோருக்கும் விளக்கிக் காட்டினால், அவர்களை அல்லாஹ் மன்னிக்கின்றான். தம் தவறை உணர்ந்து மன்னிப்பு கோருவோருக்கு அவன் மிக்க மன்னிக்கிறவன், அத்துடன் அளவற்றுக் கிருபையும் செய்கிறவன்" என்பது இவ்வசனங்களின் கருத்தாகும்.

அறிவை மறைப்பவன் சபிக்கப்படுகின்றான்

அறிவானது உலகோர் அனைவருக்கும் பொதுவானதாகும். அது ஒரு குறிப்பிட்டவருக்கு மட்டும் சொந்தமான பரம்பரைச் சொத்தல்ல. அவ்வாறு சொந்தம் பாராட்டி, அதனைக் கற்க, படிக்க விடாமல் பிறரைத் தடுப்போன் சாபக்கேட்டிற்கே உள்ளாகின்றான். அவனை அல்லாஹ் வெறுத்துச் சபிக்கின்றான். மனித சமுதாயம் அவனை வெறுத்து ஒதுக்குகிறது.

அவ்வாறே அறிவைத் தெரிந்தவன், பிறர் தெரிய விடாமல் மறைப்பது மாபாதகச் செயலாகும். ஒருவன் மட்டும் அதனைத் தெரிந்து வைத்துக் கொண்டு கேட்போருக்கு விளக்காமல் மறைக்கிறவன் வடிகட்டின சுயநலமியாகின்றான். தனது உலக ஆதாயத்தைப் பெருக்கிக் கொள்ளும் நோக்குடன் பொதுவான ஒன்றைக் குறுகிய புத்தியுடன் தன்னுள் மறைக்கப் பார்க்கின்றான். இத்தகையவனை அறிஞன் என்று கூறுவதை விட அறிவிலி என்று கூறுவதுதான் பொருத்தமாகும்.

ஏனென்றால் இவனது அறிவினால் மனித சமுதாயத்திற்கு எவ்விதப் பயனும் கிடையாது. இதனால் தான்,"ஒருவனிடம் ஒரு அறிவு பற்றிக் கேட்க, அவன் அதனைத் தெரிந்திருந்தும் மறைத்தானானால், இறுதி நாளில் அவன் நெருப்பினால் கடிவாள மிடப்பட்டவனாக வருவான்" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

(அறிவிப்பவர்: ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி)

அவன் அருளாளன் நல்ல அன்பாளன் 18

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِىْ يُحْبِبْكُمُ اللّٰهُ وَيَغْفِرْ لَـكُمْ ذُنُوْبَكُمْ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ



(நபியே! அனைவருக்கும்) நீர் கூறுவீராக: நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால், அப்பொழுது என்னைப் பின்பற்றுங்கள். உங்களை அல்லாஹ் நேசிப்பான். உங்களுக்கு உங்கள் பாவங்களையும் மன்னிப்பான். மேலும் அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன். **#நிகரற்றஅன்புடையவன்**. (குர்ஆன் 3:31)

இறக்கப்பட்ட வரலாறு

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் காலத்தில் பலவிதக் கொள்கைகளைக் கொண்ட கூட்டத்தினர் இருந்தனர். அத்தனை பேரும் அல்லாஹ்வை நேசிப்பதாகவே வாதித்தார்கள்.

குறைஷிக் கூட்டத்தார் ஒருநாள் தங்கள் சிலைகளை நன்கு அலங்கரித்து, அவைகளை வணங்கினர். இதைக் கண்ணுற்ற பெருமானார் (ஸல்) அவர்கள், அக் கூட்டத்தினரிடம், "நீங்கள் இப்ராஹீம் நபியின் சந்ததியினர் எனக் கூறிக் கொண்டு, அவருடைய மார்க்கத்திற்கு விரோதமாக விக்கிரக ஆராதனை செய்கிறீர்களே" என்று கேட்டார்கள்.

"இவற்றை அல்லாஹ்விடம் மிக நெருக்கமானவை என்று நாங்கள் விசுவாசங் கொண்டு அல்லாஹ்வின்பால் நாங்கள் கொண்டுள்ள அன்பால் இவற்றை வணங்குகின்றோம்" என்று அக்குறைஷியர் கூறினர். (காஜின், ரூஹுல்மஆனி}

இவ்வாறே நஜ்ரான் மாகாணத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் "நாங்கள் கிறிஸ்துவை (ஈஸாவை இறைவன் என்று கூறி) கண்ணியப்படுத்துவது அல்லாஹ்வின் மீது கொண்டுள்ள அன்பினாலும் அவனைக் கண்ணியப்படுத்தும் பொருட்டுமேயாகும்" என்று வாதித்துக் கொண்டிருந்தார்கள்.

இவர்களனைவருக்கும் மறுப்பாகவும், உண்மையான அன்பு யாரிடத்தில் உள்ளது என்பதை உலகோருக்கு விளக்கவுமே இவ்வசனம் இறக்கியருளப்பட்டது. (அறிவிப்பவர்: ஹஜ்ரத் ஹஸன் பஸரீ (ரஹ்) நூல் தப்ஸீர் இப்னு முன்திர்)

உங்கள் எண்ணப்பிரகாரம் நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால், அப்பொழுது என்னையே நீங்கள் பின்பற்றுங்கள். உங்களை அல்லாஹ் நேசிப்பான் என்று நபியே! நீர் அனைத்துலகினருக்கும் கூறும்.

ஏனெனில் உறுதியான ஆதாரங்கள் மூலமும் சந்தேகமில்லா அற்புதங்கள் வாயிலாகவும் உமக்கு அருளப்பட்ட நபித்துவம் உறுதியடைந்துள்ளது. ஆகையினால் சகல மாந்தர்களும் உம்மை நபியென்று ஏற்று பின் தொடர்வது அவர்களுடைய தலையாயக் கடனாகும்.

"அல்லாஹ்வை நேசிப்பதாக நீங்கள் வாதிப்பதில் உண்மையாளர்களாக இருப்பின், அவன் கட்டளைகளுக்கு நீங்கள் தலைசாய்க்க வேண்டும்.

அவனுக்கு உண்மையிலேயே நீங்கள் கீழ்ப்படிந்தவர்களாயின், அப்பொழுது என்னை நீங்கள் பின்பற்றி என் வழி நடக்க வேண்டும். இம்முறையில் என்னைப் பின்பற்றுவது அல்லாஹ்வின் மீது அன்பு கொண்டு அவனை வழிபடுவதாகும்"என்பது இவ்வசனத்தின் கருத்து.

அல்லாஹ்வை கண்ணியப்படுத்த வேண்டும். அவனுக்கு எதையும் இணை வைத்தல் கூடாது; அவன் கட்டளைகளுக்கு உட்பட்டு அவன் ஏவிய பிரகாரம் நடந்து விலக்கியதை தவிர்க்க வேண்டும். இதுதான் அல்லாஹ்வை நேசித்தல் என்பதற்குரிய தத்துவப் பொருளாகும்.

இம்முறையில் நேசிக்கிற தன் அடியாரை அல்லாஹ் நேசிக்கிறான். அத்தகையோரைப் போற்றிப் பொருந்துவதும் அவருக்கு நற்கூலி வழங்கிப் பாவங்களை மன்னிப்பதும் அல்லாஹ்வின் நேசத்திற்குரிய அடையாளங்கள்.

எல்லாவற்றையும் விட அவனது மன்னிப்பை பெறுதல் மிகப் பெரிய பாக்கியமாகும். இதனைக் குறித்தே இவ்வசனத்தின் இறுதியில் 'உங்களுக்கு உங்கள் பாவங்களையும் மன்னிப்பான். அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; நிகரற்ற அன்புடையோன்' எனக் கூறப்படுகிறது.

எந்த ஒருவரை அல்லாஹ் மன்னிக்கிறானோ அவரை அவன் வேதனைக்குள்ளாக்குவதில்லை. தனது கிருபையால் அவரை அணைத்து உயர்ந்த இடத்தை அவருக்கு வழங்குகின்றான்.

இவ்வசனம் இறக்கப்பட்டதும் மதீனா வாழ் நயவஞ்சகர்களின் தலைவன் அப்துல்லாஹ்பின் உபைய்யி என்பான், தன் கூட்டத்தினரிடம், "முஹம்மது தமக்குக் கீழ்படிவதை அல்லாஹ்விற்குக் கீழ்படிவது போன்றாக்கி, கிறிஸ்தவர்கள் ஈஸாவை (இயேசுவை) நேசிப்பது போல் நாமும் அவரை (முஹம்மதை) நேசிக்க வேண்டும் என்று நமக்குக் கட்டளையிடுகிறார்" என்று கூறினான். (ரூஹுல் மஆனீ, காஜின்)

இதற்குப் பதிலாக இறைவன் தன் நபியின் மூலம்,

அல்லாஹ்வுக்கும் (அவனுடைய)தூதருக்கும் நீங்கள் வழிப்படுங்கள் எனவே (இம்முறையில் வழிப்படாமல்) அவர்கள் புறக்கணித்தார்களேயானால், அப்பொழுது (புறக்கணித்து) நிராகரித்துக் கொண்டிருப்போரை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை எனக் கூறிவிடும் என்று அறிவித்தான் (குர்ஆன் 3:32)

அல்லாஹ்வுக்கு வழிப்படுவதென்பது அவனுடைய தூதருக்கு வழிப்படுவதின் மீதே அமைந்துள்ளது. ஆகவே அத்தூதருக்கு மாறு செய்து கொண்டு அல்லாஹ்வுக்கு வழிப்படுவதாக வாதிப்பது பூரணத்துவம் அடையாத ஒன்றாகும்.

என் தூதர் முஹம்மது(ஸல்) அவர்களுக்கு நீங்கள் வழிப்படுவது எனக்கு வழிப்படுவதாகும்; என் தூதருக்கு நீங்கள் விரோதம் செய்து கொண்டு எனக்கு வழிப்படுவதை நான் ஏற்கவே மாட்டேன்' என்பது இவ்வசனத்தின் பொதுக் கருத்து என விரிவுரையாளர்களின் முதல்வர் ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இம்முறைப்படி வழிப்படாதவர்கள் அல்லாஹ்வைப் புறக்கணித்து நிராகரித்தவர்களாகின்றனர். ஏனெனில், இப்படித்தாள் வழிப்பட வேண்டும் என அல்லாஹ் அறிவித்திருக்க, அதற்குத் தலை சாய்க்காமல் அவன் தூதரைப் புறக்கணிப்போர் அல்லாஹ்வின் உத்தரவைப் புறக்கணித்தவராவர்.

அவ்வாறு புறக்கணிப்போர்தாம் நிராகரித்துக் கொண்டிருப்போராக காபிர்கள் ஆகின்றனர் அல்லாஹ் நிராகரித்துக் கொண்டிருப்போரை நிச்சயமாக நேசிப்பதில்லை; அவர்களை அவன் மன்னிப்பதுமில்லை; அவர்களை அவன் பொருந்தவுமாட்டான்.

"என் கூட்டத்தினர் அனைவரும் சுவர்க்கம் நுழைவர், மறுப்பவரைத் தவிர்த்து" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிய பொழுது, மறுப்பவர் யாவர்" என அவர்களிடம் கேட்கப்பட்டது.

"எனக்கு வழிப்பட்டவன் (அல்லாஹ்வுக்கு நிச்சயமாக வழிப்பட்டவனாவான். ஆகையால்) நிச்சயமாக சுவர்க்கம் நுழைவான். எனக்கு மாறுபாடு செய்தவன் நிச்சயமாக (சுவர்க்கம் வேண்டாம் என) மறுத்தவனாவான்" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் பதிலிறுத்தார்கள். (அல்ஹதீது, அறிவிப்பவர்: ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) நூல்: புகாரி)